DR. ILLANGO & ASSOCIATES

SCARBOROUGH பற் சிகிச்சை நிலையம்
3852 Finch Ave. East, Unit 204 & 303
டாக்டர் எம். இளங்கோ
(416) 292-7004

BRACE FOR A GREAT SMILE

MISSISSAUGA பற் சிகிச்சை நிலையம்
3025 Hurontario St., # 102
டாக்டர் இ. ஜானகி
(905) 270-7844

SAMY & SONS
1884B Kennedy Rd. (at Ellesmere) Scarborough
- புத்தம் புதிய ஆடை வகைகள்
- சுடிதார் சாறி வகைகள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- அலங்காரப் பொருட்கள்
- 22 கரட் தங்க நகைகள்
- துரித பணமாற்றுச் சேவை
- வீடியோ, ஒடியோ, பிரதிமாற்றம்

இன்னும் எழுத்திலடங்காதன
மொன்றியல் சுமித் தொடர்புகளிற்கு
குகன் 514-736-6228
TEL: 416-298-1598 FAX: 416-298-2849

டாக்டர் சண்முகம் சிவநேசன்
குடும்ப பல்வைத்தியர்
Tel: 416-291-1085

டாக்டர் பகீரதன் (பகி)
குடும்ப பல்வைத்தியர்
Tel: 416-728-0345

3852 Finch Ave. East, #207, Scarborough, Ont. (Between Birchmount & Kennedy

Neelam Silk
தற்பொழுது இரு இடங்களில்
1453 Gerrard St. East, Toronto
Tel: 416-778-7455
2378 Eglinton Ave. East., Scarborough
Tel: 416-759-2002
(Kennedy Rd. & Eglinton Ave.) சந்திப்பில்
www.neelamsilk.com

INCOME TAX
விடு வாங்க விற்க
HOMELIFE
Selva Vettyvel
Real Estate Broker
Tel: 416-261-1544 Cell: 416-568-4301
Future Realty Inc.
262 Markham Road, Scarborough, ON
Markham & Eglinton

ALL INSURANCE & FINANCIAL SERVICES
- Auto
- Home
- RRSP
- Group
- Travel
- Business

LIBERTY MUTUAL
London Life
Balan Kanapathi
Office: 416-321-1515
Home: 905-294-2429
Pager: 416-336-4027
Mobile: 416- 452-6975
4433 Sheppard Ave. East, Suite 200
Scarborough, ON M1S 1V3

UNIVERSITY OF JAFFNA LIBRARY 31 DEC 2002 PERIODICAL SECTION

உதயன்

UTHAYAN

தித்திக்கும் தமிழ் உலகில்
எத்திக்கும் கதிர் வீசும்
வாரச் செய்தி இதழ்

416-752-1524 www.uthayan.ca 416-752-6703

உதயம்: 346 Chief Editor: R. N. Logendralingam 29.11.2002 FRIDAY

சமாதான முயற்சிகளில் சர்வதேச சமூகம் காட்டுகின்ற அக்கறை எனக்கு உற்சாகத்தை தருகின்றது.

- மாவீரர் தின உரையில் தலைவர் பிரபாகரன் - (தலைவரின் முழுமையான உரை உள்ளே)

"காதல் வானிலே" திரைப்பட தொடக்க பூஜை

கனடாவில் பிரபல வீடியோ படப்பிடிப்பு நிறுவனமாக திகழும் எஸ்.வி.புரடக்ஷன்ஸ் ஸ்தாபனத்தார் "காதல் வானிலே" என்னும் பெயரில் நகைச்சுவை படத்தை தயாரிக்கின்றனர். இயக்கம், திரைக்கதை வசனம் ஆகியவற்றை கலைஞர் எஸ். கே. பாலச்சந்திரன் கவனிக்கின்றார்.

ஸ்காபறோ வரசித்தி விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்ற தொடக்க பூஜையில் எடுக்கப்பட்ட படத்தையே மேலே காண்கின்றீர்கள். ஒளிப்பதிவாளர் பவான், ஆலய உதவிக் குரு, தயாரிப்பாளர் சிறீ, கே.எஸ்.பாலச்சந்திரன் மற்றுமொரு கலைஞர் ஆகியோர் காணப் படுகின்றனர்.

கனடாவில் சன் ரிவி உங்கள் வீட்டை வந்தடைய அழையுங்கள்
துல்லியமான படம், நாடகம், பட்டிமன்றம், புதிய பழைய படங்கள், கிரிக்கெட் மற்றும் பல
பல வருடங்கள் வியாபாரத்தில்
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம்
Seven Star Satellite 1-800-630-3339

GOREWAY DENTAL CENTRE
பிறம்ரன், மால்ரன், எற்றபிக்கோ, றெக்ஸ்டேல், டவுண்ஸ்வியு, மிசிசாகா நகரங்களுக்கு
வசதியான பல்வைத்திய நிலையம்
(905) 673-7874
DR. NIRMALA SIVA & DR. C YOGESWARAN
பற்களை ஒழுங்குபடுத்துதலும் இதர பற்சிகிச்சைகளும்
7125 Goreway Drive, Suite 206, Mississauga (Malton)
இலவச ஆலோசனைகளுடன் வாரத்தில் 7 நாட்களும் சேவை

ஸ்காபரோ நகரில் பற்கள் சம்பந்தமான சிகிச்சைகளுக்கு
டாக்டர் கோபால் கோபாலகிருஸ்ணன்
குடும்பப் பல் மருத்துவர்
*1910 Kennedy Rd., (Kennedy/Ellesmere)
416-299-7080
கிழமையில் ஏழு நாட்களும் சேவையுண்டு.

IATA
AJB TRAVELS
AWARD WINNER 1993/2000
Tel: 416-412-0244
E-mail: sales@ajbtravels.com Web: www.ajbtravels.com
1900 Kennedy Road, at Ellesmere, Scarborough, Ont. M1P 2L8

ஓம் சாயிராம்
ஜெயசாமி நகை மாளிகை
WHOLESALERS AND RETAILERS
சகலவிதமான தரமான கைவண்ணங்கள்
சுபவய நகைத்தேவைகளுக்கு எண்ணும் நாடுங்கள்
Finest Quality 22k Gold and Singapore Jewellery
Expert Custom Jewellery and Repairs.
3601 Lawrence Ave. E. #14, Scarborough, Ontario
Tel: (416) 431-1536 Fax: (416) 431-7712
Newin Centre, 2580 Sheppard Ave., Unit #45 Mississauga, ON (HWY 10 - Dundas)
Tel: (905) 270-1558 Fax: (905) 270-1553

எல்ஸ்மெயர்
மீன் இறைச்சி மார்க்கட

இலங்கையிலிருந்து வரும்
ஒட்டி, ஓரா, நெத்தலி, கீளி, பாரை
விளை மீன் யாவும் எம்மிடம்
உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம்

ELLESMERE FISH & MEAT MART
1243 Ellesmere Road, Scarborough, ON, M1P 2X8
TEL/FAX: 416-285-8558

உதயனில் வினப்பரங்கள் இதயத்தில் பதிந்த ஓவியங்கள்
அனேக வாசகர்களின் அபிமானத்தைப் பெற்ற பத்திரிகை உதயன்

TEL: 416-752-1524 FAX: 416-752-6703

சிறு விளம்பரங்கள் உதயன்

CLASSIFIED ADs

வீட்டு இடியப்ப மெசீன்



வீட்டு மெசீன் -> $249
வர்த்தக மெசீன்
கை மெசீன் -> $450
மின் மெசீன் -> $1,490
மின் தேங்காய்துருவி

E-mail: webmaster@worldtamil.com
www.worldtamil.com

மோகன் P.Eng.:
Tel: (416) 243-6000
Cell: (416) 433-6006/Pgr: (416) 715-4371

MATH TUITION
ஒன்ராறியோவின் பிரபல பாடசாலையில் புதிய பாடத்திட்டத்திற்கமைய MATH கற்பித்துக் கொண்டிருக்கும் ஆசிரியர் Yoga Balasingam அவர்களால் நடத்தப்படும் பிரத்தியேக கணித வகுப்புக்கள்.
Math: Grades 10 & 11
Calculus: Grade 12
Algebra & Geometery: Grade 12
*Limited number of students in each group
* Gr. 12 (fun & calculus) will be started in Dec.
call: (416) 286-2000

HOPPER HUT
ஸ்காபரோ நகரில் சுவைமிக்க உணவு வகைகளை அருந்தி மகிழ எம்மிடம் வாருங்கள்
இடியப்பம் அதிவிஷேட விலையில் பெற்றுக்கொள்ளலாம்
880 Ellesmere Road
at Kennedy Unit 215
(416) 299-4311

ROOM for RENT
Finch / Middlefield
இருவர் தங்கக்கூடிய பெரிய அளவிலான அறை வாடகைக்கு உண்டு.
Available December 1st,
Call: (647) 280-2426

ROOM for RENT
Middlefield / Elson
4 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. தனி washroom, parking. TTC, mall, school சகல வசதிகளுடன் உடன் வாடகைக்கு உண்டு. இளம் குடும்பத்தார் அல்லது பெண்கள் விரும்பத்தக்கது.
(416) 219-3754

ACCESS ACCIDENT BENEFITS INC.
சட்டபூர்வமாக நீங்கள் பெறகூடிய உச்சபடியான பணத் தொகையினை பெற்றுத் தருவோம்.
வாகனவிபத்து நஷ்டஈடு
All Traffic Tickets
ஊனமுற்றோர் நஷ்டஈடு
பங்காளிகள் பிணக்குகள்
வீட்டுக் காப்புறுதி
உரிமை கோரல்
கனடாவில் பேரம் பேசும்
23 வருட அனுபவம்
(416) 733-8880

BASEMENT for RENT
McCowan / Denison
சந்திப்பில் 158 Terrosa Rd இல் 2 bedroom basement வாடகைக்கு உண்டு.
Separate Entrance
Close to school, TTC and mall.
Available December 15th
CALL: (905) 294-8316

BASEMENT for RENT
Steeles / Middlefield
1 bedroom basement, separate entrance, close to TTC, school, mall, shopping complex, free cable and parking சகல வசதிகளுடன் basement வாடகைக்கு உண்டு.
Available January 1st, 2003
Call: (905) 201-7687

BASEMENT for RENT
Morningside / Ellesmere
Basement and rooms are available.
Close to U of T
Contact:
(416) 282-3239

Tuition classes
English: Grades 3-12 (Markham / Elson)
French: Grade 4-12 (Markham / Elson)
All Subjects: Grade 1-2(Markham / Elson) & (Markham / Lawrence)
*Small GrOup Classes - personal Attention to Each Student
*Tutors: Nalla / Vernice Murray/Shiyamini Indran/ Dhakshayini
Tel: 905- 471 6440 (Nalla)

வீடு விற்பனைக்கு
யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் 4 பரப்புடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்புகட்கு செல்வா:
(416) 694 5944

உதவியாளர் தேவை
Warden / Lawrenceல் இருந்து Donmills / Eglintonக்கு
வேலைக்கு செல்லும் பெண் ஒருவரை ஏற்றிச் சென்று விடுவதற்கான நல்ல வாகனம் உடைய நல்ல தமிழ் மகன் ஒருவர் தேவை.
CALL: (416) 615-0059

BASEMENT for RENT
McCowan / Steeles
(Hillcraft Cr.)
One new, big size bedroom. Close to TTC, school and shopping.
Call:
(416) 407-3906

FOR SALE
63 Pilkey Cresent
Best deal in town!
SEMI DETACH
Hi, it is #9 Hurry up!
Call Shahid: *office:* (905) 470-9800
cell: (416) 910-8004

BASEMENT for RENT
McCowan
McNicoll
1 bedroom walkout for rent. Separate entrance, close to bus stop, plaza, etc.
(416) 335-1871

PART-TIME JOB
Teachers Wanted
Grade: 1 to 12
Subjects: English, Math, Science, French
Requirements: Min.1 year teaching experience in Canada educational requirements. Degree or College Diploma
Please Call Guna at:
(416) 285-7775, (416) 833-4141
Send Resume: app4net@yahoo.com

HOUSE for RENT
McCowan / Finch
சந்திப்புக்கு மிக அருகில் உள்ள வீடு ஒன்றின் ஒரு பகுதி வாடகைக்கு உண்டு. ஒரு அறை மற்றும் அனைத்து வசதிகளும் அடங்கும். TTC, பாடசாலை, கடைகள் மிக அருகில்.
CALL: (416) 291-4241

BASEMENT for RENT
McCowan / 14th Ave.
2 bedroom, separate entrance, parking, cable, close to school சகல வசதிகளுடன் basement வாடகைக்கு உண்டு.
CALL:
(905) 472-0416
(905) 513-6425

ROOM for RENT
Middlefield / Elson
2 அறைகள் வாடகைக்கு உண்டு. பெண்கள் மட்டும் விரும்பத்தக்கது. பாடசாலை, கடை, TTC, அருகில் உள்ளது. சாப்பாட்டு வசதிகள் செய்து கொடுக்கப்படும்.
(416) 520-0496

BASEMENT for RENT
Brimley / Finch
SEPARATE ENTRANCE.சகல வசதிகளுடன் வாடகைக்கு உண்டு.
Call:
(416) 332-1230
cell:
(416) 771-8041

BASEMENT for RENT
Mississauga, Hwy 10 / Eglinton
இல் இரண்டு அறைகளைக் கொண்ட basement வாடகைக்கு உண்டு. தனியான பாதை சகல வசதிகளும் உண்டு.
Call:
(905) 507-8725 *or*
(905) 755-0214

Basement for Rent
Neilson / Sheppard
சந்திப்புக்கு அருகில் ஒரு அறை கொண்ட basement வாடகைக்கு உண்டு. சமையல் அறை, குளியல் அறை, wahser & dryer சகல வசதியும் உண்டு.
Vegetarian விரும்பத்தக்கது
CALL: (416) 292-6089

மணமக்கள் தேவை
ஒரே நாளில் முறிவடைந்த திருமணங்கள்
பெண், வயது 39 -> 5'5"
யாழ் இந்து CIMA Accountant, UK மணமகனை UKக்கு அழைக்கமுடியும்.
ஆண்: வயது 37 -> 5'7"
யாழ் இந்து Engineer, Canada பெண்கனடாவில் வேண்டும்.
Call: (416) 701-1764

BASEMENT for RENT
McCowan / Elson
2 அறைகள் கொண்ட basement வாடகைக்கு உண்டு. Separate entrance, parking.
Close to school, TTC, & schopping.
Call: (416) 829-1180
after 6:00pm and Sat. Sun.

BASEMENT for RENT
கடையின் கீழ்த்தளத்தில் 1 அறை அலுவலக உபயோகத்திற்கு வாடகைக்குண்டு.
CALL:
416 - 884 0005

Apartment for Rent
Morningside / Ellesmere
2 bedroom condo with 2 full bathrooms, den & parking lot. Cable/utilities. Close to TTC & U of T. *Price:* $1150.00
Available Immediately
Call Viji:
(416) 450-6438
(416) 289-4479
Kajan: (647) 271-4479

வீடு வாடகைக்கு
House for Rent
Kennedy / Eglinton
சந்தியில் உள்ள மூன்று அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
பாடசாலைகள் மற்றும் வசதிகள் அருகில் உள்ளன, அமைதியான சூழல்.
Conventient Location
Call: (416) 264-3899

CAR for SALE
89 Civic CX
90 EXR
93 Corrolla
94 Accord LX
96 Camry LE
97 Corrolla SD
Call Prem:
(416) 803-5813
(416) 520-3212

To Advertise on this Page Please Call (416) 752-1524

பிரதம ஆசிரியர்: ஆர். என். லோகேந்திரலிங்கம்
"உதயன்" வெளியீட்டாளர்கள்
'UTHAYAN PUBLISHERS
Head Office: 'UTHAYAN PUBLISHERS
1235 Ellesmere Road
Scarborough, Ont. M1P 2X8 Canada
Tel: 416.752-1524
Fax: 416.752-6703
Regional Office in Germany
P. O. Box: 750162,
60531- Frankfurt
Germany
Tel: (+49)69-693774
Fax: (+49)69-694442
Chief Editor: R. N. Logendralingam
Graphic : Suthaharn, Rani & Pathma
Advertising & Circulation Manager : S. J. Sothy
Printers : Weller Publishers Canada
Europe Edition; Managing Editor: Sripathy Sivanadiyan
E-mail: uthayan66@hotmail.com

சிறந்த சேவை
மகிழ்ச்சிகரமான விளைவில்
Century 21
Percy Fulton Ltd.
10 Years Champion
24 Hours / 7 Days
Bus : 416-298-8200
Fax : 416-298-6602
#1 Office in Canada

Mohan Subramaniyam
Sales Representative
Residential & Commercial
Real Estate Marketing
At its Best!

உதயன் கதிரோட்டம்

சர்வதேச சமூகத்திற்கு மதிப்பளிக்கும் சீரிய சிந்தனை

விடுதலைப் புலிகள் இயக்கத்தை நிறுவி அதனை உலகின் கவனத்தை ஈர்க்கும் வகையில் வளர்த்தெடுத்து இன்று உலகமே தன்னைக் கவனிக்கும் அளவிற்கு சீரிய தலைவனாக விளங்கும் பிரபாகரன் அவர்களது மாவீரர் தினஉரை சர்வதேச மதிப்புக்குள்ளாகியுள்ளது.

உலகின் சிறியதொரு தீவிற்குள் சிறிய பரப்பளவு கொண்ட மண்ணை மீட்டெடுக்க போராடி உள்நாட்டு, வெளிநாட்டு படைகளை புறமுதுகு காட்டச் செய்து இன்று சமாதான மேசையில் சந்திப்புக்களை நடத்திவரும் விடுதலை இயக்கமொன்றின் தலைவனைப் பற்றிய தவறான கருத்துக்கள் ஆயிரம் ஆயிரம் தோன்றி நின்றன.

சிங்கள இனத்தை அழிக்கப் பிறந்தவன் என்ற பொருத்தமற்ற குற்றச்சாட்டுக்களையும் கேட்டுக் கொண்டு தன் விடுதலைப் பாதையில் கவனமாக நடந்து சென்ற தலைவனது பார்வை இன்று சர்வதேச சமூகத்தின் மீது பட்டு பட்டொளி வீசுகின்றது.

சர்வதேச சமூகத்தின் மீது மதிப்பும் மரியாதையும் காட்டுகின்ற வகையில் மாவீரர் உரையை ஆற்றி சொந்த மக்கள் மனங்களில் மட்டுமல்ல உலக மக்கள் மனங்களில் இடம் பிடித்த அந்தத் தலைவனை வாழ்த்தாத நெஞ்சம் எங்குதான் உண்டு?

நோர்வேயை தொடர்ந்து ஜப்பானிலும் தென்னாபிரிக்காவிலும் அடுத்த கட்ட பேச்சுவார்த்தைகள்

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான ஐந்தாம், ஆறாம் கட்ட பேச்சுக்கள் முறையே ஜப்பானிலும், தென்னாபிரிக்காவிலும் நடைபெறும் என்று அமைச்சர் பீரிஸ் நேற்று வியாழக்கிழமை தெரிவித்தார். தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா, விடுதலைப் போராட்டங்களை அனுபவரீதியாக உணர்ந்தவர். எனவே, அவர் இலங்கையில் யுத்தம் ஒன்று மீண்டும் ஏற்படக்கூடாது என்பதை வலியுறுத்துகின்றார். ஜப்பான் சமாதானப் பேச்சுக்களின் பின் அடுத்த கட்டப் பேச்சுக்களை தென்னாபிரிக்காவில் நடத்த சகல உதவிகளையும் வழங்கத் தாம் தயாராக இருப்பதாக தென்னாபிரிக்கத் தலைவர்கள் உறுதி அளித்துள்ளனர் எனவும் அமைச்சர் பீரிஸ் சொன்னார். மே மாதம் ஜப்பானில் நடைபெற விருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டுக்குமுன் மார்ச் மாதத்தில் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான ஐந்தாவது கட்ட சமாதானப் பேச்சு ஜப்பானில் நடைபெற வேண்டும் என்று ஜப்பான் வலியுறுத்தி இருப்பதோடு அதற்கான ஏற்பாடுகளையும் செய்துள்ளது எனவும் அமைச்சர் பீரிஸ் கூறினார்.மூன்றாவது கட்டப் பேச்சுக்கள் டிசெம்பர் இரண்டாம் திகதிமுதல் ஐந்தாம் திகதிவரை மீண்டும் ஒஸ்லோவிலும் நான்காம் கட்டப் பேச்சுக்கள் ஜனவரி ஆறாம் திகதிமுதல் ஒன்பதாம் திகதிவரை தாய்லாந்திலும் நடைபெறும் என்றும் அமைச்சர் ஜி. எல்.பீரிஸ் தெரிவித்தார்

தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரையை இலங்கை அரசு பூரணமாக வரவேற்றுள்ளது- அரசின் சார்பில் அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் நேற்றுமுன்தினம் புதன் கிழமை ஆற்றிய மாவீரர்தின உரையை அரசு மனப்பூர்வமாக வரவேற்றிருக்கிறது. விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் முறிவடையும் என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதில் அரசு நம்பிக்கையும் கொண்டிருக்கிறது. அவரது மாவீரர் உரை தொடர்பாக எமது அரசாங்கத்திற்கு எவ்வித எதிர்க் கருத்துக்களும் இல்லை அரசியல் விவகார அமைச்சர் பேரா சிரியர் ஜி.எல்.பீரிஸ் நேற்று இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சரவைக் கூட்டத் தீர்மானங் களை அறிவிக்கும் வாராந்த செய்தி யாளர் மாநாடு நேற்றுக்காலை அரச தகவல் திணைக்களத்தில் நடை பெற்றது. அதில் உரையாற்றிய போதே அமைச்சர் பீரிஸ், புலிகளின் தலைவரின் உரைக்கு வரவேற்புத் தெரிவித்தார். ஒஸ்லோ மாநாட்டில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆற்றிய உரையை சில ஊடகங்கள் தவறான அர்த்தம் கொடுத்து பிரசுரித்துள்ளன என்று அமைச்சர் பீரிஸ் இம்மாநாட்டில் குற் றஞ்சாட்டினார். செய்தியாளர் மாநாட்டில் அமைச் சர் மேலும் கூறியதாவது:- தமிழீழ விடுதலைப் புலிகள் மீண் டும் ஓர் ஆயுதப் போராட்டத்தை விரும்ப வில்லை. அரசியல் தீர்வையும், இதய சுத்தியுடன் நடத்தப்படும் பேச்சு ஒன்றின் மூலம் நிரந்தர சமாதானத்தையும் காணவே விரும்புகின்றோம் என்று பாலசிங்கம் மிக உறுதியாகத் தனது உரையில் குறிப்பிட்டார்.

இதனை உறுதிப்படுத்தும் வகையிலேயே மாவீரர் தின உரையில் புலி களின் தலைவர் பிரபாகரனும் கருத்துக் கூறியுள்ளார். ஐக்கிய இலங்கைக்குள் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய பிரதேச சுயாட்சி ஒன்றைக் காணவே துடிக் கின்றோம். தனிநாட்டுக் கோரிக்கையில் இருந்து நாம் விலகிச் செல்கின்றோம் என்று புலிகளின் தலைவர் அந்த உரையில் தெளிவாகக் கூறியுள்ளார். ஒஸ்லோ மாநாட்டில் ஒரே அறைக்குள் அதிகாரமிக்க சர்வதேச நாடுக ளின் பிரதிநிதிகள், விடுதலைப் புலிக ளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங் கத்துடன் மிகவும் நெருக்கமாகவும் புரிந்துணர்வுடனும் கலந்துபேசும் வாய்ப்புக் கிட்டியது. அதேவேளை, மாநாட் டுக்கு முன் அன்ரன் பாலசிங்கமும் நானும் தனி அறையில் தத்தமது அரசி யல் நிலைப்பாடுகள், அதற்கான தடங் கல்கள், ஆராயப்படவேண்டிய விடயங்கள் தொடர்பாக மனம் விட்டுப் பேசினோம். புலிகள் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு, சமாதானப் பேச்சு மூலம் அரசியல் தீர்வு காணவே விரும்புகின்றனர் என்பதை சர்வதேச அரசியல் தலைவர்களும் இப்பொழுது அங்கீக ரித்துள்ளனர். இதன் பயனாகவே இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கை களுக்காக 7 கோடி அமெரிக்க டொலர்கள் ஆரம்ப கட்ட உதவிகளாகக் கிடைத்துள்ளன. உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணய நிதியம் என் பனவற்றின் பங்களிப்புடன் மே மாதம் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடு களின் மாநாடு டோக்கியோவில் நடைபெறும். இம்மாநாட்டில் நாம் எதிர் பார்ப்பதை விடக் கூடுதலான தொகை கிடைக்கும். ஒஸ்லோ மாநாடு இதற்கு உறுதியான அடித்தளம் இட்டுள்ளது. - இவ்வாறு

GENERAL TOURS & TRAVELS

Lowest Air Fares to Colombo, Singapore, India & Other Destinations
இந்திய திருத்தலங்களுக்கு யாத்திரை செய்வதற்கான ஒழுங்குகள் மிகக்குறைந்த விலையிலும், இலங்கை, இந்தியா, சிங்கப்பூர் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு பிரயாணச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ளவும் இன்றே நாடுங்கள்
FARES ARE SUBJECT TO CHANGE BASED ON SEATS AVAILABILITY
ALSO CALL US FOR ANY DESTINATION ONE WAY FARE ON REQUEST
1468 VICTORIA PARK AVE., SUITE 117 TORONTO ON M4A 2M2
TEL: (416) 755-8500 FAX: (416) 755-5552
யாழ் செல்வதற்கான அனுமதி பெற்று டிக்கட்டும் ஒழுங்கு செய்து தரப்படும்.

மிஸிஸாக்கா பிரதேச சபை உறுப்பினர் மீது ஊழல் குற்றச் சாட்டு

மிஸிஸாக்கா பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் மீது ஊழல் மற்றும் நம்பிக்கை மோசடி குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருக்கின்றன. பீல் பிரதேச பொலிஸார் இந்த குற்றச் சாட்டுக்களை வியாழக்கிழமை சுமத்தியிருக்கிறார்கள். கிலிபோர்ட் கைல்ஸ் மிஸிஸாக்கா பிரதே சபையின் ஐந்தாம் வட்டார உறுப்பினர். சொத்து தொடர்பான விடயம் ஒன்றில் தனது அரசியல் செல்வாக்கைப் பாவித்து சாதகமான முடிவைப் பெற்றுத் தருவதாகக் கூறி வர்த்தகர் ஒருவரிடம் கிலிபோர்ட் கைல்ஸ் லஞ்சம் கேட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டிருப்பதாக பீல் பிரதேச பொலிஸ் அதிபர் நோயேல் கட்னி குறிப்பிட்டிருக்கிறார். பிரதேச சபை உறுப்பினர் மீது அரசியல் மற்றும் குற்றவியல் ரீதியில் குற்றம் சுமத்தப்பட்டிருப்பது இது முதல் தடவையல்ல. 1999ம் ஆண்டு இதே போன்ற முறைப்பாடு ஒன்று அவருக்கு எதிராகச் செய்யப்பட்டதை அடுத்து அவர் மீது 8 குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருக்கின்றன. அவர் மீது ஏராளமான குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டு நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டிருந்த போதிலும் மூன்றாவது தடவையும் பிரதேச சபை தேர்தலில் கலந்து கொள்ளப் போவதாக கைல்ஸ் அறிவித்திருக்கிறார். கடைசியாக அவர் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச் சாட்டுகள் தொடர்பாக டிசம்பர் மாதம் 30ம் திகதி பிராம்டன் நீதிமன்றத்தில் ஆஜராகும் வரை கிலிபோர்ட் கைல்ஸ் பிணையில் விடப்பட்டிருக்கிறார். எனினும் பிரதேச சபை நடவடிக்கையில் அவர் கலந்து கொள்வது தடை செய்யப்பட்டிருக்கிறது.

வைத்தியரே நோயாளியானால்? வைரஸின் இரும்புப் பிடியில் ரொறன்ரோ

வைரஸினால் ஏற்பட்ட நோய்களைக் குணப்படுத்துவதற்குத்தான் வைத்தியசாலைகள் இருக்கின்றன. ஆனால் ரொறன்ரோவில் தலைசிறந்த சிகிச்சையை வழங்கும் வைத்தியசாலையான சன்னிபுரூக் வைரஸினால் அவதிப்படுகின்றது. அது போதாது என்று பிராம்டனில் இருக்கும் வைத்தியசாலை ஒன்றிலும் வைரஸ் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. ரொறன்ரோவில் அதனை அண்டிய பகுதிகளும் நோர்வாக் என்று அழைக்கப்படும் வைரஸ் இரும்புப் பிடியில் வைத்திருப்பதை இது எடுத்துக் காட்டுகின்றது.

சன்னிபுரூக் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் நோர்வோக் வைரஸ் காணப்பட்டதை அடுத்து நோயாளிகள் அனுமதிக்கப்படுவது நிறுத்தப்பட்டிருக்கிறது. அவசர சிகிச்சைப் பிரிவு குறைந்தது சனிக்கிழமை வரையிலாவது தொடர்ந்து மூடப்பட்டிருக்கும். பீல் பிரதேச மேமோரியல் வைத்தியசாலையில் குறைந்தது இருவர் நோர்வோக் வைரஸினால் பீடிக்கப்பட்டிருப்பதை அடுத்து மருத்துவர்கள் அவர்களைத் தனிமைப்படுத்தியிருக்கிறார்கள். வைரஸ் காணப்பட்ட பிரிவு மூடப்பட்டிருக்கிறது.

கடந்த வார இறுதியில் சன்னிபுரூக் வைத்தியசாலையில் 13 நோயளிகளும் 36 மருத்துவ ஊழியர்களும் நோர்வோக் போன்ற வைரஸினால் பாதிக்கப்பட்டார்கள். அதனை அடுத்து அவசர சிகிச்சைப் பிரிவு திங்கட்கிழமை முதல் மூடப்பட்டிருக்கிறது. நோர்வோக் பயங்கரமான வைரஸ் அல்ல. எனினும் அதனால் வாந்தியும், வயிற்நோட்டமும், தலையிடியும், இலேசான சுரமும் ஏற்படும். ஒருவரிடம் இருந்து இன்னொருவருக்குத் தொற்றக் கூடியது. அதனால் விரைந்து பரவக் கூடியது. அசௌகரியத்தைத் தரக் கூடியது. நோயின் அறிகுறிகள் சுமார் இரண்டு நாட்களில் மறைந்து விடும். சன்னிபுரூக் அவசர சிகிச்சைப் பிரிவு இயங்காத போதிலும் காயமடைந்தவர்கள் நேரடியாக விசேட கவனிப்பு பிரிவுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றார்கள். அமெரிக்க மாநிலம் ஒஹையோவில் உள்ள நோர்வோக் நகரில் இந்த வைரஸினால் மக்கள் முதன் முதலில் பாதிக்கப்பட்டதை அடுத்து இது நோர்வோக் வைரஸ் என்று அழைக்கப்படுகின்றது.

கனடா தூதரகம் பிலிப்பைன்ஸில் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது

பிலிப்பைன்ஸில் தலைநகர் மணிலாவில் உள்ள கனடா தூதரகம் மறு அறிவித்தல் வரும்வரை மூடப்பட்டிருக்கிறது. கனடிய பிரஜைகள் பிலிப்பைன்ஸ் செல்ல வேண்டாம் என்ற ஆலோசனையும் கனடிய அரசினால் தரப்பட்டிருக்கிறது. ஆஸ்த்திரேலிய அரசும் கூட தனது பிரஜைகளுக்கு இது போன்ற எச்சரிக்கையை விடுத்திருக்கிறது. மணிலாவில் உள்ள அதன் தூதரகமும் கூட மூடப்பட்டிருக்கிறது. பிலிப்பைன்ஸில் பயங்கரவாதிகளின் தாக்குதல் இடம் பெறக் கூடும் என்று நம்பவமான தகவல் கிடைத்ததே தூதரகங்கள் மூடப்பட்டதற்கான காரணம் என்று இரு நாடுகளும் அறிவித்திருக்கின்றன.

பயங்கரவாதிகளினால் தாக்குதல் நடைபெறலாம் என்ற அச்சத்தில் உள்நாட்டு பாதுகாப்பையும் ஆஸ்திரேலியா பலப்படுத்தியிருக்கிறது. தாக்குதல் இடம் பெறலாம் என்று கிடைத்த நம்பகமான தகவலை அடுத்து பாதுகாப்பு பலப்படுத்தப்படுவதாக ஆஸ்திரேலிய வெளிநாட்டு அமைச்சர் அலெக்ஸாண்டர் டவுனர் குறிப்பிட்டிருக்கிறார்.

மணிலா தூதரகத்தின் மீது அடுத்த சில தினங்களுக்குள் தாக்குதல் நடைபெறலாம் என்று அறிந்து கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் சொன்னார். ஆஸ்திரேலியாவின் பாரம்பரிய சின்னங்களான சிட்னி இசை மண்டபம் மற்றும் சிட்னி துறைமுக பாலம் ஆகியவற்றின் பாதுகாப்பு இருபத்தி நாலு மணித்தியாலமும் பலப்படுத்தப்பட்ட நிலையில் இருக்கும் என்றும் இஸ்லாமிய தீவிரவாதிகளினாலேயே அச்சுறுத்தல் இருப்பதாகவும் ஆஸ்திரேலிய அமைச்சர் கூறியிருக்கிறார்.

Rogers
Hi-Speed Internet
24.95 For 4 months
Basic Cable
புதிய இல்லம் செல்கின்றீர்களா
இலவசமாக இணைப்பை பெறுவதற்கும்
Digital Cable
தமிழ் தொலைகாட்சி சேவை
மற்றும் இன்ரநெற் தேவைகளுக்கும் அழையுங்கள்
Sunthar
416 564 6397
416 267 3024
(இந்தச் சலுகை எமது வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே)

தீராத நோய்களைத் தீர்க்க ஓர் அரிய சந்தர்ப்பம்
Dr.(Mrs.)K.வசந்தகுமார்
(அக்யுபஞ்சர் வைத்தியர்)
D.CA., M.AC.F., M.AC.A.N.A., M.CACA.
-காசநோய்(Asthma)
-நீரழிவுநோய்(Diabetes)
-மனக்குளர்ச்சி(Depressioon)
-தினசம்(Rhintis)
-மூட்டுவலி(Rheumatism & Rheumatoid)
-சர்மவியாதிகள்(Skin dieseases)
-வயிற்றுவலி(Gastritis)
-தலைவலி(Headache, Sinustis)
-உடல்பருமன் குறைத்தல்(Loss of Weight)
முதலான தீராத நோய்களுக்கு அழையுங்கள்
Mon-Fri 9:30-12:00, 4:00-8:00
Sat. 9:00-1:00, 3:00-8:00
416 754 4024, 416321 5557
4565 Sheppard Ave. East, #205 McCowan & Sheppard

DR. SUGANTHY SUTHAGAR
டாக்டர் (திருமதி) சுகந்தி சுதாகர்
FAMILY DENTIST
குடும்ப பல் வைத்தியர்
CALL (416) 299 7466

COSMETIC AND GENERAL DENTISTRY
பொதுவான பல் வைத்திய சேவைகளுடன் பற்கலை அழகுபடுத்தல்
FREE CONSULTATION
இலவச மருத்துவ ஆலோசனை
ORTHODONTICS (BRACES) FOR ADULTS & CHILDREN
வயது வந்தவர்களுக்கும் சிறுவர்களுக்கும் பல் கிளிப் போடுதல்
SEDATION FOR NERVOUS PATIENTS
3410 SHEPPARD AVE. E., SUITE 311, SCARBOROUGH, ON. M1T 3K4
TEL: (416) 299 7466

THIS WEEK SPECIAL

Brampton
2 Bedroom Condo,
2 washroom
Balcony,
Hardwood Floor,
24 hr Security Guard,
Buy with $6250 Dp only
Must be seen.

உங்களுடைய மாதாந்த Rent ஐக்கொண்டு உங்களை வீட்டுக்குச் சொந்தக்காரராக்க எம்மால் முடியும்!

Mortgage Consultant

M.R. SHANKAR
416-453-6666

SPECIAL
· எங்கள் ஊடாக வீடு வாங்குபவர்களுக்கு Mortgage ஒழுங்குபடுத்தல் இலவசம்!
· உங்கள் ஊடாக வீடு விற்பவர்களுக்கு 1% Commission only!

IF WE CAN NOT ARRANGE THE MORTGAGE FOR YOU, NOBODY CAN

Over 10 years Experience

நாங்கள் வியாபார நிலையங்களை வாங்குவதிலும் விற்பதிலும் உதவுகின்றோம்

Bad Credit? Bankruptcy? New Immigrant? Low Income?
NOOOOO.....PROBLEM

Licenced Real Estator

ALEX (NAV) MALAHI
416-873-SOLD (7653)

Mortgage Special
5.35% fixed
for 5 years

உங்கள் எல்லாவிதமான credit பிரச்சினைகளுக்கும் எம்மிடம் தீர்வு உண்டு
Home Life Superstars R.E. Ltd. (Realtor, Member) Tel: 416-740-4000

நோர்வே விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானது என்பது பிழையான கருத்து

இலங்கைக்கு ஆதரவாக நடைபெறும் முதலாவது அரசியல் மட்ட மாநாடு என்ற வகையில் ஒஸ்லோவில் ஆரம்பமாகிய மாநாடு முக்கியத்துவம் பெறுவதாக நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தெரிவித்துள்ளார். சர்வதேச செய்திச் சேவையொன்றிற்கு அளித்துள்ள பேட்டியில் இதனை குறிப்பிட்டுள்ள அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: ஒஸ்லோவில் நடைபெற்ற சமாதான ஆதரவு மாநாட்டில் அமெரிக்கா உட்பட 20 நாடுகள் கலந்து கொண்டன. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உதவுவது முதற்கொண்டு வீதிகளை திருத்துவது வரையிலான அனைத்து நடவடிக்கைகளுக்கும் நிதியைத் திரட்டுவோம்.

எனினும் பெருமளவு நிதிக்கான உறுதிமொழிகள் கிடைக்காது. ஜப்பானில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்ற மாநாட்டிலேயே பெருமளவு நிதி கிடைக்கலாம். ஒஸ்லோ மாநாட்டைப் பொறுத்தவரை நிதியுதவி முக்கியமான விடயமல்ல. இதற்கு மாறாக இலங்கைக்கு ஆதரவாக நடைபெறுகின்ற முதலாவது அரசியல் மட்ட மாநாடு என்ற அடிப்படையிலேயே இது முக்கியம் பெறுகின்றது.

ஆரம்பமே மிக முக்கியம். இதன் காரணமாக நீங்கள் நாறு மில்லியன் டொலர்கள் குறித்து கவனம் செலுத்தப்போவதில்லை. எனினும் உடனடி நடவடிக்கைகளில் இருதரப்பும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை கண்டுள்ளன. எனினும் நிரந்தர சமாதானத்திற்கு நீண்ட தூரமுள்ளது. அவர்கள் 50 வருடங்களை இன மோதலிலும் 20 வருடங்களை இன வன்முறைகளிலும் கழித்துள்ளனர். இதன் காரணமாக நம்பிக்கையை ஏற்படுத்த சிறிது காலம் பிடிக்கும் எனினும் அது தற்போது நடைபெறத் தொடங்கியுள்ளது.

பாதுகாப்பான நிரந்தர சமாதானத்திற்கு பல வருடங்கள் உள்ளன. சில மாதங்கள் அல்ல என்றே நான் கூறுவேன். எனினும் தற்போது குறிப்பிடத்தக்க சமாதானம் நிலவுகின்றது. அது தொடர்கின்றது. நோர்வே விடுதலைப் புலிகளுக்கு சார்பாக செயற்படுகின்றது என்ற குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது. நாங்கள் அந்தக் கருத்து சரியானது என நம்பவில்லை. நோர்வே நடுநிலைமை வகிப்பதால் அது ஒரு பக்கசார்பாக செயற்படுகின்றது என்ற கருத்து உருவாவதை தவிர்க்க முடியாது.

சமாதான முயற்சிகள் எதிர்பாராத முன்னேற்றத்தைத் தந்துள்ளன - இலங்கை அரசு கூறுகின்றது

இலங்கை அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் சமாதானத்தை அடைவதற்கு அவசியமான துணிச்சலான முடிவுகளை எடுப்பதில் வெளிப்படுத்தியுள்ள மனவுறுதி காரணமாக சமாதான முயற்சிகள் எதிர்பாராத முன்னேற்றத்தை அடைந்துள்ளன.

இழக்க முடியாத சமாதானத்திற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இது உறுதிப்படுவதற்கு சர்வதேச சமூகத்தின் நிதியுதவிகள் அவசியம் என இலங்கை அரசாங்கம் கடந்த புதன்கிழமை வெளியிட்டுள்ள ஒஸ்லோ மாநாட்டிற்கான வெள்ளையறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

இலங்கையில் சமாதானத்தை உருவாக்குவதற்கு இலங்கைக்கும், சர்வதேச சமூகத்திற்கும் கிட்டியுள்ள மாபெரும் வாய்ப்பு ஒஸ்லோ மாநாடு எனவும் அரசாங்கத்தின் வெள்ளையறிக்கையில் தெரிவிக்க ப்பட்டுள்ளது,

அரசாங்கத்தின் வெள்ளையறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

ஒஸ்லோவில் நவம்பர் 25ம் திகதி நடைபெறும் மாநாட்டிற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு சர்வதேச சமூகத்திற்கு உதவும் நொக்கிலேயே வெள்ளையறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

நாடு எதிர்கொண்டுள்ள உடனடியான தேவைகளை பூர்த்தி செய்வதற்காக மேலும் பரந்துபட்ட அளவில் உதவுமாறு இலங்கை அரசாங்கம் சர்வதேச சமூகத்தை கேட்டுக் கொள்கிறது. (யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கும் தென்பகுதிகளுக்கும்) உப குழுவினால் நேரடியாக விடுக்கப்படும் வேண்டுகோளை குறைத்து மதிப்பிடுவதற்காக இது மேற்கொள்ளப்படவில்லை.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள ஆண்களினதும் பெண்களினதும் குழந்தைகளினதும் தேவைகள் பரந்துபட்டவையாக உள்ளன என்று இலங்கை அரசு கூறுகின்றது.

கிரிக்கட் நட்சத்திரம் முரளிதரன் சிகிச்சைக்காக அவுஸ்திரேலியா பயணம்

இலங்கையணியின் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தென்னாபிரிக்காவிலிருந்து வைத்திய சிகிச்சைக்காக அவுஸ்திரேலியா பயணமானார். அவருக்கு குடலிறக்க நோய்க்கான சத்திர சிகிச்சை அங்கு மேற்கொள்ளப்படவுள்ளது. முரளிதரனுக்கான சிகிச்சையை அவுஸ்திரேலியாவில் மருத்துவர் குயிண்டஸ் டி. சில்வா மேற்கொள்வார்.

முரளிதரன் தென்னாபிரிக்காவுடனான ஒரு நாள் போட்டித் தொடரில் பங்குபற்ற முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும் இந்தச் சிகிச்சைக்கு பிறகு முரளிதரனின் உடல் நிலையைப் பொறுத்து அவர் அடுத்த மாதம் அவுஸ்திரேலியாவில் நடக்கவிருக்கும் முக்கோண போட்டித் தொடரில் கலந்து கொள்வார் என இலங்கை கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது.

உதயன் தொடர்புகளுக்கு
Tel: 416-752-1524 Fax: 416 752 6703
www.uthayan.ca

வாகன விபத்துக்கு உள்ளானீர்களா?

YOGI & PARTNERS

உங்களது காப்புறுதி நிறுவனம் உங்களில் ஆதாயம் தேடவிடாதீர்கள்.
உங்கள் உரிமைகள், ஏற்படக்கூடிய நன்மைகள், தீமைகள் குறித்து ஆலோசனைகள் பெற எம்மை நாடுங்கள்.
தவறு உங்களுடையதாயினும்..

உங்கள் உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்

EAST OFFICE
1920 Ellesmere Rd., Suite: 110
Scarborough, Ont. M1H 2V6
Tel : (416) 289-4141

அனுபவம்மிக்க பல காப்புறுதி ஆலோசகர்கள் எமது நிறுவனத்தில் பணியாற்றுகிறார்கள்.

யோகி தம்பிப்பிள்ளை

WEST OFFICE
4 John Street, Suite 10,
Toronto, Ont. M9N 1J3
Tel : (416) 241-9292

உள்ளூர் செய்திகள்

Earo ELECTRIC
24hrs
அனைத்து மின் இணைப்பு திருத்த வேலைகளுக்கும்
Licensed Electrician
Maniam : 416-289-9393
☐INDUSTRIAL
☐RESIDENTIAL
☐COMMERCIAL

ஸ்கந்தவரோதயா கல்லூரி பழையமாணவர் சங்க அறிவித்தல்

சுண்ணாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியின் வளர்ச்சியிலும் அக் கல்லூரி மாணவர்களின் வாழ்விலும் ஒரு மிகப் பெரிய சிருஷ்டி கர்த்தாவாக நீண்ட காலமாக பணி புரிந்து மறைந்த முன்னாள் அதிபர் திரு. ஒரேற்றர்-சுப்பிரமணியம் அவர்களின் புதல்வன் திரு. கந்தசாமி அவர்களினால் உருவாக்கப்பட்ட "தென்னகத்து திருக்கோயில்கள் தோற்றமும் வளர்ச்சியும்" என்னும் ஆய்வுக்கட்டுரைகள் அடங்கிய நூல் ஒன்று எதிர்வரும் டிசம்பர் 7ம் திகதி சனிக்கிழமை மாலை ஐந்து மணிக்கு கனடா கந்தசாமி கோயில் மண்டபத்தில் ஒன்ராரியோ இந்து சமய பேரவையினால் வெளியிட்டு வைக்கப்பட இருப்பதனால் அவ்விழாவில் சகல பழையமாணவர் சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு சங்கத்தலைவர் திரு. நடா. நடராஜா அவர்கள் பழைய மாணவர்கள் சார்பில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தென்இந்திய யாத்திரைகளை மேற்கொள்ள விரும்பும் சகல இந்து மத அடியவர்களுக்கும் இவ் நூல் ஆலயங்கள் தொடர்பான சகல விடயங்களையும் ஒரு தகவல் தளமாக வைத்துக்கொள்ளும் ஒரு மிகப்பெரிய வழிகாட்டியாகும். மேலதிக விபரங்களுக்கு: (416) 296-8964, (905)472-8703

கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயத்தில் மாவீரர் தின விசேட பூசைபற்றிய அறிவித்தல்

ஸ்காபரோ 635 மிடில்பீல் றோட்டில் அமைந்துள்ள கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயத்தில் எதிர்வரும் 1.12.2002 ஞாயிற்றுக்கிழமை காலை 12.00 மணிக்கு அறங்காவல் சபையினராலும் ஆலய தொண்டர்களினாலும் எம் மண்ணை மீட்டெடுக்கும் மாபெரும் பணியில் உயிர்நீத்த எம் சகோதர, சகோதரிகளுக்காகவும் போரினால் இறந்த தமிழ் மக்களுக்காகவும் மாவீரர்தின விசேட ஆராதனையும் பூசையும் நடைபெறும். மாவீரர் குடும்பத்தினர் உறவினர்கள், ஆலய தொண்டர்கள், அறங்காவலர் சபையினர் தீபம் ஏற்றி வழிபடுவார்கள். மாவீரர் குடும்பத்தினரையும் தமிழ் மக்களையும் அன்போடு அழைக்கின்றனர் ஆலய அறங்காவலர் சபையினரும் தொண்டர்களும். மண்டல மகர பூசை காலங்களில் அடியார்கள் ஆலயத்திற்கு வருகை தந்து ஐயப்பபெருமானின் அருட்கடாட்சத்தை பெறுமாறும் சபரிமலை செல்லவிருக்கும் மாலை அணிந்த சுவாமிமார்கள் 30.11.2002 சனிக்கிழமைக்கு முன்னர் ஆலய காரியாலயத்தில் பதிவு செய்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். மேலதிக தொடர்புகளுக்கு (416) 321-6104

யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க இராப்போசன விருந்து-2002

கனடா யாழ் இந்துக்கல்லூரி சங்கத்தின் 10வது ஆண்டை நிறைவு செய்யுமுகமாக யாழ் இந்து பழைய மாணவர்கள் கல்லூரியின் நலன்சிறக்க இராப்போசன விருந்தை கலைநிகழ்ச்சிகளுடன் ஒழுங்கு செய்துள்ளனர். 2210 Lawrence Ave. E.Scarb. வீதியில் அமைந்துள்ள The Martyer Church Hall, விருந்துபசார மண்டபத்தில் December-14ந்திகதி சனிக்கிழமை மாலை 6.மணிக்கு பழைய மாணவர்கள், அவர்களது குடும்பங்கள் மற்றும் கல்லூரி நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடனும் பண்புடனும் அழைக்கின்றோம். தொடர்புகளுக்கு: கப்டன்: S.சந்தியாப்பிள்ளை (416) 285-8820, (416) 490-9338, N.பரதன் (416)450-9221,S.கணேஷ்(416)566-1575

யாழ்/ஸ்ரான்லி கல்லூரி பழைய மாணவர் ஆசிரியர் ஒன்றுகூடல்

23.11.2002 சனிக்கிழமை அமைக்கப்பட்ட பழைய மாணவர், ஆசிரியர் கூட்டமைப்பில் ஏற்பட்ட தீர்மானத்தின் அனுகூலமாக மேற்படி பழைய மாணவர், ஆசிரியர் ஒன்றுகூடல் 15.12.2002 ல் இடம்பெறவிருக்கிறது. விபரங்களுக்கு பின்வரும் தொலைபேசி எண்களுடன் தொடர்புகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.(416) 287-8537, (416) 635-1107, (905) 946-1498, (416) 816-4970

சித்தங்கேணி ஒன்றியத்தினரின் இராப்போசன ஒன்றுகூடல்

சித்தங்கேணி ஒன்றியத்தினரின் இராப்போசன ஒன்றுகூடல் எதிர்வரும் 7.12.2002 சனிக்கிழமை இலக்கம் 2538 St.Clair Avenue East (St.Clair & O' Cornor இல் அமைந்துள்ள Presteien-Woodbine United Church மண்டபத்தில் பிற்பகல் 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய ஒன்றுகூடலில் பல்சுவை நிகழ்ச்சிகளும் இராப்போசனமும் இடம்பெறவுள்ளன. இவ் ஒன்றுகூடல் நிகழ்ச்சிக்கு சித்தன்கேணியுடன் தொடர்புடைய நண்பர்கள் அங்கத்தவர்கள் அனைவரும் வருகை தந்து கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு சித்தங்கேணி ஒன்றியத்தினர் அழைக்கின்றனர். இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்பவர்களுக்கு போக்குவரத்து வசதிகள் தேவைப்படின் முற்கூட்டியே தொடர்புகொண்டு ஒழுங்கு செய்துகொள்ளவும். மேலதிக விபரங்களுக்கு: (905) 624-2031, (416) 724-7839, (416) 493-7292, (416) 335-0717

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க கனடாகிளை நடத்தும் தேவாரம், பேச்சுப்போட்டிகள்

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க கனடா கிளையினர் தைப்பொங்கல் விழாவையொட்டி தேவாரம், தமிழ்ப் பேச்சுப்போட்டிகளை நடத்தவுள்ளது. இப்போட்டிகள் கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ளது. இப்போட்டிகள் 29.12.2002 அன்று நடத்தப்படும்.போட்டிக்கான இறுதி விண்ணப்ப முடிவுத்திகதி 20.12.2002. போட்டிதொடர்பான மேலதிக விபரங்களுக்கு: ராஜன் (905) 501-0858, ஈசன் (416) 236-7103, புஸ்பராணி (416) 269-6129

குருநகர் சமூகசேவை அமைப்பின் 6வது வருடாந்த நத்தார் ஒன்றுகூடல்

குருநகர் சமூகசேவை அமைப்பின் 6வது வருடாந்த நத்தார் ஒன்றுகூடல் எதிர்வரும் மார்கழி மாதம் 21ம் திகதி நடைபெற இருக்கிறது. இவ்வொன்றுகூடலில் குருநகர் மக்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். இவ்விழாவிற்கு மேடை நிகழ்ச்சிகள் தந்து பங்குபற்ற விரும்புவோர் கீழ்க்கண்ட இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.மேலதிக தொடர்புகளுக்கு: சூரி: (416) 269-0538, மௌறி (416)413-9199, மாறன்: (416)949-7076

ரொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலய நிர்வாகசபைக் கூட்டம்

கடந்த 24.11.02 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு தலைவர் மா. அமிர்தகௌரி அவர்களின் தலைமையில் ரொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலய நிர்வாகசபைக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு நிர்வாகசபை உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டார்கள். இக்கூட்டத்தில் திருப்பணி வேலைகள் மற்றும் பல விடையங்கள் கலந்தாலோசிக்கப்பட்டது.

Waran S. Nathans
Sales Representative
ROYAL LEPAGE

For All Your Real Estate Needs...
Buy - sale - Lease
Residential & Commercial
Mortgage Financing - Free market evaluation - Flexible commission
Please Feel Free to call for Consultation
Tel: (905) 275-9400
Cell: (416) 804-1571
"You will succeed, if you Make the right move. With the right people. At the right time."

DON'T MISS IT....

DIXIE / BLOOR
3 Large BR
1X4, 1X2 Bath
Call for more details

நாடு திரும்பியவுடன் கிழக்கின் முஸ்லிம்கள் தொடர்பாக தளபதி கருணாவுடன் பேசுவேன்

- நோர்வேயில் இலங்கை அமைச்சர் ஹக்கீம்

இலங்கையின் கிழக்குப் பகுதியில் முஸ்லிம்களின் பாதுகாப்பு பற்றிய விடயம் குறித்து புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதி கேணல் கருணாவுடன் சந்திப்பு நடத்தி விரிவாக ஆராய்வது என தாய்லாந்துப் பேச்சில் முடிவு செய்யப்பட்டது. ஆனால், எனது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் நிலவிய சில உள்ளகப் பிரச்சினைகள் காரணமாக அது தாமதமாயிற்று உடனடிச் சாத்தியமாக வில்லை. எனினும் ஒஸ்லோ மாநாட்டின் பின்னர் நாடு திரும்பியதும் கிழக்குக்குச் சென்று தளபதி கருணாவுடன் இந்த விடயம் குறித் தும் பேசுவேன்.- இவ்வாறு தெரிவித்தார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம்.

கடந்த (திங்கட்கிழமை) ஒஸ்லோவில் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்துகொண்ட அமைச்சர் ஹக்கீம், மாநாட்டின் பின்னர் அங்கு கூடியிருந்த பத்திரிகையாளர்களுக்கு வழங்கிய பேட்டியில் இத்தகவலைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறிய தாவது: இலங்கை விவகாரம் தொடர்பாக சர்வதேச சமூகம் சில முக்கியமான நிலைப்பாடுகளை எடுக்க இந்த மாநாடு வழிகோலியிருக்கின்றது. வன்முறையைக் கைவிட்டால் தான் சர்வதேச சமூகத்தின் உதவி அரசுக்கும் புலிகளுக்கும் கிடைக்கும் என்ற திட்டவட்டமான செய்தி அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் ஆர்மிடேஜ் மூலம் வெளிப்படுத்தப்பட்டு வன்முறைகளைக் கைவிடுவோம் என்ற நிபந்தனையுடன் கூடிய கைவிடுதல் அறிவிப்பை புலிகளின் சார்பில் அன்ரன் பாலசிங் கம் விடுத்ததும் முக்கியமானதாகும். இலங்கையில் ஜனநாயகம் முற்றாகத் திரும்ப வேண்டும். சர்வகட்சி ஜனநாயகம் பேணப்படுவ தற்கான சூழலைப் புலிகளும், அரசும் உரு வாக்க வேண்டும் மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். இந்த உதவிகள் எல்லாச் சமூகத்துக்கும் சரிசமமாகக் கிடைக்கும் என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். இது தான் இன்று சர்வதேச சமூகத்தின் நிபந்தனைகளாக - நிலைப்பாடாக - மாறியுள்ளது.

இது நாம் எதிர்பார்த்த ஒன்று தான்.இந்த மாநாட்டில் சில கட்டுப்பாடுகள், நிபந்தனைகளுடன் உதவியளிக்கத் தயார் என்று சர்வதேச சமூகம் தெரியப்படுத்தியுள்ளது. ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் இது தற் போதைய சமாதான முயற்சிகளை முழு அளவில் ஊக்கப்படுத்தும் ஒரு திருப்திகரமான நிகழ்வு என்று கூற லாம்.ஒஸ்லோவில் பிரதமர் - அன்ரன் பாலசிங்கம் சந்திப்புக்கு முன்னர் பிரதமருடன் நான் நீண்ட நேரம் கிழக்கு முஸ்லிம்களின் நிலை குறித் துப் பேசியிருந்தேன். சில விடயங் களை நான் அவரிடம் வலியுறுத்தியிருந்தேன். அவற்றை அன்ரன் பாலசிங்கத்திடம் பிரதமர் எடுத்துக் கூறியிருக் கின்றார். நானும் ஒஸ்லோவில் அன்ரன் பாலசிங்கத்துடன் இவ்விடயம் குறித்து உரையாடியுள்ளேன். சில நடவடிக்கைகளை எடுக்க இருதரப்பும் இணங்கியுள்ளன. நல்ல முன்னேற்றகரமான முடிவுகள் கிடைக்கும் என நாம் எதிர்பார்க் கின்றோம். தற்போதைய சமாதான முயற்சி களில் நாம் கணிசமான முன்னேற்றத்தை எட்டியிருக்கின்றோம் என்பதை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது என்பதை எம்மால் உணர முடிகிறது. இன்னும் முன்னேற்றம் தேவை என அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள். எனவே, இந்த சமாதான முயற்சி களிலே ஈடுபட்டிருக்கின்ற தரப்புகளுக்கு ஒரு தார்மீகப் பொறுப்பு இருக்கின்றது. குறிப்பாக அரசும், புலி களும் முஸ்லிம் சமூகமும் தங்களுக்குள் உள்ள பிணக்குகளுக்கு இணக்கமான தீர்வு காண வேண்டும். அப்படிக் கண்டால்தான் சர்வதேச சமூகத்தின் ஆதரவை - உதவிகளை - ஒத்து ழைப்பை நாம் பெறமுடியும். சமாதான முயற்சிகள் தொடர்பான விடயத்தில் முஸ்லிம் காங்கிரஸுக் குள் பிரிவு இருப்பதாக கூறுவது தவறு. கிழக்கு மாகாண பாதுகாப்பு சம் பந்தமாக புலிகளின் நடவடிக்கைகள் தொடர்பாக - முஸ்லிம் காங்கிரஸுக்குள் சில அங்கலாய்ப்புக்கள் - விசனங்கள் - விரக்தி ஆகியன இருந்தன என்பதுதான் அண்மைக் கால நிகழ்வுகளின் யதார்த்தமாகும்

. எம்மைப் பொறுத்தவரை இந்த விடயத்தில் ஓரளவு இணக்கநிலையைக் கொண்டு வந்துள்ளோம். முஸ்லிம்களின் இந்த அங்கலாய்ப்பை புலிகள் பூரணமாய் புரிந்துகொள்ள வேண்டும். வடக்கு - கிழக்கு பிரதே சம் முஸ்லிம்களினதும் தாயகம் என் பதை அவர்கள் ஏற்றுக்கொள்வது உண்மையாக இருந்தால், முஸ்லிம் களுக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை புரிந்து கொண்டு, எமக்கும் சுயாட்சி வேண்டும் என்ற வேண்டுகோளை அவர்கள் உள்வாங்கி ஓர் இணக்கத்தீர்வுக்கு வருவதற்கு அவர் கள் வழிஅமைக்க வேண்டும். நிரந்தர சமாதானத்துக்கு நாங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து வழிகோல வேண்டும்.

முஸ்லிம் சமூகம் குறித்து புலி கள் உதட்டில் ஒன்றும் உள்ளத் தில் ஒன்றுமாகப் பேசக்கூடாது என்ற அங்கலாய்ப்பு முஸ்லிம்கள் மத்தியில் உள்ளது. நடைமுறையிலேகள நிலைவரங்களிலே சில மாற்றங் கள் வேண்டும். முஸ்லிம்களையும் சம உரிமையுள்ள பிரஜைகளாய் புலிகள் மதிக்க வேண்டும். முஸ்லிம்களின் அடிப்படை மனித உரிமைகள், அவர்களின் அரசியல் அபிலாஷைகள், சுயாட்சி சம்பந்தமான வேட்கை போன்றவற் றைப் புலிகள் சரியாக புரிந்துகொண்டு ஓர் இணக்கத்தீர்வுக்கு வரவேண் டும். இதற்கு புலிகளின் தலைமைத் துவம் வழிகோலவேண்டும். இது தான் முஸ்லிம் சமூகத்தின் விருப்பமும் எதிர்பார்ப்பும் ஆகும். கிழக்கு முஸ்லிம்களின் பாது காப்பு குறித்து விரைவில் புலிகளின் தளபதி கருணாவைச் சந்தித்துப் பேசவுள்ளேன். (தொடர்ச்சி A15ம் பக்கம் பார்க்க)

ஏழாலை அருள்மிகு சொர்ணாம்பிகை சமேத அம்பலவாணேசர்

ஆலயத் திருப்பணிச் சபை

1. இவ்வாலயத்தின் புனர்நிர்மாணத்தின் பொருட்டு 02.09.2001 இல் நடந்த பொதுக்கூட்டத்தில் அமைக்கப்பட்ட ஏழாலை சொர்ணாம்பிகா சமேத அம்பலவாணேசர் ஆலயத் திருப்பணிச்சபையில் செய்து கொண்ட தீர்மானத்திற்கு இணங்கவே இவ் வேண்டுகோளைத் தங்கள் முன் கவனத்திற்குத் தருகின்றோம்

2. கனடாவில் இருக்கும் எம்மவர்களதும் ஏனைய சிவதர்ம வள்ளல்களதும் பேராதரவு இன்றியமையாத் தேவையாக இருக்கிறது. எனவே எல்லோரும் ஒன்று சேர்ந்து இத் திருப்பணிக்கு தங்களால் இயன்ற நிதியைச் சேகரித்து விரைவில் அனுப்பி வைத்துதவும்படி பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

3. (அ) உருக்குலைந்திருக்கும் பழைமையான பகுதிகள் மறுசீரமைக்கப்படல்
(ஆ) உள்வீதி மூடு மண்டபம் அமைத்தல்
(இ) புறமதில் மறுசீரமைத்தல்
(ஈ) உள்வீதி அடித்தளம் செப்பனிடல்
(உ) புதிதாக நடைபெறும் வேலைகளின் உத்தேச செலவு மதிப்பீட இருபத்தெட்டு இலட்சமாகும். தங்களிடம் இத்திருப்பணி தொடர்பாக ஒரு முறையே கேட்கின்றோம். எனவே தயை கூர்ந்து இத்திருப்பணிக்கு வாரி வழங்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு
சுந்தரம்- மகேந்திரன்
416-287-1254

ஈழத்தமிழினத்தின் விடுதலைப் போராட்ட வரலாறு

எஸ். ஆர். ராஜபாலன் (B.Sc.(Hons) Cey., Diploma in Accounting

16ம் நூற்றாண்டில் இலங்கைத் தீவு போர்த்துக்கேயர்களால் கைப்பற்றப்பட்ட காலம் தொடக்கம் தமிழினத்திற்கு எதிரான நடவடிக்கைகள் ஆரம்பமாகின.

ஈழத்தமிழர்களின் பாரம்பரிய தாயக பிரதேசங்களை கைப்பற்றிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக கடந்த ஆறு நூற்றாண்டுகளில் பல்வேறு நடவடிக்கைகள் இடம் பெற்று வந்துள்ளன. எனினும் கடந்த 25 வருட காலப் பகுதியில் நடைபெற்ற விடுதலைப் போராட்டங்கள் இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஓர் புதிய பரிமாணத்தை ஏற்படுத்தின.

1505ம் ஆண்டு முதல் இலங்கைத் தீவில் இடம் பெற்ற பல்வேறு நிகழ்வுகள் ஈழத் தமிழர்களின் வரலாற்றில் பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன. இந்த நிகழ்வுகளின் தொகுப்பான இந்த வரலாற்றுத் தொடரின் இறுதிப் பாகம் இவ்வாரம் முதல் ஆரம்பமாகிறது.

ஈழத்தமிழர்கள் அனைவருக்கும் பயனுள்ளதான இந்த வரலாற்றுத் தொடரை உங்கள் முன்பாக சமர்ப்பிப்பதில் உதயன் மகிழ்ச்சி அடைகிறது. - பிரதம ஆசிரியர்

பாகம்-4

இந்த வரலாற்றுத் தொடரில் ஈழப்போர் (1,2,3), தற்போதைய சமாதான நடவடிக்கைகள் என்பன பற்றிய தகவல் தொகுப்பு இடம்பெறவுள்ளது

ஈழப்போர்

(சென்றவாரத் தொடர்ச்சி)

1981 யூன் 25: எதிர்க்கட்சி தலைவர் அ. அமிர்தலிங்கம் மீது நம்பிக்கை இல்லாப் பிரேரணை சமர்ப்பித்த ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அவரை எவ்வாறு கொலை செய்வது என்பது பற்றி பாராளுமன்றத்தினுள்ளேயே கலந்துரையாடினார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப்படும் நிகழ்வு உலகில் இதுவரை எந்த நாட்டிலும் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

சிறிலங்கா அரசியலில் இடம்பெற்ற இந்த தரக்குறைவான சம்பவத்தின் போது குண்டசாலைத் தொகுதிக்கான ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் டி.எம். சந்திரபால பாராளுமன்றத்தில் பின்வருமாறு குறிப்பிட்டமை சிங்கள இனவாதத்தை அப்பட்டமாக பிரதிபலித்தது.

கௌரவ சபாநாயகர் அவர்களே! தமிழ் மக்களின் தலைவர் என்று அழைக்கப்படுபவரான இவரை நாங்கள் என்ன செய்யலாம்? எனக்கு அதிகாரம் வழங்கப்பட்டால் நான் அவரை அருகில் உள்ள தூணில் கட்டி சித்தம் கலங்கும் வரை சவுக்கால் அடிப்பேன். அதன் பின் எவராது தனது விருப்பத்தின்படி எதனையும் செய்யலாம். அவரை பெய்ரோ வாவியினுள் அல்லது கடலில் தூக்கி எறியலாம். ஏனெனில் அவரது உடல் ஏற்கனவே உருக்குலைந்த நிலையில் இருப்பதன் காரணமாக அவரின் உயிர் இருக்காது. இதுவே யுத்தம் (பாராளுமன்றப் பதிவேடு, ஜூலை 24. 1981)

1981 செப். 15: தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் பாராளுமன்றத்தை பகஷ்கரித்தனர்.

1981 ஒக்டோபர்: தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியில் வைத்து ராணுவத்தின் மீது தமது முதலாவது தாக்குதலை நடத்தினர்.

1982: பயங்கரவாத தடைச் சட்டம், நாட்டில் நிரந்தரமான சட்டவிதியாக்கப்பட்டது.

1982 ஒக்டோபர் 22: ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தை நீடிப்பதற்கான சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அரசு வெற்றி பெற்று ஜே.ஆர். ஜெயவர்த்தனா மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

1983 மே: அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

1983 ஜூலை1: யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் சற்றடே றிவியு (Saturday Review) என்னும் பத்திரிகை சிறிலங்கா அரசினால் தடை செய்யப்பட்டது.

ஜூலை 20: இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்காக வட்ட மேசை மாநாடு கொழும்பில் ஆரம்பமாகியது.

ஜூலை 22: திருநெல்வேலி நகரில் ராணுவ வண்டித் தொடர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலின் விளைவாக 13 ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர்.

ஜூலை 23: சிறிலங்காவில் இதுவரை இடம்பெற்றிராத அளவிலான இனக்கலவரம் தூண்டிவிடப்பட்டது. இந்தக் கலவரத்தின் போது 3000க்கு மேற்பட்ட தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டதுடன் அவர்களின் வதிவிடங்கள் வர்த்தக நிறுவனங்கள் உடைமைகள் என்பன தீக்கிரையாக்கப்பட்டன.

1958ம் ஆண்டு கலவரத்தின் போது நடைபெற்றது போன்று பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் கப்பல்கள் மூலம் வட பகுதிக்குத் தப்பிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

ஜூலை 23- 27 : வெலிக்கடைச் சிறையில் உள்ள அதிகாரிகளும் சிங்களக் கைதிகளும் இணைந்து குட்டிமணி, தங்கத்துரை ஆகியோர் உட்பட 53 அரசியல் கைதிகளை மிகவும் கொடூரமாகத் தாக்கி படுகொலை செய்தனர். (தொடரும்)

டாக்டர் சபாபதி இரவீந்திரன்

Dr. SABAPATHY RAVEENDRAN

B.D.S, M.S, F.D.S.R.C.S(Eng.), General Practitioner (Mainly Surgery)

பல வருடங்கள் இலங்கையிலும் இங்கிலாந்திலும்
விசேட பல்வைத்தியராகப் பணியாற்றிய அனுபவத்துடன்
இங்கு இரண்டு இடங்களில் சேவை புரிகிறார்

- முரசிலிருந்து இரத்தம் கசிவது, முரசு கரைவதைத் தடுத்தல்
- நோயுற்ற பழுதடைந்த பற்களைப் பாதுகாத்து மீளமைத்தல்
- பற்களை வெண்மையாக்குதல், ஒழுங்குபடுத்தல்
- பற்களின் அழகை மெருகூட்டுதல்
- ஞானப்பற்களை அகற்றுதல்
- பற்களுக்கிடையிலான இடைவெளியை நீக்குதல்
- நிரந்தரப் பல்கட்டுதல்
- வாய் சம்பந்தமான நோய்களுக்குச் சிகிச்சை

SCARBOROUGH
(Kennedy & Finch)
3852 Finch Ave. East,
Units 303
Scarborough, ON
(416) 292-7004

MISSISSAUGA
(Dundas & Hurontario)
3025 Hurontario St.,
Unit 102
Mississauga, ON
(905) 270-7844

உதயன்

மதமாற்றம் தவிர்க்கப்பட்டது
ரொறன்ரோ துர்க்கையம்மனின் அற்புதம்

அம்பாளே! எங்களை மன்னித்துவிடு என்று பக்தர் ஒருவர் மனம்விட்டு அழுத காட்சி

இந்துசமயத்தில் இருந்து மதம் மாற இருந்த ஒரு குடும்பத்தினை அம்பாள் தடுத்தாட்கொண்ட சம்பவம் ஒன்று கடந்த வாரம் ரொறன்ரோவில் நடந்திருக்கிறது.

"அம்பாளே எம்மை மன்னித்துவிடு" என்று சொல்லித் தன்னுடைய குடும்பத்துடன் வந்து ரொறன்ரோ துர்க்கையம்மன் ஆலயத்தில் ஒரு பக்தர் மனம் விட்டு அழுத நிகழ்ச்சி அங்கிருந்த அனைவரினதும் மனத்தினை உருக்குவதாய் அமைந்தது.

கடந்த சில ஆண்டுகளாய் இந்துக்கள் மதம் மாறி வரும் சம்பவங்கள் அதிகரித்து வருவது யாவரும் அறிந்ததே. இவ்வாறு பலரும் மதம் மாறுவதற்கு அடிப்படை, "இவர்களின் அறியாமையே" என்பதைப் பல சம்பவங்கள் சுட்டிக் காட்டுகின்றன. மதம் மாற்றுபவர்களின் வார்த்தைகளில் இம்மக்கள் மயங்கிவிடுகிறார்கள்.

கடந்த வாரம் 'தம்மை அம்பாள் காப்பாற்றிவிட்டாள்' என்று கூறிய பக்தரிடம் அவர் மதம் மாறவிருந்த காரணத்தை அறிய முயன்ற போது, பல விடயங்களை உணர்ந்து கொள்ள முடிகின்றது. அந்தப் பக்தர் கூறியதாவது,

"சில நாட்களின் முன்னர், mall ஒன்றில் ரொறன்ரோ துர்க்கையம்மன் ஆலய பிரதம குருக்களைக் கண்டேன். இலங்கையிலே குருக்களாக இருந்தபோதே அவரை எனக்குத் தெரியும். அவரைக் கண்டதுவும், சற்று விலகிக் காணாதது போல நான் செல்ல முயற்சித்த போது அவரே "நீங்கள் இன்னார்தானே" என்று என்னிடம் கேட்டார்.

"ஆமாம்... நான் உங்களுடன் பேச முடியாது. நாம் மதம் மாறப் போகிறோம். இந்துக் குருமார்களுடன் பேசக்கூடாது என்று எம்மிடம் ..... தினர் கூறியிருக்கிறார்கள்."

என குருக்கள் ஐயாவிடம் கூறினேன். "மதம் மாறப் போகிறீர்களா ஏன்" என்று அவர் கேட்டார்.

"இந்து சமயத்தில் நாங்கள் இருந்த போது எந்த வொரு நன்மையும் கிடைக்கவில்லை. எங்களுடைய குடும்ப நண்பர் ஒருவர் ஏற்கெனவே மதம் மாறிவிட்டார். அவர் எம்மை, தாம் மாறிக் கொண்ட ..... மதத்தவர்களிடம் அறிமுகம் செய்து வைத்தார். அவர்கள் கூறிய பல விசயங்களை அறிந்த போது அந்தச் சமயத்தினால் எமக்குள்ள பல பிரச்சனைகள் தீரும் போல இருக்கிறது. எங்களுடைய குடும்ப நண்பர்கூட, தங்களுக்கு மதம் மாறிய பின்னர் பல நன்மை கிடைத்திருப்பதாகச் சொன்னார்"

இவ்வாறு நான் குருக்களிடம் கூறிய போது, "நீங்கள் எல்லாக் கோவிலுக்கும் போய் எந்த நன்மையும் வரவில்லை என்று சொன்னீர்கள். ரொறன்ரோ துர்க்கையம்மன் ஆலயத்துக்கு வந்திருக்கிறீர்களா" என்று குருக்கள் கேட்டார். "இல்லை" என்று சொன்னேன்.

"நீங்கள் மதம் மாற முன்னர் அம்பாளின் கோவிலுக்கு வந்து அவளிடம் உங்கள் குறைகளைச் சொல்லி முறையிட்டுவிட்டு, அதனால் பலன் இல்லை என்றால் அதன் பின் மதம் மாறுங்கள்" என்று குருக்கள் ஐயா சொன்னார்.

மறுநாள், ரொறன்ரோ துர்க்கை அம்மன் ஆலயம் போக நான் நினைத்த போது, ஏற்கெனவே என்னை ..... மதத்தவர்களிடம் அழைத்துச் சென்ற குடும்ப நண்பரும், அந்த மதஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களும், "மற்றச் சமய கோவிலுக்குப் போனால் பெரிய பாவம்" என்று சொல்லி என்னைத் தடுத்துவிட்டனர்.

அன்று இரவு நான் கண்ட கனா என்னை அதிர வைத்துவிட்டது. அம்பாள் என்னை அரவணைத்து ஆறுதல் சொல்வது போல் கனவு. மறுநாள் ஒருவருக்கும் சொல்லாமல் ரொறன்ரோ துர்க்கையம்மன் ஆலயம் போய் எலுமிச்சை விளக்கேற்றி, எனது மனக்குறை எல்லாம் சொல்லி அழுதேன். இரண்டு நாட்களுக்குள் எனக்கிருந்த பிரச்சனை தீர்ந்துவிட்டது. என்னால் நம்பவே முடியவில்லை. மதம் மாறவிருந்த என்னைத் தக்க தருணத்திலே அம்பாள் தடுத்துக் காப்பாற்றிவிட்டாள்.

இவ்வாறாக அந்தப் பக்தர் தெரிவித்து அம்பாளின் அற்புதத்தைப் புகழ்ந்து கொண்டார். இந்த நிகழ்ச்சியின் பின்னர், இந்தப் பக்தரின் குடும்ப நண்பரும் இந்துசமயத்துக்கு மீண்டு கொண்டனர்.

மேலும், பல மதம் மாறியவர்கள், தாம் மீண்டும் இந்து சமயத்துக்கு வந்துவிட என்ன செய்யவேண்டும் என்று துர்க்கைஅம்மன் ஆலயத்தினை அழைத்துக் கேட்ட வண்ணம் இருக்கின்றனர்.

இது பற்றி ரொறன்ரோ துர்க்கை அம்மன் ஆலய பிரதம குருக்களிடம் கேட்டபோது,

"இந்து சமயம் எப்போதும் எவரையும் வலிந்து மதம் மாற்றுவதில்லை. நம்புபவர்கள் நம் பலம்.. நம்பாதவர்கள் நம்பாமல் விடலாம். அறியாமையால் பலர் மதம் மாறிவிடுகின்றனர். உணரும் போது இந்துசமயத்தில் மீண்டும் திரும்பிவிடுகின்றனர். மேற்படி சம்பவத்தின் பின்னர், துர்க்கையம்மன் ஆலயத்தில் வந்து தாங்கள் மீண்டும் இந்துசமயத்துக்கு வரவேண்டும் என்று குறிப்பிடுகின்றனர். மாறி மாறி சமயத்துக்கு தாவுவதிலும், முதலில் சமயங்களைப் பற்றி படித்து அறிந்து கொள்ளுங்கள். சந்தேகங்களை மதகுருமாரிடம் சென்று கேட்டு அறிந்து கொள்ளுங்கள். இந்துசமய மதகுருமார்கள் சமய அறிவு உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று நாம் அடிக்கடி வலியுறுத்துவதன் காரணம் இதுவே. அம்பாளின் பக்தர்கள் எவரும் இதுவரை மதம் மாறியது கிடையாது. ஒருவர் மனத்தில் அம்பாள் புகுந்துவிட்டால் அவளை எவராலும் தூக்கி எறிய முடியாது."

என்று குருக்கள் குறிப்பிட்டார். கடந்த வருடம் நூற்றுக் கணக்கான பக்தர்கள் ரொறன்ரோ துர்க்கையம்மன் ஆலயத்தில் தீட்சை பெற்றுக்கொண்டதை சகலரும் அறிவர். கனடாவிலே தீட்சை அளித்து சமயம் வளர்க்கும் ஆலயமாக ரொறன்ரோ துர்க்கையம்மன் ஆலயம் திகழ்கின்றது. சைவ சமயத்துக்கு மீண்டும் மாறிக் கொண்ட பல பக்தர்கள் தாம் தீட்சை பெற விருப்பம் தெரிவித்துள்ளனர். மிகவிரைவில் தீட்சைக்கான திகதி அறிவிக்கப்படும். கடந்த வருடம் சகல ஆலயங்களும் தீட்சை வைபவத்தினை வைக்கும் படி கனடா இந்துமத பீடம் பணிவாகக் கேட்டும் எந்தவொரு ஆலயமும் அதைச் செய்ய முன்வரவில்லை. எது எப்படியிருப்பினும், ரொறன்ரோ துர்க்கையம்மன் ஆலயம் இந்துசமய வளர்ச்சியில் முழுமையாக ஈடுபட வேண்டும் என்பதே அம்பாளின் ஆஞ்ஞை (கட்டளை).

கனடா வந்திருந்த தேனிசைத் தென்றல் தேவா ரொறன்ரோ துர்க்கையம்மன் ஆலய நாதஸ்வர தவில் வித்துவான்களின் இசையைப் பாராட்டு

சில வாரங்களுக்கு முன்னர் இசை நிகழ்ச்சி ஒன்றுக்காக கனடா வந்திருந்த தேனிசைத் தென்றல் தேவா அவர்கள் ஆலய தரிசனத்துக்காக ரொறன்ரோ ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் தேவஸ்தானம் வந்திருந்த போது, இவ்வாலயத்தின் தேவஸ்தான வித்துவான்களாகிய தாதாபுரம் டி.எஸ்.கணேசன், டி.எஸ்.ஆறுமுகம் ஆகியோரை வெகுவாகப் பாராட்டினார். நாதஸ்வரத்துடன் இணைந்து ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ. தியாகராஜாக் குருக்கள் கணேஷ்சுவாமிகள் மந்திரங்களை இராகத்துடன் பாடியபோது கேட்டு பரவசம் அடைந்து வெகுவாகப் பாராட்டினார். தென்னிந்தியாவில் ஜலகண்டேஸ்வர தேவஸ்தானத்தின் ஆஸ்தான வித்துவான்களாகிய தாதாபுரம் சகோதரர்கள் டி.எஸ். கணேசனும், டி.எஸ்.ஆறுமுகமும் இந்தியாவில் பல தொலைக்காட்சி வானொலிகளில் புகழ் பெற்றது மட்டுமல்லாமல், பல பிரமுகர்களாலும் கௌரவிக்கப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களின் இன்னிசையைக் கேட்க, ரொறன்ரோ துர்க்கையம்மன் ஆலயத்தின் தினமும் பக்தர்கள் கூடுகின்றனர்.

மற்றுமோர் ஆலயத்தின் நிர்வாகத்தினை ரொறன்ரோ ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் தேவஸ்தானம் ஏற்பு?

ரொறன்ரோ ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் தேவஸ்தானத்தின் நிர்வாக உதவியை மற்றுமொரு ஆலயம் கோரியிருப்பதாகக் கூறப்படும் செய்தி பற்றிப் கேட்டபோது, ஆலய நிர்வாகத்தினர் கருத்துக்கூற மறுத்துவிட்டனர். கனடாவில் ஆலயங்கள் சில பனவருவாய் இருந்தும் உரியமுறையில் நிர்வகிக்கப்படுவதில் பல சிக்கல்கள் இருப்பதாக அவ்வப்போது மக்கள் மத்தியில் பேசப்பட்டது. இன்று கனடாவில் மிகச் சீரியமுறையில் நிர்வகிக்கப்படும் ரொறன்ரோ ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் தேவஸ்தானம், தொடர்ச்சியான ஆலோசனையையும் ஆக்கபூர்வமான திட்டங்களையும் குறிப்பிட்ட அந்த ஆலயத்துக்கு வழங்கவிருப்பதாக பேசப்படுகின்றது.

ஆயினும், நிர்வாகத்தினை ஏற்க ரொறன்ரோ துர்க்கையம்மன் ஆலயம் மறுத்துவிட்டதாகவும் ஊர்ஜிதப்படுத்தாத செய்திகள் தெரிவிக்கின்றன. குறிப்பிட்ட இந்த ஆலயம் தற்போது இயங்கும் ஆலயமா அல்லது இனிமேல் அமையப்போகும் ஆலயமா என்று கேட்டதற்கும் துர்க்கையம்மன் ஆலயம் கருத்துக்கூற மறுத்துவிட்டது. இவ்வாறு ஆலயங்கள் ஒன்றுக்கொன்று பரஸ்பர நல்லெண்ணத்துடன் செயற்படுவது கனடாவில் இந்துசமயத்தின் எதிர்காலத்தில் நம்பிக்கையை அளிக்கிறது என்று இந்துசமயப் பெரியார்கள் கருதுகின்றனர். ரொறன்ரோ துர்க்கையம்மன் ஆலயத்தின் உயர்ந்த மனப்பான்மையைப் போற்றியுள்ளனர்.

முறைப்படியாக இந்துசமய சேவைகளைப் புரிய இந்துக் குருமார்கள் கனடா வருகை

கனடாவில் திருமணம் முதல் கொண்டு பல வீட்டு வைபவங்கள் வேத, ஆகம முறைப்படி நிகழ்வதில்லை என்று பல இந்துக்களுக்கு அதிருப்தி நிலவுகின்றது. இதை நிவர்த்தி செய்ய இலங்கை இந்தியாவில் இருந்து, இத் துறைகளில் கல்வி அனுபவம் உள்ள இந்துக்குருமார்களை வரவழைக்க கனடா இந்துமத பீடம் தீர்மானித்துள்ளது. கனடாவில் சமயக்கல்வி போதனை செய்யக்கூடிய ஆங்கிலப்புலமையும் உள்ளவர்களையே வரவழைக்க ஏற்பாடுகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. நீண்ட காலமாக கோவில் பணியுடன் மட்டும் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ரொறன்ரோ ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் தேவஸ்தானம் தனது முழுமையான ஒத்துழைப்பை கனடா இந்து மத பீடத்துக்கு கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எதிர்காலத்தில் கனடாவில் இந்துசமய விவகாரங்களை நிர்வகிக்கும் ஒரு ஸ்தாபனமாக கனடா இந்துமதபீடம் திகழும் என்ற இந்துக்கள் அனைவரினதும் அபிலாசை ஈடேறும் என்றும் அறியப்படுகின்றது.

ரொப் குவாலிட்டி பூக்கடை

ஏன் எல்லோரும் இங்கு வருகிறார்கள்? இவர்கள் இயற்கையை இயற்கையாக தருபவர்கள். அழகா? ஆன்மீகமா? அத்தனையும் ரொப் குவாலிட்டி பூக்கடையில் நிறைந்திருக்கிறது.

பூக்கள், பூமாலைகள், மணவறை, பூச்செண்டு, பூக்கூடை, பூசோடனைகள்
மலர் வளையம் பூச்சோடனைகள் casket அலங்காரம் casket spary
மணவறைகளில் பல ரகங்கள் விதம்விதமாய் .... இன்னும் பல

தொடர்பு கொள்க : பிள்ளை

2871 Lawrence Avenue East
Scarborough
Tel : (416) 269 5522 Fax : (416) 269 9784

இலங்கை அரசும் விடுதலைப்புலிகளும் பொறுமையை கடைப்பிடிக்க வேண்டும்-அமெரிக்க அமைச்சர் வேண்டுகோள்

அமெரிக்கா பிரிட்டன் நோர்வே போன்ற உலக நாடுகளின் நல்லெண்ணமும் ஆதரவுமும் இலங்கையின் இனப்பிரச்சனை தீர்வுக்கு கிடைத்தாலும் தீர்வு என்பது மிகக் கடினமான விடயமாகும் இலங்கை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் இயலுமானவரையில் பொறுமையை கடைப்பதிடிக்கவேண்டும் இவவாறு நோர்வேயில் இடமபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் தொடரபாக நோர்வேயில் செய்தியாளர் மத்தியில் உரையாற்றிய அமெரிக்க அமைச்சர் ஆர்மிரே தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசுகையில் தனது இலங்கை விஜயம் பற்றியும் விபரமாக பேசினார்

சில மாதங்களுக்கு முன்னர் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது.நான் அங்கிருந்தபொழுது யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குச் சென்றேன். ஹெலிகொப்டரில் அங்கு சென்றபோது சிதைவடைந்து சின்னாபின்னமாகியிருந்த இடங்களைப் பார்த்தேன். ஆயிரக்கணக்கான குண்டுத் துளைகளும் அழிவுகளும் 20 வருடகால யுத்தத்தின் பெறுபேற்றை எமக்கு எடுத்துக்காட்டின. அழிவடைந்த நகரத்தைக் கண்டேன். முன்னரங்கப் பகுதியில் இருதரப்பிலும் படையினரும் மற்றைய தரப்பினரும் நின்றுகொண்டிருந்தனர். ஒருவருக்கு ஒருவர் மிகவும் நெருக்கமாக முகங்களைப் பார்க்கக் கூடியதாக இருந்தது. தமிழ் இளைஞர்களுடன் நாங்கள் பேசினோம். அவர்களிடமிருந்து நம்பிக்கையும் அதேவேளை யுத்த உணர்வை வெளிப்படுத்தும் வார்த்தைகளும் வெளிவந்தன. யாழ்ப்பாணத்தில் நாம் பார்த்தவை யுத்தத்தைத் தவிர வேறொன்றைப் பற்றியும் அதிகம் அறிந்திராத ஒரு தலைமுறையினரைத் தான் நம்பிக்கை இழந்திருந்த மக்களுக்கும் குண்டுகளினால் அழிந்துபோயிருந்த கிராமங்களுக்கும் சிறப்பான வாழ்க்கையை ஏற்படுத்துவதற்கான தீர்வொன்று தேவையென்பதே அச்சமயம் எனக்கு மிகவும் தெளிவாகத் தெரிந்தது. அதற்கான நடவடிக்கைகள் அங்கு ஆரம்பமாகியிருந்தன. ஆனால் யுத்தத்தில் பங்குகொண்ட இரு தரப்பினருக்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற உறுதியான தீர்மானம் ஒன்று பிறந்திருக்கிறது. அத்துடன் இலங்கையர் யாவருமே சமாதானம் ஏற்படவேண்டும் என்று ஒட்டுமொத்தமாக விரும்புகின்றனர். தமிழர்கள் சிங்களவர்கள் முஸ்லிம்கள் யாவருமே சமாதானத்தையே எதிர்பார்க்கின்றனர் இதனை சர்வதேச சமூகத்தின் உறுதியான ஆதரவுடனேயே முன்னெடுத்துச் செல்லமுடியும். இங்கு எனது நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தி நான் சமுகமளித்திருப்பது எனக்குக் கிடைத்த கௌரவமாகும். அமெரிக்கா தனது பங்களிப்பை இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கு வழங்க ஆயத்தமாக இருக்கிறது என்ற உறுதிமொழியை உங்களுக்கு நான் வழங்குகிறேன் மற்றைய நாடொன்று அசாதாரணமான முறையில் எமக்கு நீண்டகாலமாகப் பங்களிப்பை நல்கி வருகிறது. நோர்வேக்கு சமாதானத்தை உருவாக்கும் பணியென்பது புதிதான விடயமல்ல. நோர்வே அரசாங்கத்திற்கு ஜனாதிபதி புஷ்சின் சார்பில் எனது பாராட்டைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். உலகளாவிய ரீதியில் சமாதானத்தை ஏற்படுத்தும் சக்தியாக நோர்வே விளங்குகிறது. அந்தப் பாரிய முயற்சியின் பயனாகவே இன்றுநாம் இங்கு குமுமியிருக்கிறோம். இலங்கைக்கு சமாதானப் பாதையை நோர்வே காட்டியுள்ளது. அந்தப் பாதையில் இறங்கிச் செல்வது இப்போது இலங்கையின் கடமையாகும். யுத்தம் பயங்கரவாதம் அச்சம் என்ற நிலையில் இருந்து இலங்கையர் யாவருமே விடுவிக்கப்பட்ட பொழுது உலகம் அதனை மகிழ்வுடன் பார்க்கிறது சுபீட்சம் ஸ்திரத்தன்மை ஆகிய உறுதியான இலக்கை எட்டுவதற்கு இலங்கை அரசாங்கத்திடமிருந்து மிகவும் பலம் வாய்ந்த ஆழமான ஈடுபாடு வெளிப்பட வேண்டியது அவசியமானதாகும். இதற்கான சகல வெகுமதியையும் ஜனாதிபதி குமாரதுங்கவிற்கு நாங்கள் வழங்கவேண்டும். நீண்டகாலத்திற்கு முன்பே இதுதான் நாட்டிற்குத் தேவையானது என்று அவர் அறிந்திருந்தார். 1995 இல் அவர் முன்னெடுத்த சமாதானத் திட்டமானது தற்போதைய நடவடிக்கைகளிற்கு முக்கியமான அம்சமாக விளங்குகிறது. இன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் சமாதானப் பாதையில் துணிச்சலான நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்கிறது. கடந்த ஜூலையில் வாஷிங்டனில் பிரதமருக்கு நேரடியாக பாராட்டுத் தெரிவிக்கும் சந்தர்ப்பம் ஜனாதிபதி புர்ரிற்குக் கிடைத்தது. பிரதமரின் தலைமைத்துவத்தையும் துணிச்சலையும் புஷ் பாராட்டியிருந்தார். இலங்கையானது தற்போதைய நிலைப்பாட்டைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதென்றால் அரசாங்கம் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் என்பது தெளிவான விடயம். தனி நபரோ தனியான அரசியல் கட்சியோ இந்தச் சுமையைத் தனித்து தாங்கிச் செல்ல முடியாது. ஜனாதிபதி பிரதமர் அவர்களின் கட்சிகள் யாவுமே ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும். அத்துடன் விடுதலைப் புலிகள் முழுமையாகவும் திறந்த மனதுடனும் தமது பங்களிப்பினைச் செலுத்தவேண்டும்நியாயபூர்வமான அபிலாசைகளை பயங்கரவாத தந்திரோபாயங்களால் ஒருபோதுமே வென்றெடுக்க முடியாது என்பதில் எனது நாடு உறுதியான நிலைப்பாட்டில் இருக்கிறது.

(தொடர்ச்சி 20ம் பக்கம் பார்க்க)

வருடமொன்றிற்கு $ 3000 வரை உழையுங்கள்

Finally...

Interac Credit Card

Wireless Terminal

$1995 + taxes
Purchase Price

$2495 + taxes
Cordless Terminal

0%
Down Payment with
48 Months Lease to Own

- FREE Paper Supplies
- Swipes/Trans. Zero Debit Free
- Full Service

Free installation & on site training
Free upgrades. Lifetime replacement warranty

Income Potential
Retail surcharge fee 15cts.,Cash back fee $ 1.00

DELIVERY IN 21 DAYS

POS Solutions
www.possolutions.ca

Interac DIRECT PAYMENT

Bad Credit? Bankrupt? No Problem !!!

Call NARESH Tel: 416-522-3672

145 Carlton Street, Suite 219, St. Catherines, ON L2R 1R5
1-877-552-5563 Direct: 905-684-8867 www.tangerineconcepts.com Fax: 905-684-9349

Reference: Aradhana Star Fashion: 416-740-7711, Sri Sakthi Jeweller: 416-499-6345, Ross Convenience: 416-398-4114, SUBWAY: 416-756-3631
McDonalds Restaurant: 905-686-2172, Daily Needs SuperMarket: 416-490-7703, Have Nice Day Bar: 416-724-1212, Ideal Tile: 905-763-4295,
Kajan Coffee Bar: 416-298-3028, Peter Joseph & Associates: 416-757-7707

உங்கள் வீட்டுச் சமையல்களிலும்
விருந்துகளிலும் கட்டாயம் இருக்கவேண்டியது.

So Soya+
இரசாயனக் கலப்பற்ற சோயா உணவு
Tel : 416-293-6555
Fax: 416-293-6459
Web: www.so-soyaplus.com
e-mail: info@portello.com
Not a Genetically Engineered Product

கனடிய நண்பன்
CANADIA NANPAN

கதைக்கும் கல்லறைகள்

உருவகக் கதை

அந்தக் கல்லறையின் மீது துப்பாக்கி ஒன்று வைக்கப்பட்டிருந்தது அதைப் பார்க்கும் போது ஒரு போர் வீரனின் மார்பில் துப்பாக்கி வீற்றிருப்பதைப் போல் ஒரு பிரதிபலிப்பு,

கல்லறையின் கால்ப்பகுதியில் ஒரு மெழுகுவர்த்தி எரிந்து கொண்டிருந்தது. அதைப் பார்க்கும் போது கண்ணீர்த் துளிகள் வழிவதைப் போல் இருந்தது.

இதைக் கவனித்த துப்பாக்கிக்கு அடக்க முடியா கோபம் வந்தது, ஏய் மெழுகுவர்த்தியே! ஏன் இப்படி அழுது தொலைக்கிறாய்? இங்கு உறங்கிக் கொண்டிருக்கும் என் தலைவன் தனது உயிர் பிரிகின்ற அந்தக் கடைசி நேரத்திலும் ஒரு துளி கண்ணீர் கூட வடிக்கவில்லை. அவருக்காக நீ! கண்ணீர் வடிக்கின்றாயா? வேண்டாம் நிறுத்து. இங்கு என் தலைவனைப் படுக்க வைக்கும்போது துப்பாக்கிகளை வெடிக்கவைத்து அஞ்சலி செலுத்தித்தான் துயில வைத்தார்கள். அப்படிப்பட்ட மாவீரனின் காலடியில் கண்ணீர் துளிகளா? வேண்டாம் நிறுத்து. இப்படி கண்கள் சிவக்க கோபத்தில் கத்தியது துப்பாக்கி.

கண்ணீரைச் சொரிந்தபடியே மெழுகுவர்த்தி சொன்னது துப்பாக்கி நண்பரே! உமது விசுவாசத்திற்கு நன்றி. உமது தலைவன் தன் உயிர் துறக்கும் அந்தக் கடைசி நேரத்தில் கண்ணீர் வடிக்காமல் இருந்திருக்கலாம்! ஆனால் அவரின் மனதில் கவலை இல்லாமல் இருந்திருக்குமா? ஏக்கம் இல்லாமல் இருந்திருக்குமா? நான் தாயைப் போன்றவள். எனக்குத் தெரியும் உயிர் பிரியும் நேரத்தில் மனிதனின் கவலைகளையும், ஏக்கங்களையும் பற்றி அந்த கவலையை மறந்து அவர்களின் ஆத்மா சாந்தியடைவதற்காகவே நான் இங்கு கண்ணீர் சிந்தி பிரார்த்தனை செய்கின்றேன். என்னை அழவிடு. என்னை அமைதியாக அழவிடு! என்று உருக்கமாகக் கேட்டுக் கொண்டது மெழுகுவர்த்தி.

என்ன! மரணிக்கும் போது என் தலைவன் கவலைப்பட்டாரா? ஏக்கப்பட்டாரா? எனது தலைவன் எப்படி இறந்தார் என்ற சரித்திரம் உனக்குத் தெரியுமா? களமுனையில் தம் அணியின் வெற்றிக்குத் தடையாக இருக்கும் காவல் அரண்களை உடைத்தால்த்தான் எதிரிகளின் கோட்டைக்குள் தமது படையணி நுழைய முடியும் என்பதனால் உடம்பில் வெடிமருந்துகளைச் சுமந்து கொண்டும், கரங்களில் என்னை இயங்கவைத்துக் கொண்டும் எதிரிகள் இமை மூடித் திறப்பதற்குள் அவர்களின் கோட்டைக்குள் நுழைந்து சிரித்துக் கொண்டே தன்னை வெடிக்க வைத்த தற்கொடையாளி அவர். அவரைப் பார்த்தா கவலைப்பட்டார்! ஏக்கப்பட்டார்! என ஏளனம் செய்கின்றாய்? என்று தன்னைப் போலவே வார்த்தைகளையும் வெடித்துக் கொட்டியது துப்பாக்கி.

அப்பொழுது கல்லறைக்குள் இருந்து

வண்ணை தெய்வம் (பிரான்ஸ்)

அசரீரியாக மரணித்த அந்த மாவீரனின் குரல் ஒலித்தது.

தோழா! மெழுகுவர்த்தி சொல்வது உண்மைதான். எனது உயிர் பிரியும் அந்தக் கடைசி நேரத்தில் கவலை இருந்தது உண்மைதான்! ஏக்கம் இருந்தது உண்மைதான்.

கல்லறையில் இருந்து கதைத்த தனது தலைவனின் பேச்சை துப்பாக்கியால் நம்ப முடியாமல்

இருந்தது. என் தலைவனா இப்படிப் பேசுகின்றார்? சிரித்துக் கொண்டே தனது ஒரு உயிரைக் கொடுத்து எதிரிகளில் பலரைச் சாகடித்த எனது தலைவரா இப்படிப் பேசுகிறார்? அதிர்ச்சியுடன் அசையாது கிடந்தது துப்பாக்கி.

கல்லறை மீண்டும் பேசியது. தோழா அந்தக் கடைசி நேரத்தில் எனது மனதில் ஒரு ஏக்கம் இருந்தது. அது எனது உடல் வெடித்துச் சிதறும்போது என்னுடன் சேர்ந்து குறைந்தது ஐம்பது எதிரிகளாவது வெடிக்க வேண்டும் என்ற ஏக்கம் இருந்தது. ஆனால் இறந்தவர்களின் எண்ணிக்கை வெறும் பதினொன்று தான் என தெரிந்தபோது என்னால் இன்னும் சிலரையாவது கூடுதலாகக் கொல்ல முடியவில்லையே என்ற கவலையுடன்தான் எனது உயிர் பிரிந்தது. இன்னும் அந்தக் கவலை இருக்கத்தான் செய்கின்றது தோழா!

தனது தலைவனின் கல்லறை கதைப்பதைக் கேட்கக் கேட்க இரும்பு மனம் கொண்ட அந்தத் துப்பாக்கியின் கண்களிலும் ஈரம் கசிந்தது.

கண்ணீர் வடித்துக் கொண்டே துப்பாக்கி சொன்னது,

சிரித்துக் கொண்டே மரணித்தாலும் வீரர்கள் துடித்துக் கொண்டே உறங்குகின்றார்கள்.

எங்கள் தெய்வமகன்

வி. கந்தவனம்

இவன்
காலைக் கதிரவன் அல்லன்
நள்ளிரவிலேயே உதித்துவிட்ட
நவீன சூரியன்

இவன் தாகம்
தமிழீழத் தாயகம்
இவன் வேள்வி
தமிழரின் புதுயுகம்!

முன்பு
காகங்கள் இடைக்கிடை கரைந்தன
நல்ல சேதி வரும் வரும் என நம்பிக்
காலந்தான் கரைந்தது!

தோற்றுப்போன காகித அரசியல்
ஆற்றல் மிக்க
ஆயுத அரசியலை ஈன்றது.
ஈன்ற பொழுதிற் பெரிதுவக்க
இவன் உதித்தான்
நெருப்போடு!
பொறுப்போடு!
கொட்டுகிறது இவன் முரசு!

குனிந்தவர் நிமிர்ந்தார்!
நிமிர்ந்தவர் விழித்தார்!
விழித்தவர் திரண்டார்
திரண்டது புலிப்படை!

இவன் புலியா
அல்லது புலிதான் இவனா?
இவன் வீரனா
அல்லது வீரந்தான் இவனா?

இவன் துணிவு
என்னையும் இளைஞன் ஆக்குகின்றது!

இவன்
தமிழர் தலைவன்
தமிழினம் இதுவரை கண்டிராத
தனிப்பெரும் மன்னன்!

காட்டிலும் இருப்பான்
நாட்டிலும் இருப்பான்
பகைவர்
வீட்டிலும் இருப்பான்

எங்குதான் கற்றான் இந்த வியூகங்கள்
கங்குலும் வியக்கும்
கரந்துறை மாயங்கள்!

இவன் புதிய சரித்திரம் வரைகின்றான்
வீர இரத்தத்தில்
அதனால்
தமிழர் தினம் பூசிக்கின்றனர்
இவனைச் சித்தத்தில்!

ஆம்!
இத் தெய்வமகன்
மண்ணினை மீட்பான்!
மானத்தைக் காப்பான்
விண்ணை வளைத்தேனும்
விடுதலை கொடுப்பான்
அது உறுதி அதி உறுதி

UNIVERSITY OF TORONTO LIBRARY 31 DEC 2002 PERIODICALS

விடுதலைப் புலிகளின் இராணுவ பலத்திற்குக் கட்டியம் கூறும் கஞ்சி குடிச்சாறு பயிற்சிப் பாசறை விழா

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த விடுதலைப்புலிகளும் இலங்கை அரசும் நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் இவ்வேளை விடுதலைப் புலிகள் தங்கள் படை பலத்தை எவ்விதத்திலும் குறைய விடவில்லை என்பதை உலகிற்கு அறிவித்த நிகழ்வு அண்மையில் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்றது.

தற்போது அரசியல் நடவடிக்கைகளை புலிகள் மேற்கொண்டு வந்தாலும் மறுபக்கம் கடந்தகால வரலாறுகளைக் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டிய கட்டாயம் புலிகளுக்கு உள்ளது. இதன் நோக்கமே ஆட்சேர்ப்பும் படைப்பலத்தின் வளர்ச்சியுமாகும். கடந்த ஞாயிற்றுக் கிழமை அம்பாறை மாவட்டத்தில் கஞ்சிக் குடிச்சாறில் விடுதலைப் புலிகளின் கமாண்டோ பயிற்சியைப் பெற்ற பத்தாவது பயிற்சிப் பாசறை வெளியேற்ற நிகழ்வு மிகவும் உணர்வு பூர்வமாக நடைபெற்றது. இங்கு விசேட பயிற்சியைப் பெற்ற விடுதலைப் புலிகளின் 117 விசேட கொமாண்டோக்கள் தமது பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறினர்.

கஞ்சிக்குடிச்சாறு அம்பாறை மாவட்டத்தின் எல்லையில் அமைந்துள்ளது. இங்கு பெரும் காடுகள் உள்ளன. கடந்த எண்பதுகளில் இங்கு விடுதலைப் புலிகள் மாத்திரமன்றி ஏனைய இயக்கங்களின் பாசறைகளும் இருந்தன. பெருங்காடுகளும் மலைகளும் நிறைந்துள்ள இப்பெருங் காட்டில் தற்போது விடுதலைப் புலிகளின் பல முகாம்கள் உள்ளன. இங்கு பயிற்சி பாசறைகளும் அமைந்துள்ளன. இவ்வாறான மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் உள்ள ஒரு விளையாட்டு மைதானத்திலேயே இந்த பயிற்சிப் பாசறை நிகழ்வுகள் இடம் பெற்றன. இதில் இன்னுமொரு முக்கியத்துவம் என்னவெனில் இங்கு பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறும் படை வீரர்களின் பெற்றோர் மற்றும் பொது மக்களும் அழைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக விடுதலைப் புலிகளின் மட்டு அம்பாறை மாவட்ட இராணுவ சிறப்புத் தளபதி ரி. ரமேஸ் கலந்து கொண்டு ஈகைச் சுடரினை ஏற்றி வைத்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். இந்த வீரர்களுக்கிடையில் மேஜர் கிட்டு, மேஜர் ராஜேஸ் என இரு இல்லங்கள் பிரிக்கப்பட்டு காலையில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. புலிகள் நினைத்திருந்தால் ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சிப் பாசறை வெளியேற்றம் என்பனவற்றை மறைவாகவும் இரகசியமாகவும் நடத்தியிருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யாமல் வெளிப்படையாகவே நடத்தி உள்ளனர். இதன் மூலம் தமது படைப்பலத்தை இந்நாடு மாத்திரமன்றி உலக நாடுகளுமே அறிய வேண்டும் என்பதிலும் தமது படை உருவாக்கம் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது என்பதையும் அறிய வேண்டும் என்பதில் கரிசனையாக உள்ளனர்.

ஆட்சேர்ப்பும் பயிற்சி வழங்கலும் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முரணான செயலல்ல. இந்த ஒப்பந்தத்தில் இரு தரப்பினருமே தமது படைக்கு ஆட்சேர்க்க முடியும் எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால் அண்மைக் காலமாக புலிகள் ஆட்சேர்த்து பயிற்சி வழங்கியது போன்று படைத் தலைமைகள் பெரும் பிரயத்தனம் செய்தும் படைக்கு ஆட்களைச் சேர்க்க முடியவில்லை. இதனால் அவர்கள் மத்தியில் பெரும் சங்கடம் ஏற்பட்டுள்ளது.

கஞ்சிக் குடிச்சாற்றில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கொமாண்டோ படையணியின் இராணுவ அணிவகுப்பு நடைபெற்றது. இந்த அணிவகுப்பு மரியாதையை சிறப்புத் தளபதி ரமேஸ், அம்பாறை மாவட்ட இராணுவத் தளபதி ஜனார்த்தனன், மட்டு அம்பாறை மாவட்ட மருத்தவத்துறை பொறுப்பாளர் வாமணன், அம்பாறை மாவட்ட தாக்குதல் படையணித் தளபதி திலக் மற்றும் கீர்த்தி ஆகியோர் ஏற்றுக் கொண்டனர். இந்த அணிவகுப்பை அடுத்து நடைபெற்ற கண்காட்சியின் சில காட்சிகள் விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் சமாதானத்தை நேசிக்கின்றார்கள் என்பதையும் இன ஐக்கியத்தை பேணுகின்றனர் என்பதையும் எடுத்துக் காட்டியது. ஒரு நிகழ்வில் தமிழ் சிங்கள முஸ்லிம் மதகுருமார் ஒன்றாக இணைந்து சுலோக அட்டைகளுடன் சமாதானத்தை வரவேற்கும் காட்சியும் மற்றொரு கட்டத்தில் இராணுவ வீரர் ஒருவரும் விடுதலைப் புலி வீரர் ஒருவரும் கைகொடுத்து சமாதானத்தை ஏற்படுத்தும் காட்சியும் மற்றொரு நிகழ்வில் விடுதலைப்புலி இயக்கத்தில் இருக்கும் தனது பிள்ளையைச் சந்திக்கும் தாய் தண்ணீர் கொடுத்து ஆரத் தழுவி முத்தமிடும் காட்சியும் காண்பிக்கப்பட்டன.

இவற்றைக் கண்ணுற்றபோது தற்போதைய சூழ்நிலையில் சமாதானத்தில் விடுதலைப் புலிகள் எவ்வளவு நம்பிக்கை வைத்துள்ளனர் என்பதையும் விடுதலைப் புலிகளின் தளபதிகளும் இராணுவத் தளபதிகளும் சமாதானத்திற் காகச் சந்தித்துக் கைகொடுத்து பேச்சு வார்த்தை நடத்துவதையும் பிரதிபலிப் பதைக் காணக்கூடியதாக இருந்தது.

சமாதான வேட்கையும் இன ஐக்கியமும் பிரதிபலித்த கண்காட்சியை அடுத்து விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களை சிறப்புத் தளபதி ரமேஸ் பரிசு வழங்கி கௌரவித்ததுடன் படையணி வீரர்களுக்கும் அவர்களின் பெற்றோருக்குமாக உரையாற்றினார்.

"கடந்த காலங்களில் பேச்சுவார்த்தை என்ற போர்வையில் சிறீலங்கா அரசு தமிழ் மக்களை ஏமாற்றி வந்தது. இந்த முறையும் அந்த பிழையை ஆட்சியாளர்கள் விடமாட்டார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. மீண்டும் தமிழ் மக்கள்மீது அரசு அடக்குமுறையையும் இராணுவக் கெடுபிடிகளையும் பிரயோகிக்குமானால் நாம் எமது படைப்பலத்தின் மூலம் தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுப்போம்" என்று கூறினார். மேலும் அவர் கூறுகையில், "கடந்த காலங்களில் போர் காரணமாக எமது மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்தனர். உயிர், உடல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் அவர்கள் பாதிக்கப்பட்டனர். அவர்களின் இந்த பாதிப்பைக் கருத்தில் கொண்டே எமது தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் பேச்சு வார்த்தை மூலமாக தமிழ் மக்களின் உரிமைகளை பெற்றுக் கொடுக்க முன் வந்துள்ளார். இந்த பேச்சுவார்த்தை சர்வதேச ரீதியாக நடைபெற்று வருகின்றது. இதன் மூலம் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுத்து அவர்கள் உரிமையுடன் வாழ முடியும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாம் பலம் இழந்தவர்களாக இருக்கக் கூடாது. எமக்கு போர் நடத்த வேண்டும் என்ற ஆசையில்லை. நாம் போரை விரும்பவும் இல்லை. ஆனால் நாம் பலமான படையொன்றை வைத்திருக்க வேண்டும். அவ்வாறு இருக்கும் வேளையிலேயே எமது உரிமைகளை நாம் வென்றெடுக்க முடியும்" என்றார். மருத்துவத் துறைப் பொறுப்பாளர் வாமணன் பேசுகையில் "நாம் எமது உரிமைகளை வென்றெடுப்பதற்காகவே போராட்டம் நடத்தினோம். இன்று சமாதானச்

தொடர்ச்சி 17 ம் பக்கம் பார்க்கவும்

DR. KUGANANTHY RAVINDRAN
B.D.S., M.S., F.D.S.C.S (England)
FAMILY DENTIST
குடும்ப பல் வைத்தியர்
திருமதி. குகாநந்தி ரவீந்திரன்

* Cosmetic Dentistry
* Crown & Bridge
* Orthodontics
* Denture
* Root Canal Treatment
* Gum Treatment
* Whitening
* Wisdom Tooth Removal

எல்லா விதமான பல் வைத்திய சேவைக்கும்
ஆலோசனைகளுக்கும் நம்பிக்கையுடன் நாடுங்கள்

416-281-7555

Scarborough Professional Centre
1371 Neilson Road, Suite 212,
Scarborough, ON, M1B 4Z8

FREE PARKING

வாஜ்பாயைவிட்டு விலகிச் செல்லும் கலைஞர் கருணாநிதி

கலைஞர் கருணாநிதியின் அரசியல் எதிர்காலம் கேள்விக் குறியாக உள்ள இந்த வேளையில் இந்தியாவின் மத்திய அரசிற்கும் கலைஞரின் கட்சிக்கும் இடையில் உள்ள உறவு பற்றி இந்தியா முழுவதும் விமர்சிக்கப்பட்டு வருகின்றது. தமிழகத்தில் பதவியை இழந்தது முதல் கலைஞர் உற்சாகமாக இல்லை. தான் ஆட்சியில் சிறப்பாகச் செயல்பட்டிருந்தாலும் 'தகாத சகவாசம்' தான் தன்னைக் கோட்டையை விட்டுத் துரத்திவிட்டது என்பதை அவர் உணரத் தலைப்பட்டார். அடுத்து நள்ளிரவில் தான் துணிவோடு கைது செய்யப்பட்ட நிகழ்ச்சி உண்மையிலேயே அவரை அதிர்ச்சியடையச் செய்தது. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் அம்மா அவர்கள் ஓர் வேட்டை நாய்போல் தன்னைத் துரத்துகிறார் என்பது நெத்தியடியாகவும் அவருக்குப்பட்டது.

இந்நிகழ்வில் மத்திய அமைச்சர் மாறனும் தாக்கப்பட்டிருந்தும் வாஜ்பாய் அரசு சொல்லும்படியாக ஜெயலலிதாவிற்கு எதிராக எந்த நடவடிக்கையும் அவிழ்த்துவிட்டதோடும் விடயம் நாளடைவில் பழங்கஞ்சியாகிவிட்டது. 'நெஞ்சுக்கு நீதி' எழுதிய கலைஞரின் நெஞ்சம் தனக்கு நீதி கிடைக்கவில்லை என்று பொருமத் துவங்கியது உண்மை. அத்தோடு நிலைமை நிற்கவில்லை. ஜெயலலிதாவின் ஆட்டத்திற்குத் தாளம் போட தமிழக பா.ஜ.க. ஆரம்பித்ததும் சினந்த கலைஞர் தமிழகத்தில் உங்களோடு உறவில்லை டெல்லியில் மட்டும்தான் உறவு என்று தான் கண்டு பிடித்த புதிய சித்தாந்தத்தின்படி உறவை வெட்டினார்.

99ஆம் ஆண்டில் வாஜ்பாய் அரசை தி.மு. ஆதரிக்க அரசியல் நிர்ப்பந்தம்தான் காரணம் என்பதை மறக்க முடியாது. சனி இருக்கும் இடத்தில் சுக்கிரனும் இருக்க முடியாது என்பதுபோல் ஜெ. இருக்கும் காங்கிரஸ் கூடாரத்திற்கு தாங்கள் வரமுடியாது என்று அவர் மூப்பனாரிடம் அழுத்திக் கூறியதும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதுதான். ஆனால் காலமெல்லாம் பகுத்தறிவு வாதம் பேசிய தலைவர் எப்படி திடீரென பஜனைக் கோஷ்டியோடு சேர்ந்து "ஹர ஹர சம்போ" என்று வீதியில் இறங்கினார் என்று ஆதரவாளர்களிடம் தோன்றிய கேள்விகளுக்கு இவர் கூறிய பதவிகள் எடுபடவில்லை என்பதைத்தான் சென்ற தேர்தல் முடிவு தெளிவாகக் காட்டியது. மேலும் பா.ஜ.க.அரசை அப்படியே ஆதரித்தாலும் சந்திரபாபு நாயுடுபோல் அமைச்சரவையில் சேராது தனது சிறுபான்மை வாக்கு வங்கியையும் இழக்காது டெல்லியில் இருந்து கிடைக்கும் இலாபத்தையும் விடாது சாமர்த்தியமாகக் காய் நகர்த்தி இருக்கலாமே என்று சில உடன்பிறப்புக்களின் வினாக்களுக்கு கழகத்திடமிருந்து சரியான பதில் வரவில்லை; இனியும் வராது. காரணம் அண்ணாவிற்குப் பிறகு கலைஞர் ஆட்சிக்கு வந்தபின் கழகத்தின் போக்கு மக்கள் நலன் என்பதைவிட கழகத்தின் நலன் என்றே செயல்படத் தொடங்கியது. பின்பு அது தலைவர்களின் நலன் என்று ஒரு காலத்தில் மாறத் தொடங்கி இப்போதெல்லாம் குடும்ப நலன், குடும்ப வருவாய் என்பதே கழகத்தின் வெளியே சொல்லாத அரசியல் கொள்கையாக உள்ளது. அதற்கு வித்திட்டு உரமேற்றி வளர்த்து இன்று கலைஞர் குடும்பம் இந்தியாவின் முதல்தர பணக்காரக் குடும்பங்களில் ஒன்று என்ற (அவப்) பெயர் இருப்பதை விஷயமறிந்த யாராலும் மறுக்க முடியாது. போதும் பொன் என்ற நிலைக்கு கழகத் தலைவர் இன்று வந்து விட்டார். இந்தப் பெண் தன்னை விரைவில் மண்ணுக்கு அனுப்பிவிடுவாள் என்று அவர் உறுதியாக நம்புகிறார். இன்னும் சில காலம் அவர் உயிரோடு இருக்க வேண்டுமானால் வாஜ்பாய் அரசிற்கு கடிவாளம் போட வேண்டும் என்ற நினைப்பில் நவம்பர் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வேலூர் சிறையில் இருக்கும் அன்புத் தம்பியைப் பார்க்கக் கிளம்பிவிட்டார்.

"பா.ஜ.க. தீண்டத்தகாதவர்கள் அல்ல" என்று திருவாய் மலர்ந்து தி.மு.கவை பா.ஜ.க வோடு ஒட்டிய முரசொலி மாறன் மரணப்படுக்கையில் கிடக்கிறார். மாறன் பிழைப்பது அரிது என்ற நிலையில் பிழைத்தாலும் இனி அரசியலில் அவர் இல்லை என்பது உறுதி. ஆகவே கலைஞருக்கு டெல்லியில் இனி அமைச்சர் பதவி அவசியமல்ல. தன்னைக் காக்கும் பணியே முக்கியம். ஆகவே மருமகன் இல்லாத நேரத்தில் அவர் மனம், அவர் மகன் மனம் புண்படாதவகையில் மாமா காய் நகர்த்துகிறார்.

வைகோவோடு கூட்டணி என்பது அடுத்து வரப்போகும் காட்சி. இணைப்பு என்பது இதன் வெற்றியைப் பொறுத்தது. வெற்றிகரமான 100 நாட்களை சிறையில் கழித்து களைத்திட்ட தென்பாண்டி சிங்கம் இப்போது நீதிமன்றத்திற்குச் சென்றிருப்பது இச்சந்திப்பின் முதல்படி. "டெல்லியை நீயும் தமிழகத்தை ஸ்டாலினும் பார்த்துக் கொள்ளுங்கள்" என்பதே கலைஞரின் இறுதி உயில். இத்திட்டம் உருவெடுத்து வரும்போது மெல்ல மெல்ல கழகம் டெல்லியை விட்டு ஒதுங்கும்.

இது நிற்க ஜெயலலிதா அரசு அமுல்படுத்திய மதமாற்ற எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிராகச் சிறுபான்மையினர் குறிப்பாக கிறிஸ்தவர்கள் எந்த அச்சமுமின்றி தங்கள் எதிர்ப்பை ஒட்டுமொத்தமாகக் காட்டியதும் கூட்டிய கூட்டத்திற்கு கடல்போல் வந்த மக்களையும் கண்ட கலைஞர் மீண்டும் சிறுபான்மையினரின் போர்வாளாக மாறிவிட்டார். வழி தெரியாது தவித்தவருக்கு இப்போது ஒளி தெரிகிறது. சென்ற தேர்தலில் கிறிஸ்தவ இஸ்லாமிய சமூகங்கள் பாரதிய ஜனதாவிற்கு எதிராக ஜெயலலிதாவை ஆதரித்ததால்தான் அவர் மாண்புமிகுவாக ஆனார் என்பது உண்மை. அந்த வாய்ப்பு வாயில் தன் அருகே இப்போது இருப்பதை அவர் உணர்கிறார். அது மட்டுமல்ல வடக்கே தேசிய ஜனநாயகக் கூட்டணியின் செல்வாக்கு நாளுக்கு நாள் நலிவடைவதோடு காங்கிரஸ் பலம் பெற்று வருவதையும் கவனிக்க வேண்டும். மூன்று மாதங்களுக்கு முன்பே மாறன் சோனியாவை சந்தித்தார் என்று வந்த செய்தியை யாருமே மறுக்கவில்லை. டெல்லி அரசிற்கு பிரச்சனை என்று வந்தால் தான் வெளியேறுவதாக தி.மு.க. காங்கிரசிற்கு வாக்குறுதி தந்திருப்பதாகப் பேசுகிறார்கள். அதற்கு விலையாக டெல்லியைப் பிடிக்கும் காங்கிரஸ் தமிழகத்தில் அம்மாவை ஹைதராபாத்திற்கு நிரந்தர ஓய்விற்கு அனுப்ப வேண்டும் என்பதும் கோரிக்கையாம். அதாவது அ.தி.மு.க. அரசு கலைக்கப்பட வேண்டும் என்பதாகும்.

உத்தரப் பிரதேசத்தில் மாயாவதியின் பா.ஜ.க. ஆதரவு அரசு ஆளுநரின் ஒத்துழைப்பால் வேலிதாண்டும் வெள்ளாடுகளை மடக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தாலும் அது வெற்றி பெறாது என்றே எண்ணுகின்றனர். இருப்பினும் டிசம்பர் 12ஆம் திகதிவரை குஜராத் மாநில தேர்தல்வரை இந்நிலை தொடர்ந்தால் போதும் என்றே அவர்கள் செயல்படுவதாகத் தெரிகிறது. காரணம் உ.பி. அரசு உடனடியாக வீழ்ந்தால் அது குஜராத்தின் வெற்றி வாய்ப்பையும் பாதிக்கும். அது அடுத்த வருடம் வரும் வேறு சில மாநிலத் தேர்தல்களையும் எதிர்க்கட்சி பக்கமே தள்ளி விடும். முடிவில் பா.ஜ.க. ஆட்சி 2004க்கு முன்பாக வீழ்ந்தாலும் ஆச்சரியமில்லை என்றாகிவிடும்.

குஜராத் பா.ஜ.க விற்கு மீண்டும் கிடைக்குமா? பெப்ரவரி 27க்குப் பின் இருந்த "ஹிந்துத்வா' வெறி தரும் வெற்றி வாய்ப்பு தற்போது இல்லை என்பதே பலரின் கணிப்பு. காரணம் குஜராத் தொழில் வளம் மிக்க மாநிலம். கலவரத்தால் நாட்டின் பொருள் வளம், வேலை வாய்ப்பு குறைந்துவிட்டது உண்மை.***

தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்

ரவி நடராஜா

தற்போது இரண்டு இடங்களில் சேவையாற்றுகின்றார்

- வாகன விபத்துக்குள்ளாகியவரின் நஷ்டஈடு பற்றி தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும்
- உரிய நஷ்டஈடுகள்
- மற்றைய இழப்புகள்
- விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள்
- மற்றும் வாகன விதிமுறைகளை மீறிய குற்றங்கள்

Accident & Traffic Ticket

(12 Years Insurance Claims Experience)

Weston நகரில்

2095 Weston Road, Suite 203,
Toronto, ON
Tel: 416-245-6555
Fax: 416-245-7766

Scarborough நகரில்

2390 Eglnton Ave. E., Suite 223,
Scarborough, ON
Tel: 416-755-2801
Fax: 416-755-8030

விடுதலைத் தீயினை அண்ணல் வளர்த்தார் வேள்வித் தீயென அணையாது காத்தார்

(பாகம்- 14)

சட்டத்தரணி. கனக மனோகரன்

வாராதோ என வந்த நாள் 26-08-1927

ஆறாத துயர் தந்த நாள் 13-07-1989

அமரர் அமிர்தலிங்கம் அவர்களை கொள்கை விரோதிகள் கத்தி கொண்டு குத்த எத்தனித்த நிகழ்வு இது ஒன்று தான்.

"மாம்பழம் போல் குண்டு வரும்
மார்பினிக்க உண்டிடுவோம்"

எனப் பாடியவன் ஈழத்து உணர்ச்சிக் கவிஞன். உணர்ச்சிப் பிழம்பான அமிர் என்ற ஈழத் தமிழரின் எழுச்சிப் படைக்கலன் தேன்தமிழ் என்ற தீங்கனியைச் சூழ் கலி தொலைக்க அக் கனி"மா"விற்காக தன் மணி மார்பை திறந்து காட்டிய நிகழ்வுகள் பல.

ஆட்சி மன்றில் இந்த அடலேறு அடி எடுத்து வைத்தது 1956 சித்திரை யில். ஆட்சிமொழி என்ற அங்கீகாரம் பெற்று சிங்களமொழி சிங்காதனம் ஏறியது 1956 ஆனியில்.

தனிச் சிங்களச் சட்ட மசோதா வாக் கெடுப்பைச் சந்திக்க முன்னர் கடுமை யான வாக்குவாதங்களை - காரசார மான வாதப் பிரதிவாதங்களைச் சந்தித் தது. தமிழரின் தனிநாடு பற்றியும் பேசப்பட்டது. மீண்டும் மீண்டும் பிரஸ் தாபிக்கப்பட்டது.

இருமொழிகள் இருப்பின் "ஒரு நாடு" நிலைக்கும். ஒரு மொழி என்னில் இரு நாடுகள் இருக்கும்..... என்ற எச்சரிக்கையை அன்று விடுத்தவர் சட்ட மாமேதை கொல்வின் ஆர்.டி. சில்வா. எம் தந்தை செல்வாவும் "தமிழர்களை தனிநாட்டுக் கோரிக் கையை செய்யும் நிலைக்குத் தள்ளா தீர்கள்" என்று எச்சரித்தார். அவ் வேளையில்.... இளைஞர்களின் தலைவரும் இளம் பாராளுமன்ற உறுப்பினருமான அமிர் அண்ணன் அவர்கள்..."தமிழ் இளைஞர்கள் ஒருபோதும் சிங்கள மொழியை அங்கீகரிக்க மாட்டார்கள்" என ஆக்ரோசத்துடன் உரைத்தார்.

அப்போதுதான்....ஒரு ஆளுங் கட்சியைச் சேர்ந்த ஆளும் இனத்த வனான ஒரு பாராளுமன்ற உறுப்பினன் "அதை உனது தொண்டைக்குள் திணிப்போம்" என்றான்.

ஆட்சி மன்றில் இரு மாத அனுபவத்தை மட்டுமே கொண்டிருந்த அமிர்தலிங்கம் என்ற அஞ்சிடா நெஞ்சினன் அடுத்த கணமே அந்த இன வெறியனைப் பார்த்து... "அதை மீண்டும் உன் முகத்தில் துப்புவேன்" என்று சொல்வதன் மூலம் அன்றைய பாராளுமன்றத்தை அன்று அதிர வைத்தார். பயம் அறியாதது இளம் கன்று மட்டுமல்ல கொள்கைக் குன்று தானும் என்பதை நாமும் இலங்கை நாடும் அறிய வைத்தார்.

விலை போகாதது மனிதர் உடல்; விலையே இலாதது மாவீரர் உடல்!

பொலிவான மீனை மலிவாக வாங்கி விட்ட மமதையுடன் நடக்கிறான் அம் மனிதன்.

சிரிப்பொலி கேட்கிறது. பையில் கிடந்த மீன்தான் அவனைப் பார்த்து நையாண்டித்தனமாகச் சிரிக்கிறது.

'சீ வாயை மூடு. என்னைப் பார்த்தா ஏளனமாகச் சிரிக்கிறாய்? நான் உனக்கு விலை கொடுத்து வாங்கி இருக்கிறேன். மறந்து விடாதே" என்கிறான் மமதை கொண்ட மனிதன்.

மனிதா! இறந்த எனக்கு நீ விலை கொடுத்து வாங்கி இருக்கிறாய். நீ இறந்தால் உன்னை யார் விலை கொடுத்து வாங்குவார்கள்?

கேள்வியை கேட்டு விட்டு மீன் தொடர்ந்தும் சிரிக்கிறது. மனிதன் மௌனமானான்.

இக் கருத்துரையின் கருவறை கவிஞர் காசி ஆனந்தன்!

விலைப்படாதது மனித உடல் என்ற விதிக்கும் விலக்குண்டு. வித்திட முடியாதது மட்டுமல்ல விலை மதிப்பும் இலாதது மாவீரர் ஆகின்ற மனிதத் தெய்வங்களின் வித்துடல்கள்! ஏனெனில் அவர்கள் புதைக்கப்பட்டவர்கள் அல்ல; விதைக்கப்பட்டவர்கள்!

மாவீரர் வாரம் இது. மாவீரர்களை மனதாரத் துதிக்கின்ற நாங்கள் எங்கள் முன்னவர்களான பல அறப் போர் மறவரையும் மனதால் நினைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

1950 களில் இளவல்களாக இருந்து, செல்வா என்ற பொக்குவாய்க் கிழவன் 'போர்' என்று அறைந்த போதெல்லாம் தக்கதொரு தலைவன் - தளகார்த்தன் அமிர் தலைமையில் பேரணி அமைத் தவர்கள் - போர்க்கணி வகுத்தவர்கள் - போர்க்களம் நிறைத்தவர்கள் இன்றைய இளைஞர்கட்கு இரு தலைமுறைகளால் முதிர்ந்தவர்கள். இன்றும் அவர்கள் இருப்பார்கள் எனில் அவர்கள் முற்றிப் பழுத்த கிழங்கள்; மோகன இதழ்கள் கறுத்த அந்தி மலர்கள்; காய்ந்து சருகான காவோலை கள். அவர்களையும் நன்றியுடன் நினைவு கூர வேண்டிய கட்டாய கடப்பாடு நமக்கும் உண்டு. ஏன் தெரியுமா?

**கறந்த பால் முலை புகுந்தது
கடைந்த நெய் மோர் புகுந்தது
'கறந்த பால் முலைபுகா கடைந்த
வெண்ணெய் மோர் புகா
உடைந்து போன சங்கின் ஓசை
உயிர்களும் உட்புகா'**

சித்தர் பாடலில் இடம் எடுத்த முத்தான கருத்து இது. இதற்கும் இலங்கை அரசியலில் விலக்குண்டு!

1976 முற்பகுதியில் சில அதிருப்திகளுடன் இருந்த தமிழ் இளைஞர் பேரவையினர் ஆகிய நாங்கள் எங்கள் பொதுச் சபைக்கு அமரர் அமிர்தலிங்கம் அவர்களை அழைத்திருந்தோம். கேள்விகள் கேட்டு ஐயுறவை அறுப்பது ஒரு சாராரின் கருத்து. கேள்விக் கணைகளால் அவரையே அறுக்க வேண்டும் என்பது மறுசாராரின் நினைப்பு.

தொடுக்கப்பட்ட ஒரு வினாக்கணை "அகிம்சைப் போராட்டம் என்ற சப்பாணிப் போராட்டங்களை நடத்தி இதுவரை நீங்கள் சாதித்தது என்ன" என்று எங்களைக் கேட்பவர்களுக்கு நாம் என்ன பதில் சொல்வது?

அண்ணன் சொன்னார் "1958 இல் தனிச்சிங்களச் சட்டத்தை நிறைவேற்றிய பின்னர் பொது நல ஆய அரசுகளின் மாநாட்டில் பங்கு பற்றிய S.W.R.D பண்டார நாயக்கா... பெருமை உடன் சொன்னார் "நான் எனது நாட்டில் இருந்த இனப் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டுத்தான் இங்கு வந்திருக்கிறேன்."

ஆனால் 17, 18 ஆண்டுகளின் பின்னர் அதே 'கொமன் வெல்த்' மாநாட்டில் பேசிய அவரது மருமகன் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இலங்கையில் இனப் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை. அதைத் தீர்ப்பதற்குரிய கால மாற்றத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம்" என்று பேசி உள்ளார்.

"நாங்கள் காலத்திற்குக் காலம் நடத்திய அகிம்சைப் போராட்டங்கள் தான் 'பீலிக்ஸ்'ஐ இங்ஙனம் பேச வைத்திருக்கிறது. எம் இனத்திற்கு எதிராக மாறி மாறி ஆட்சிக்கு வரும் சிங்கள அரசுகள் கொண்டு வரும் அத்தனை சட்டங்களும், திட்டங்களும் எங்கள் எதிர்ப்புகளுக்கு இடையில் தான் அமுலுக்கு வருகின்றன. நாம் எம் இனத்தின் விடுதலைப் போராட்டப் பாதையில் கற்கள் போட்டு அதை அடைக்கவில்லை. எங்கள் அடுத்தடுத்த தலைமுறையினரும் இழந்த உரிமை கட்காகப் போராடுகின்ற தார்மீக உரிமைகளை நாம் தாரை வார்த்துக் கொடுக்கவில்லை. இது தான் நாங்கள் அகிம்சைப் போராட்டங்களால் ஏற்படுத்திய அரும் பெரும் சாதனை".

அண்ணன் சொன்னதில் என்ன பிழை? மாமன் கூற்றுக்கு மாறுபட்ட கூற்றை மருமகன் செய்ததற்கு என்ன காரணம் இருக்க முடியும்? இடைப்பட்ட காலத்தில் வேட்டோசை பெரிதாகக் கேட்டதில்லையே!

'எப்போதோ முடிந்த காரியம்' என்று யோகர் சுவாமிகள் பாணியில் பேசினார் மாமனார். பின்னரோ 'அவள் ஒரு தொடர்கதை' என்ற திரைப்படப் பெயரை மருமகனார் நினைவூட்டினார்.

என் இனிய இளம் வாசக நேயர்களே! அமிர் என்ற மன்னவன் தலைமையில் உங்கள் முன்னவர்கள் நடத்திய தொடர் (அறப்) போராட்டங்கள் தான், தொடர்ந்து (மறப்) போராட்டத்தை நடத்திட - நியாய களங்கள் அமைத்திட, தம்பி பிரபாகரனுக்கு தார்மீக பலத்தை தந்திருக்கின்றன!

மாவீரருக்கு விழா எடுக்கின்ற எம்மால் ஈழத் தமிழின விடுதலைத் தீயை தன் தியாகத்தால் வளர்த்ததோடு, அதை முனிவர் ஆச்சிரமத்து வேள்வித் தீயைப் போல பக்திச் சிரத்தையுடன் அணையாது பாதுகாத்து, அடுத்தடுத்த தலைமுறையினர் கைகளில் தந்த இந்த அமிர் என்ற மாமனிதர் மதிக்கப்பட வேண்டியவர்; மறக்கப்பட வேண்டியவர் அல்ல.

**"" கூண்டுக் கிளி நிலை எத்தனை நாள் வரை? கூப்பிடு கூப்பிடு வீரர்களை
ஆண்ட பரம்பரை மீண்டும் ஒரு முறை
ஆள நினைப்பதில் என்ன பிழை?"**

ஆள நினைப்பதில் பிழை இல்லை. ஆளும் நினைப்பை கைவிடுவது தான் பிழை!

ஆளும் சாதியினர் நல்லவர்; எனின் நாலுகாற் சாதியும் அவருள் உள்ளனர்

எம் முன்னவர்கள் பின்னவராம் நம் நலம் கருதி மேற்கொண்ட போராட்ட வரலாற்றைப் புரட்டிப் படிப்போம் எனில் அந்த வரலாறும் எமக்கு புல்லரிப்பை ஏற்படுத்தும்!

கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் நற்சுவையோடு நகைச்சுவையும் கலந்து கவிதை வடிப்பதில் வல்லவர்.

ஒரு சந்தர்ப்பத்தில் வானொலியில் தேனொலியைக் கேட்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. தைப் பொங்கல் தினக் கவியரங்கிற்கு கலைஞர் தலைமை தாங்கினார். கவிஞர் வாலியும் கவிதை பாடினார். கலைஞர் நளினத் தமிழில் நையாண்டியைக் குழைத்து வாலிக்கு விடுத்தார் அழைப்பை....

**"அடுத்து...
வாலில்லா வாலி அவர்கள் வந்து கவி தருவார்கள்
வாலுள்ள அன்பரெல்லாம் வாலி என்றால்
காலுள்ள அன்பரெல்லாம் காலிகளா?
அல்ல அல்ல!"**

கால் உள்ள அன்பர்கள் எல்லோருமோ அல்லது தென் இலங்கைக் காலியில் உள்ள அன்பர்கள் எல்லோருமோ காலிகளாக இருக்க முடியாது. ஆனால் காலிமுகத் திடலில் 1956 இல் இடம்பெற்ற சத்தியாக் கிரகத்தில் பங்கெடுத்தவர் களின் உடல்களைப் பதம் பார்க்க பண்டார நாயக்காவால் கொண்டு வரப்பட்டு கே. எம். பி. ராஜரெட்னா, நிகால் கருணதிலகா ஆகிய பா.உ களுடன் இணைந்து இயங்கிய அனைவரும் காலிகளாக இருந்தார் கள்.... நாற்கால் பிராணிகளும் அவர்களுள் இடம் பெற்றிருந்ததற்கு நல்ல ஆதாரங்கள் உண்டு...

ஒரு காடையன் பருத்தித்துறை துன்னாலையைச் சேர்ந்த தாமரைக் குளத்தடி செல்லையா என்ற ஒரு தொண்டரின் காதைக் கடித்து விட்டான். அவர் காதில் ஒருபகுதி அவரை விட்டுப் போனதால் அத் தியாகியுடன் அதன் பின்னர் 'காதறுந்த செல்லையா' என்ற வரலாற்றுப் பேர் ஒட்டிக் கொண்டது.

இத்தகைய கொடுமைகளை எதிர் கொண்ட பின்னரும் எத்தனை போராட்டங்களில் தமிழரசுவாதிகள் தமை ஈடுபடுத்தினார்கள் என்பதை அடுத்தடுத்த வாரங்களில் அடுக்குத் தொடராகத் தருவேன்.

அமிர் அண்ணனின் பவழ விழாவில் இலக்கியச் செல்வர் செய்த இன் னொரு கூற்றை ஈண்டு நினை வுறுத்துவது சாலவும் பொருத்த மானது. "நாசூக்காக தன் கருத்துக் களைச் சொல்வதில் அமிர்தலிங்கம் அவர்கள் வல்லவர்.

சென்னையில் ஒரு கூட்டத்தில் பேசும் வேளையில்.... அவர் சொன்னார் "செல்லையா என்ற ஒரு தொண்டரின் காதையும் கடித்துத் துண்டாடினார்கள். இதைச் செய்வதன் மூலம் தாங்கள் என்ன பிறப்பு என்பதை அவர்கள் அன்று நிரூபித்திருந்தார்கள்"

இரட்டைப் புலவர்கள் இன்னொரு புலவனை விலங்கு ஆக்கியது தமிழ் பழந்தமிழ் இலக்கியத்தில் ஒரு பாங்கான நிகழ்ச்சி.

அமிர் அண்ணனும் அரங்கொன்றில் குழப்பம் விளைவித்தவர்களை இங்கிதத்துடன் குரங்குகள் ஆக்கிய துண்டு..... விபரம் மறுவாரத்தில்....

பயணம்

ஆசிரியர்: ஸ்ரீபதி சிவனடியான்

ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ், இலண்டன், நெதர்லாந்து, டென்மார்க், நோர்வே ஆகிய நாடுகளுக்கான உதயனின் விஷேட இணைப்பு

அம்மா அமிர்தானந்தமாயி

அருள் வலம்

உலகின் தெய்வீகத் தாய்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

1977ம் ஆண்டு தான் சக்தியின் அம்சம் என்பதையும் சூடாமணி முதன் முதலில் வெளிப்படுத்தினார். உலகத்தில் உள்ளவர்களுக்கு அன்பையும் ஆறுதலையும் தரும் தெய்வீகத் தாயானார். அது முதல் அவரது இயற் பெயர் மறைந்தது. எல்லோரும் அவரை அம்மா என்றே அழைக்கத் தொடங்கினார்கள். மனிதத் தாய்க்கு தனது குழந்தைகள் அனைவரும் எந்தவித ஏற்றத் தாழ்வும் இல்லாதவர்தாம். தெய்வீகத் தாய்க்கு உலகில் உள்ள சீவராசிகள் அனைத்துமே குழந்தைகள்தான்.

அம்மாவின் தெய்வீக தாய்த் தன்மையை உலகிற்கு முதன் முதலில் வெளிப்படுத்தியவர்களில் ஒருவர் நீல் ரோஸ்நர். 1949ம் ஆண்டு அமெரிக்காவில் யூத பெற்றோருக்குப் பிள்ளையாகப் பிறந்த அவர் தனது உயர் நிலைப்பள்ளி படிப்பை முடித்துக் கொண்ட பின்னர் ஐரோப்பாவில் சுற்றுப் பயணம் செய்தார். உல்லாச வாழ்க்கையும் கேளிக்கையும் அவருக்கு கசப்பை ஏற்படுத்தவே அவர் சிறந்த அமெரிக்க யோகக் கலை நிபுணரிடம் ஹஷ்த யோகத்தைப் பயின்றார். ஆழ்தியானத்தைப் பற்றியும் அறிந்து கொண்டார். தனது பத்தொன்பதாவது வயதில் இந்தியா சென்று ரமணர் ஆசிரமத்தில் தங்கினார். துறவு வாழ்க்கையை மேற்கொண்டார். 12 வருடங்கள் அங்கு தங்கினார். புனிதர்கள் பற்றி அவர் இவ்வாறு கூறியிருக்கிறார். *'புனிதர்கள் இறைவனைத் தம்முள் உணர்ந்தவர்கள். தெய்வத்தின் பேரொளி அவர்கள் ஊடாக மற்றவர்களுக்குப் பாய்கின்றது.*

இந்து மதத்தைப் பொறுத்த அளவில் கத்தோலிக்க மதத்தில் இருப்பது போன்று அற்புதங்களின் அடிப்படையில் ஒருவரை புனிதர் என்று கணிப்பதில்லை. அற்புதங்கள் செய்யப்படலாம் அல்லது செய்யப்படாமல் போகலாம். எவரது சமூகத்தில் இருக்கும் போது மனச் சாந்தியும் ஆன்மீக எழுச்சியும் ஏற்படுகின்றதோ அவரையே இந்துக்கள் புனிதர் என்று கொண்டாடுகின்றார்கள்."

நீல் ரோஸ்நரின் உடல் நலம் கெட ஆரம்பித்ததை அடுத்து அவர் வைத்தியர்களை நாடிச் சென்றார். மேற்கத்தைய வைத்தியம், ஹோமியோபதி, ஆயுள் வேதம் இப்படி பல வைத்திய முறைகளாலும் அவருக்கு குணம் ஏற்படவில்லை. அவரைச் சந்தித்த சோதிடர் ஒருவர் இன்னும் இரண்டொரு வருடங்களில் அவர் மரணமாகக் கூடும் என்றும் அதில் இருந்து தப்பினால் தாயாரின் அருகிருந்து அவரைக் கவனித்துக்

சட்டத்தரணி முருகேசு சண்முகநாதன்

கொள்வார் என்றும் கூறினார். ஆன்மீக விழிப்பைத் தேடி இந்தியா வந்த நீல் ரோஸ்நருக்கு மீண்டும் அமெரிக்கா திரும்பி தாயாரைப் பேணுவதென்பது மன வேதனையைத் தந்தது. 1979ம் ஆண்டு அவரது உடல் நிலை மேலும் மோசமடைந்தது. உணவு உண்ண முடியவில்லை. மரணம் இன்றோ நாளையோ என்ற நிலை. அந்தச் சமயத்தில்தான் அம்மாவின் சீடர் ஒருவர் அவரைச் சந்தித்தார். அம்மா மகா புனிதர் என்றும் மன உடல் நோய்களைத் குணப்படுத்துபவர் என்றும் அவர் கூறினார்.

அதனைக் கேட்ட நீல் மிகுந்த சிரமத்தின் மத்தியில் அம்மாவின் ஆசிரமத்தைச் சென்றடைந்தார். தனது நோயைக் குணப்படுத்தும்படி அவர் வேண்டிய போது அம்மா அவரைப் பார்த்து, *மகனே முற்பிறப்புகளில் செய்த கர்ம வினைகளை ஒருவர் அனுபவித்தே தீரவேண்டும். கடந்த பிறப்புகளில் நீ செய்த பாப செயல்களுக்கான விளைவுகளை நீ இப்பொழுது அனுபவிக்கின்றாய். ஆனால் அப்படி அனுபவிப்பதால் இறுதியில் உனக்கு நல்லதே ஏற்படும். உனக்கு என்ன நோய் ஏற்பட்டிருக்கிறது என்பதை எந்த ஒரு வைத்தியராவது கண்டு பிடிப்பார் என்று நான் நினைக்கவில்லை. ஆன்மீக வளர்ச்சியில் நீ உயர் நிலையை அடைய வேண்டும் என்பதற்காக இது இறைவனால் உனக்குத் தரப்பட்ட நோயாகும். அப்படி இருக்கும் போது அம்மா அதனை நீக்குவது தவறு. உனக்கு வந்த நோய் ஆண்டவனால் தரப்பட்டது என்று சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டு அவனையே சரணாகதி அடைந்து, ஒருமனதாக அவனை வணங்குவாயாகில் மீண்டும் ஒரு பிறப்பு உனக்கு ஏற்படாது. அதனை விடுத்து அம்மா உனது நோயைத் தீர்த்தால் முன்னைய பாவங்களைத் தீர்ப்பதற்கு நீ மீண்டும் பிறக்க வேண்டி வரும். இப்பொழுது அனுபவிப்பதிலும் பார்க்க கூடுதலான துன்பத்தை அப்பொழுது நீ அனுபவிப்பாய்.* என்று கூறினார்.

சுவாமி பரமாத்மானந்தா என்ற பெயரில் தற்போது சந்நியாசம் வாங்கிக் கொண்டிருக்கும் நீல் சில சமயங்களில் அம்மா நோயைக் குணப்படுத்து வதையும் வேறு சமயங்களில் ஆண்டவனால் தரப்பட்டதை பிரார்த்தனை மூலம் தீர்த்துக் கொள்ளும்படி கூறுவதையும் பற்றி பின்வருமாறு தெரிவித்திருக்கிறார். *ஒருவரின் நோயைக் குணப்படுத்துவதா இல்லையா என்பதை உள்ளுணர்வு தமக்கு உணர்த்துகின்றது* என்று அம்மா கூறியிருக்கிறார். அவர் விரும்பினாலும் கூட உள்ளுணர்வுக்கு எதிராக அவரால் செயற்பட முடியாது. எங்களது முயற்சிகள் அனைத்தும் பலனற்றுப் போகும் போது ஆண்டவனிடமே சகல பாரத்தையும் போட்டுவிடுவோமாகில் எங்களுக்கு அதனால் நலனே ஏற்படும். இந்திய ஞானிகளின் மனப்பான்மையும் இதுதான். அம்மாவின் சகோதரர் ஒருவர் இறந்த போது தனது தந்தையிடம் அம்மா அவரது தாயின் வயிற்றில் பிறக்காத ஒருவர் மகனாக வந்து சேர்வார் என்று கூறியிருந்தார்.

அம்மா கூறிய மகன் நீல் ரோஸ்நராகும்.. அவரைக் கண்டதும் எவரது வற்புறுத்தலும் இன்றி தனது குடும்பத்தில் ஒருவராக அம்மாவின் தந்தை ஏற்றுக் கொண்டார். அம்மாவைப் பாதுகாக்கவும் தொண்டு செய்யவும் தன்னுடனேயே வைத்துக் கொண்டார். தன்னிடம் சோதிடர் கூறிய தாய் அம்மாதான் என்று உணர்ந்த போது நீல் பெரும் ஆனந்தம் அடைந்தார். கடந்த இருபது ஆண்டுகளுக்கும் மேலாக ஆன்மீக விழிப்பினால் ஏற்படக் கூடிய பேரானந்தத்தை அம்மா அவருக்குத் தந்துள்ளார். 1990ம் ஆண்டு கலிபோர்ணியாவில் உள்ள சான் ராமோனில் அமைந்துள்ள ஆச்சிரமத்தின் பொறுப்பாளராக நீலை அம்மா அனுப்பி வைத்தார்கள். நான்கு ஆண்டுகளின் பின்னர் அவர் சந்நியாசி ஆனார். அவருக்கு சுவாமி பிரமாத்மானந்தா என்ற தீட்சா நாமம் தரப்பட்டது.

குஷ்ட ரோகியின் நோயைக் குணப்படுத்திய காருண்யம்

நீல் ரோஸ்நர் அம்மாவின் வீட்டை அடைந்தது முதல் தெய்வத் தாயின் காருண்யம் எவ்வாறு இருக்கும் என்பதை நேரில் பார்க்கும் சந்தர்ப்பங்கள் அவருக்கு வாய்த்தன. தொழுநோயாளி ஒருவரை அம்மா பூரணமாகக் குணப்படுத்திய சம்பவத்தை விரிவாக எடுத்துக் கூறியுள்ளதுடன் 8 மில்லி மீட்டர் கமேரா மூலம் படமும் எடுத்திருக்கிறார். தாத்தன் அம்மாவின் வீடு இருந்த இடத்தில் இருந்து சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள காயம்குளம் என்ற இடத்தில் பிறந்தவர். சிறுவயதிலேயே அவருக்கு தொழு நோய் பற்றிக் கொண்டது.

அவரது பெற்றோர்கள் கூட அவரைத் தங்கள் வீட்டில் வைத்திருக்கப் பயந்து வெளியில் விரட்டிவிட்டார்கள். போக்கிடம் இல்லாது தத்தளித்த தாத்தன் பிச்சைக்காரன் ஆனார். பிச்சை எடுத்து உண்டார். கோயில் முன் படுத்து உறங்கினார். நோய் முற்ற முற்ற அவரது உடல் முழுவதும் சீழும் இரத்தமும் வடியும் புண்களால் நிறைந்தன. தாங்க முடியாத துர்நாற்றம் காரணமாக அவருக்கு அருகில் எவரும் செல்வதில்லை.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

வீடு வாங்க, விற்க

HOMELIFE

HOMELIFE METRO
Realty Inc. - Real Estate Broker

Flexible Commission
FREE MARKET EVALUATION

- Buying Resale Homes & New Homes from Builder
- Selling your Home & Business
- Low-Rate Mortgage Arrangements

அழையுங்கள் நடா ஜி. நடராசா
416-616-8751
5200 Finch Ave. East #206, Scarborough, Ont. M1S 4Z4

Nada G. Nadarajah
B.V.Sc
Sales Representative
GOLD AWARD WINNER
416-293-5093 (24hr.)

MORTGAGE INTELLIGENCE

வீட்டு அடமானம் அல்லது கடன் வசதிகள் செய்து தரப்படும்

MORTGAGES & LOANS

- 5% DOWN PAYMENT TO BUY A HOME
- PRE-APPROVAL OF MORTGAGES
- ALL RESIDENTIAL MORTGAGES (1ST / 2ND)
- BAD CREDIT / BANKRUPTCY

VISA CARD FOR NON QUALIFIED APPLICANTS

ALL MORTGAGES & LOANS please call
Latchman Sukhdeo B.A. Dip. Com.
Mortgage Consultatnt
416-287-3289 ~ 416-566-5036

எமது படைபலத்தில் இன்னமும் எமக்கு நம்பிக்கையும் உறுதியும் உள்ளன

விடுதலைப்புலிகளின் சிறப்புத்தளபதி கூறுகின்றார்

எமது இயக்கப்போராளிகளின் தியாகத்தினால் உருவாக்கப்பட்ட படைபலத்தில் இன்னமும் எமக்கு நம்பிக்கை இருக்கின்றது. கடந்த காலங்களில் பேச்சுவார்த்தை என்ற போர்வையில் பொ.ஐ.மு.அரசாங்கம் தமிழ் மக்களை ஏமாற்றி வந்தது. இந்த முறையும் அந்த பிழையை ஆட்சியாளர்கள் விடமாட்டார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. மீண்டும் தமிழ்மக்கள் மீது அரசு அடக்குமுறையையும் இராணுவக்கெடுபிடிகளையும் பிரயோகிக்குமானால் நாம் எமது படைப்பலத்தின் மூலம் தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுப்போம் என விடுதலைப்புலிகளின் மட்டு., அம்பாறை மாவட்ட இராணுவ சிறப்புத் தளபதி ரி.ரமேஷ் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் பத்தாவதாக விசேட கொமாண்டோ பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறிய தாக்குதல் படையணியின் பயிற்சியின் இறுதிநாள் வைபவம் கடந்தவாரம் அம்பாறை மாவட்டத்தில் கஞ்சிக்குடிச்சாறில் உள்ள விளையாட்டுமைதானத்தில் நடைபெற்றது. அம்பாறை மாவட்ட இராணுவத் தளபதி ஜனார்த்தனன் தலைமையில் நடைபெற்ற இந்த பயிற்சி இறுதிநாள் வைபவத்தில் பிரதம அதிதியாக மட்டு. அம்பாறை மாவட்ட இராணுவச்சிறப்புத் தளபதி ரமேஷ் கலந்து கொண்டார். ஏனைய அதிதிகளாக மட்டு. அம்பாறை மருத்துவப் பகுதி பொறுப்பாளர் வாமணன், அம்பாறை மாவட்ட தாக்குதல் படையணி பொறுப்பாளர் திலக், மாவடிமுன்மாரிக்கோட்ட தளபதி நாகேஸ் உட்பட விடுதலைப்புலிகளின் மாவட்ட பிரதேச பொறுப்பாளர்கள் மற்றும் பிரமுகர்களும் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வருகைதந்த சிறப்புத்தளபதி ரமேஷ் மற்றும் தளபதிகள் பாண்ட் வாத்தியத்துடன் வரவேற்கப்பட்டனர். இதையடுத்து ஈகைச்சுடரினை சிறப்புத் தளபதி ரமேஷ் ஏற்றி வைத்து நிகழ்வினை ஆரம்பித்துவைத்தார்.

பயிற்சியை முடித்துக்கொண்ட போராளிகள் மேஜர் கிட்டு, மேஜர் ராஜேஸ் ஆகிய இரு இல்லங்களாகப் பிரிக்கப்பட்டு அவர்களிடையே விளையாட்டுப்போட்டியும் நடத்தப்பட்டது. அத்துடன் நிகழ்வின் ஒரு அங்கமாக பயிற்சியை முடித்துக் கொண்டவர்களின் இராணுவ அணிவகுப்பும் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் ரமேஷ் தொடர்ந்தும் உரையாற்றுகையில்: கடந்த காலங்களில் போர் காரணமாக எமது மக்கள் சொல்லொணாத்துயரங்களை அனுபவித்தனர். உயிர், உடல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் அவர்கள் பாதிக்கப்பட்டனர். அவர்களின் இந்த பாதிப்பைக் கருத்தில் கொண்டே எமது தேசியத்தலைவர் பிரபாகரன் பேச்சுவார்த்தை மூலமாக தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க முன்வந்துள்ளார். சர்வதேசரீதியாக நடைபெற்றுவரும் இந்த பேச்சுவார்த்தை மூலம் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுத்து அவர்கள் உரிமையுடன் வாழ முடியும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. ஆனால் எமது மக்கள் நினைக்கலாம் இந்த சமாதான காலத்தில் படைக்கு ஆட்சேர்ப்பும் பயிற்சிகளும் எதற்கென்று. நாம் கடந்த காலங்களில் பல சண்டைகளை நடத்தியுள்ளோம். இதன்மூலம் பல படைத்தளங்களை படையினரின் கட்டமைப்புகளை உடைத்து வெற்றிகண்டுள்ளோம்.

நாம் மிகவும் உறுதியான படைபலத்துடனேயே பேச்சுவார்த்தைக்குச் சென்றுள்ளோம். எமது தமிழ் படை உறுதியாகவும் பலத்த கட்டமைப்புடனும் இருக்கவேண்டும் என்பதற்காகவே தற்போதும் புதியவர்களை இணைத்து படைபட்பயிற்சி வழங்கிக் கொண்டும் வருகின்றோம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமிழர்களாகிய நாம் பலமிழந்தவர்களாகஇருக்கக் கூடாது. எமக்கு போர் நடத்த வேண்டும் என்ற ஆசையில்லை. நாம் போரை விரும்பவும் இல்லை ஆனால் நாம் பலமான படையொன்றை வைத்திருக்க வேண்டும். அவ்வாறு இருக்கும் வேளையிலேயே எமது உரிமைகளை நாம் வென்றெடுக்க முடியும். இன்றைய காலகட்டத்தில் புலிகள் வேறு பொதுமக்கள் வேறு என்ற நிலை இருக்கக் கூடாது. இன்று பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறும் இவர்கள் கடந்த காலங்களில் வீட்டுக்காகப் பல சேவைகளைச் செய்துள்ளனர்.

ஆனால் தற்போது அவர்கள் விலைமதிக்கமுடியாத மாணிக்கங்கள். இவர்கள் இன்று நாட்டுக்காக தமது உயிரையே கொடுக்க முன்வந்துள்ளனர். இன்றைய நாள் எமது மாவட்டத்திற்கு மிகவும் பொன்னானநாள். வன்னியில் எமது மக்கள் போராட்டத்திற்கு அளித்த பங்களிப்பை நாம் மறக்க முடியாது. எனவே எதிர்வரும் காலங்களில் தற்போதைய சமாதான நிலைமை மாறுமானால் வீட்டுக்கொரு பிள்ளை மட்டுமல்ல அத்தனை பொதுமக்களும் எமது உரிமைக்காக போராட்டத்தில் இணைந்துகொள்ள முன்வரவேண்டும் என்றார்.

மருத்துவத்துறை பொறுப்பாளர் வாமணன் பேசுகையில்: நாம் எமது உரிமைகளை வென்றெடுப்பதற்காகவே போராட்டம் நடத்தினோம். இன்று சமாதானச்சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் ஓரளவு நிம்மதியாக வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலை எமக்கு சாதகமாக அமைய வேண்டும். இந்த நிலை மாறி அரசோ படையினரோ எம்மக்கள் மீது தமது தமது அழுத்தங்களை பிரயோகிக்க வந்தால் எமது படைப்பலத்தின் மூலம் அவர்களுக்கு நாம் பாடம்புகட்டுவோம். சமாதானச் சூழ்நிலை ஏற்பட்டிருந்தபோதும் அண்மையில் காஞ்சிரங்குடாவில் இடம்பெற்ற சம்பவம் அனைவரும் அறிந்ததே. சமாதானத்தை விரும்பாத விஷமிகள் சாத்வீகப்போராட்டம் நடத்தியவர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்னர் சாத்வீகப் போராட்டம் நடத்தியவர்கள் மீது நடத்தப்பட்ட அதே கொடூரமான தாக்குதல்கள் இன்றும் நடத்தப்பட்டுள்ளது. இதைநாம் இல்லாதொழிக்க என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை சிந்திக்கவேண்டும். இவ்வாறான கெடுபிடிகள், சாத்வீகப்போராட்டங்கள்மீது நடத்தப்படும் கொலைவெறியாட்டங்கள் என்பவற்றுக்கு எதிராகப்போராடி எமது மக்களின் உரிமைகளை வென்றெடுக்கவே இன்று நாம் படைப்பலத்தை பெருக்கிக்கொண்டு வருகின்றோம் என்றார். விளையாட்டுப்போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசுகளை சிறப்புத் தளபதி ரமேஷ் வழங்கினார்.

ஒன்ராறியோ இந்துசமயப்பேரவை நடத்திய 3வது பன்னிரு திருமுறை முற்றோதல் பூர்த்திவிழா

அருள்மிகு நல்லூர் முருகன் ஆலயத்தில் 19.10.2002 சனிக்கிழமை காலை 10 மணியளவில் பேரவைக்காப்பாளர் கலாநிதி கவிஞர் கந்தவனம் அவர்களின் தலைமையின் கீழ் மேற்படி விழா ஆரம்பமாகியது. தேவார பாராயணத்துடன் ஆரம்பமாகிய விழாவில் ஆலய பிரதமகுரு சிவத்திரு பாலகுணாணந்தக்குருக்கள் அவர்கள் ஆசியுரை வழங்கினார். பேரறிஞர் முருகவே பரமநாதன் அவர்கள் சைவத்திருமுறைகளில் ஒன்பதாம் திருமுறை என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

இந்துசமயப் பேரவையினரால் 12.10.2002 சனிக்கிழமை நடத்தப்பட்ட திருமுறை மனனப்போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பங்குபற்றிய 150 க்கு மேற்பட்ட சகல மாணவர்களுக்கும் ஆறுதல் பரிசில்கள் வழங்கப்பட்டன. அத்துடன் கடந்த ஆறு மாதகாலமாக திருமுறை முற்றோதிய அறுபதுக்கு மேற்பட்ட அடியார்களுக்கு தகுந்த புத்தகப்பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இப்பரிசில்கள் யாவற்றையும் மூன்றாவது வருடமாக முருகன் புத்தகசாலை அதிபர் திரு கனகரத்தினம் மகேசன் அவர்கள் யாவருக்கும் வழங்கினார். சைவசமயமும் சமயஉணர்வுகளும் சமய தத்துவங்களும் நலிவுறாமல் எமது இளம் சந்ததியினருக்கு மத்தியில் வேரூன்ற வேண்டுமென்று பெரும் ஆவல் கொண்ட திரு.மகேசன் அவர்களின் அளப்பரிய தொண்டை சைவப் பெரியார்களும் போட்டியில் பங்குபற்றிய சிறார்களின் பெற்றோர்களும் இந்துசமயப் பேரவைச் சிவனடியார் திருக்கூட்டத்தினரும் போற்றிப்புகழ்ந்தனர். தார்மீகவள்ளல் திரு. க. மகேசன் அவர்களுக்கு எல்லாம் வல்ல ஆடவல்லானின் அருள் என்றென்றும் கிடைப்பதாகுக.

தொடர்ந்து நடைபெற்ற திருமுறைப்பூர்த்தி விழாவில் பேரவையின் தாபகர் அருள்திரு ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளின் கந்தனே கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் என்ற பக்திப்பரவசம் நிறைந்தநூலும் வெளியிடப்பட்டது. இந்நூல் இலங்கையில் சாகித்தியமண்டலப் பரிசு பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. மேற்படி நூலின் முதற்பிரதியை மூன்றாவது வருடமாக பெரியார் செல்லத்தம்பி மார்க்கண்டு அவர்களும் சிறப்புப் பிரதியை திரு. மகேசன் அவர்களும் மதிப்புப்பிரதியை சிவதொண்டர் கு.சபாரத்தினம் அவர்களும் பெற்றுக்கொண்டனர்.

மேற்படி விழாவில் திருமுறை முற்றோதிய ஆறுமாதகாலமும் ஒழுங்காக வருகை தந்திருந்த சிவனடியார் திரு. கனகசபை கந்தையா அவர்களை சேக்கிழாராக உருவகப்படுத்தி விழாவில் நடுநாயகமாக இருத்தி விழா நடத்தப்பட்டது. அபிசேக ஆராதனையுடன் ஆரம்பமான விழாவில் சிவனடியார் திரு. கந்தையா அவர்கள் திருமுறையை சுமந்து சிவனடியார்கள் புடைசூழ வீதிவலம் வந்தபொழுது சிவனடியார்களின் திருமுறை ஒலியும் நாமஜெப ஒலியும் யாவரையும் மெய்சிலிர்க்க வைத்தது.

ஸ்காபரோவில் தமிழர் நிர்வாகத்தில் மின்னியல் வர்த்தக நிலையம்

கனடாவாழ் தமிழ் மக்களுக்கு நன்கு அறிமுகமான வர்த்தகப் பிரமுகர் திரு. குலா செல்லத்துரை, திருமதி குலா ஆகியோரின் நிர்வாகத்தில் புதியதோர் மின்னியல் வர்த்தக நிலையம் **Future Citi Electronics Inc.** என்னும் பெயரில் கடந்த சனிக்கிழமையன்று ஸ்காபரோ கென்னடி வீதியில் 1360ம் இலக்கத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. 110 வோல்ட் கருவிகள் மட்டுமல்லாது இலங்கைக்கு எடுத்துச் செல்லக் கூடிய 220 வோல்ட் மின்னியல், இலத்திரனியல் கருவிகள் மற்றும் உபகரணங்கள் இங்கு விற்பனை செய்யப்படுகின்றன. திறப்பு விழாவின் போது பல்வேறு துறை சார்ந்த பிரமுகர்கள் ஆதரவாளர்கள் வருகை தந்து வாழ்த்தியும் பொருட்களை வாங்கியும் சென்றனர். இங்கே காணப்படும் படங்களில் நிறுவன அதிபர் திரு குலா செல்லத்துரையோடு வங்கி அதிகாரி திரு. டொம் குமார், சமூகசேவகர் சிவா சிவராமலிங்கம், வர்த்தகப் பிரமுகர் கணேசன் சுகுமார், ராசிஹோம் பை நிறுவன அதிபர் கிருபா கிரிசாந்த், முதலீட்டு ஆலோசகர் திரு. ஞானச்சந்திரன், கணக்காளர் திரு. கென் கந்தையா ஆகியோர் நிற்பதைக் காணலாம்.

புதிய நிறுவன தொலைபேசி இலக்கம் 416-657-2484

கல்வாரி சபையின் 1000 திருச்சபை அமைப்பு நிதிக்கான இன்னிசை விழா

எதிர்வரும் கிறிஸ்மஸ் விழாவை சிறப்பிக்கும் வகையில் இந்தியாவில் உள்ள கல்வாரி பேப்டிஸ்ட் ஆலய கட்டிட நிதிக்காகவும், இந்திய கல்வாரி 1000 திருச்சபையின் ஊழியர்களின் ஊழியத்திற்காகவும் கடந்த 23ம் திகதி சனிக்கிழமை மாலை கிறிஸ்தவ இன்னிசை இரவு நிகழ்ச்சி கென்னடி எல்ஸ்மெயர் சந்திப்பின் அருகில் உள்ள டோர்செட் பார்க் பேப்டிஸ்ட் தேவாலயத்தில் மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இவ்விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் உதயன் பத்திரிகையின் வினியோக முகாமையாளர் திரு. சோதியும் அவரது நண்பர்களும் சிறப்பாகச் செய்து இருந்தனர். இன்னிசை விழாவில் இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்த தமிழகத்தில் மிகவும் பிரபல்யமான போதகர் திரு. பரமானந்தமும், அவரது துணைவியார் திருமதி வசந்தா பரமானந்தமும் சிறப்பு விருந்தினர்களாக பங்கு கொண்டதோடு, உரையாற்றி இன்னிசைப் பாடல்களும் வழங்கி அரங்கம் நிரம்பிய பார்வையாளர்களைப் பக்திப் பரவசத்தில் திளைக்க வைத்தனர் என்றால் மிகையாகாது. அது போன்றே இன்னிசை நடன நிகழ்ச்சியில் பங்கேற்ற இளம் சிறுவர்களும் சிறுமிகளும் இனிய பாடல்களுக்கு ஏற்றவாறு சிறந்த ஒப்பனை உடை அலங்காரத்தோடு பரதம் மற்றும் சேர்ந்திசை நடனம், பாட்டு என நிகழ்ச்சிகளை வழங்கி அனைவரின் பாராட்டுதல்களையும் பெற்றதற்கு அரங்கில் இருந்த எழுந்த கரவொலியே சாட்சி. இவற்றைப் பயிற்றுவித்த இளைஞர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் ஆர்வமும் முயற்சியும் எதிர்காலத்தில் நிச்சயம் அவர்களது கலை மற்றும் கலாச்சார ஈடுபாட்டினை மேலும் வளர்ப்பதிலும் பிறந்த மண்ணிற்கும் கனடாவிற்கும் புகழ் சேர்க்கும் என்பதில் ஐயமில்லை. இங்கே காணப்படும் படத்தில் போதகர் பரமானந்தம் அவர்களும் திருமதி வசந்தா பரமானந்தம் அவர்களும் இனிய கிறிஸ்தவ கீதங்களை இசைப்பதைக் காணலாம்.

12 ம் பக்கத் தொடர்ச்சி விடுதலைப் புலிகளின் .....

சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் ஓரளவு நிம்மதியாக வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலை எமக்குச் சாதகமாக அமைய வேண்டும். இந்த நிலைமாறி ஸ்ரீலங்கா அரசோ படையினரோ எம்மக்கள்மீது தமது அழுத்தங்களைப் பிரயோகிக்க வந்தால் எமது படைப் பலத்தின் மூலம் அவர்களுக்கு நாம் பாடம் புகட்டுவோம். இந்த அம்பாறை மாவட்ட மக்கள் கடந்த காலங்களில் பட்ட துன்பங்கள் அனைவரும் அறிந்ததே. அவர்கள் வீடு வாசல்களை பொருளாதாரத்தை உயிரை இழந்து அனாதைகளாக்கப்பட்டனர். தமிழ் கிராமங்களில் இருந்து அவர்கள் விரட்டப்பட்டனர். இதனால் அவர்கள் அகதிகளாக வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது. பல கிராமங்கள் இன்றும் வேறு இனத்தவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இதனால் அவர்கள் பாதிக்கப் பட்டது மட்டுமன்றி இனவிகிதாசாரமும் குறைக்கப்பட்டுள்ளது. சமாதானச் சூழ்நிலை ஏற்பட்டிருந்த போதும் அண்மையில் காஞ்சிரங்குடாவில் இடம் பெற்ற சம்பவம் அனைவரும் அறிந்ததே. சமாதானத்தை விரும்பாத விஷமிகள் சாத்வீகப் போராட்டம் நடத்திய மக்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்னர் சாத்வீகப் போராட்டம் நடத்தியவர்கள்மீது நடத்தப்பட்ட அதே கொடூரமான தாக்குதல்கள் இன்றும் நடத்தப்பட்டுள்ளன. இதை நாம் இல்லாதொழிக்க என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை சிந்திக்க வேண்டும். இவ்வாறான கெடுபிடிகள் சாத்வீகப் போராட்டங்கள்மீது நடத்தப்படும் கொலை வெறியாட்டங்கள் என்பனவற்றுக்கு எதிராகப் போராடி எமது மக்களின் உரிமைகளை வென்றெடுக்கவே இன்று நாம் படை பலத்தை பெருக்கிக்கொண்டு வருகின்றோம்" என்றார்.

கனடாவாழ் சுண்ணாக மக்கள் ஒன்றியத்தின் 3வது ஆண்டு விழா

கனடாவாழ் சுன்னாக மக்கள் ஒன்றியத்தின் 3வது ஆண்டு கலைநிகழ்ச்சிகளும் இராப்போசன விருந்தும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை டிசம்பர் மாதம் 1ம் திகதி 2002 இல் பி.ப. 5.30 மணியளவில் St. Cocumba Church 2723 St. Clair Ave. E. (Near O'conner) இல் நடைபெற இருக்கிறது. பிரதம விருந்தினராக திரு. குணரத்தினம் தேவதாசன் இளைப்பாறிய பொறியியலாளர் (லண்டன்) சிறப்பு விருந்தினராக திரு. நாகமுத்து தயாபரன், திருமதி. தயாபரி தயாளன் உரிமையாளர்கள் டெஸ்சி மார்ட் அவர்கள் தலைமையில் நடைபெற விருக்கிறது. சுன்னாக மக்கள் ஆதரவாளர்கள் அனுதாபிகள் நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். தொடர்புகளுக்கு: க. திருநாவுக்கரசு: (416) 269-7087, (905) 947-8697, (416) 269-3731, (416) 755-9359, (416) 266-7399 ஆகிய இலக்கங்களை அழைக்கவும்

உங்கள் பிரயாணச் சீட்டுகளை குறைந்த விலையிலும் சிறந்த சேவையுடனும் பெற்றுக் கொள்ள ஒரே நிறுவனம்

CANADIAN EXECUTIVE TRAVELS LTD.

Colombo	$1275.00	London	$499.00
India	$1499.00	Paris	$599.00
Singapore	$1299.00	Frankfurt	$629.00
		Zurich	$739.00
Colombo to Toronto one way	$998.00	Amsterdam	$629.00
		Vancouver	$289.00
		Edmonton	$259.00
		Montreal	$159.00
		New York	$289.00

CANADIAN EXECUTIVE TRAVELS LTD.

2675 Eglinton Ave. E, Suite 103, Scarborough, ON. M1K 5J1

Tel: 416-264-2193

'சமாதான முயற்சிகளில் சர்வதேச சமூகம் காட்டுகின்ற அக்கறை எனக்கு உற்சாகத்தை தருகின்றது'

மாவீரர் தினஉரையில் தலைவர் பிரபாகரன்

தந்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சமாதான முயற்சிகளில் சரவதேச சமூகம் காட்டுகின்ற அக்கறை எனக்கு மிகுந்த உற்சாகத்தை தருகின்றது. இவ்வாறு நேற்று முன்தினம் தனது மாவீரர் தின உரையில் விடுதலைப் புலிகளின் தலைவர் திரு வேலுப்பிள்ளை பிரபாகரன் தெரிவித்தார்.நோர்வேயின் அனுசரணையுடன் இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிக ளுக்கும் இடையே நடைபெற்று வரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் குறித்து திருப்தி தெரிவித்திருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர், தற்போதைய சமாதான முயற்சிகள் தொடர்பில் சர்வதேச சமூகம் காட்டுகின்ற மிகுந்த அக்கறையும் போரினால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவி வழங்க அச்சமூகம் முன்வந்திருக்கின்றமையும் உற்சாகம் தருவதாக அமைந்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை மாவீரர் தின உரையை நிகழ்த்திய தலைவர் பிரபாகரன், தற்போதைய சமாதானப் பேச்சுவார்த்தைகள் வெற்றிபெற்று இலங்கையில் வாழுகின்ற சகல சமூகங்களும் அமைதியாக சகவாழ்வு வாழவேண்டும் என்பதே தங்களது ஆழமான அவா என்றும் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.இன நெருக்கடியுடன் தொடர்புடைய சகல விடயங்களையும் ஆராய்வதற்கு விடுத லைப்புலிகள் தயாராயிருக்கிறார்கள். ஆனால், பேச்சுவார்த்தைகள் கட்டுப்பாடு கள் இன்றி சுதந்திரமானவையாகவும் நிபந்தனைகள் மற்றும் காலவரையறைகள் இன்றியதாகவும் இருக்க வேண்டும் என்று கூறியிருக்கும் விடுதலைப்புலிகளின் தலைவர், எமது விடுதலைப் போராட்டம் புதிய வரலாற்று திருப்பு முனை யொன்றை அடைந்திருக்கிறது, புதியதொரு வளர்ச்சிக் கட்டத்திற்குள் பிரவேசித்திருக்கிறது. ஆயுத மோதல்களை நிறுத்தி இனநெருக்கடியை சமாதானப் பேச்சுவார்த்தை செயன்முறையின் மூலமாகத் தீர்க்கும் நடவடிக்கைகளில் இற ங்கியிருக்கின்றோம். சமாதான முயற்சிகள் மீதான எமது இதயசுத்தியானதும் அப்பணிப்புச் சிந்தையுடனான பற்றுதலும் எம்மைச் சமாதானத்தின் எதிரிகள் என்று சிங்களப் பேரினவாதிகளினால் மேற்கொள்ளப்பட்ட பிரசாரத்தை தவறென்று நிரூபித்து துவம்சம் செய்திருக்கின்றன என்று தெரிவித்திருக்கிறார்.

சிங்களப் பேரினவாத சக்திகள் தங்களது குறுகிய - அற்ப அரசியல் இலாபங்களுக்காக மக்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியிருப்பதும் சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெற்றிருப்பதுமான இந்தச் சமாதான முயற்சிகளை முறியடித்தால், பிரிந்து செல்வதற்கான அரசியல் சுதந்திரப்பாதையை தமிழ் மக்கள் தொடர நிர்ப்பந்திக்கப்படுவர் என்றும் பிரபாகரன் திட்டவட்ட மாகக் கூறியிருக்கிறார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் தமதுரையில் கூறியிருப்பதாவது:

எனது அன்புக்கும் மதிப்புக்குமுரிய தமிழீழ மக்களே! இன்றைய நாள் ஒரு புனித நாள். எமது இனத்தின் இருப்புக்காக தமது உயிரை ாகம் செய்த புனித நாள். நெஞ்சத்தின் நினை வாலயத்தில் நினைவு கூரும் நன்னாள். அந்த விழுமியத்தை இலட்சியமாக வரித்து அதற்காக வாழ்ந்து போராடி அதற்காக மடிந்த மாவீரர்கள் மகத்தான மனிதப் பிறவிகள். அவர்களது வாழ்வும் வரலாறும் எமது வீர விடுதலைக் காவியத்தின் உயிர் வரிகள்.மாவீரர்களே! தமிழர் தேசம் உங்களுக்கு தலை வணங்குகிறது. உங்களது நன் கொடையில் தமிழீழ மக்கள் இன்று தலைநிமிர்ந்து நிற்கின்றனர்.

உங்கள் இரத் தத்தாலும் வியர்வையாலும் உங்களது இலட்சிய உறுதியாலும் கட்டியெழுப்பப் பட்ட எமது விடுதலை இயக்கம் இன்று யாராலும் வெற்றிகொள்ள முடியாத மாபெரும் போராட்ட சக்தியாக உலகப்புகழ் ாட்டி நிற்கிறது.போர் அரங்கில் நீங்கள் படைத்துச் சென்ற மகத்தான சாதனைகளையே இன்று உலக அரங்கில் நாம் அரசியல் வெற்றிகளாக அறுவடை செய்து வருகிறோம்.

இன்று உலகம் மாறிவருகிறது. உலக ஒழுங்கும் மாறிவருகிறது. உலக நாடுகளின் உறவுகளும் மாறிவருகின்றன. மனித சமுதாயம் முன்னர் காணாத புதிய சவால் களுக்கு முகம் கொடுத்து நிற்கிறது.இன்றைய உலக நிதர்சனத்தை, அதன் யதார்த்த பூர்வ நிகழ்வுகளை நாம் உதா சீனம் செய்ய முடியாது. இன்றைய காலத்தையும் இக்காலத்தில் கட்டவிழும் சூழ லையும் நாம் ஆழமாக புரிந்து காலநிலை மாற்றத்திற்கேற்ப எமது விடுதலைப் பாதையை செப்பனிடுவது அவசியம். இன்றைய காலத்தின் தேவை அது.உலகப்போக்குடன் முரண்படாது உலக வரலாற்றின் ஓட்டத்திற்கு இசைவாக நாமும் எமது போராட்ட வரலாற்றை முன்நகர்த்திச் செல்வதே விவேகமானது.

இன்றைய வரலாற்றின் கட்டாயமும் அதே. எமது விடுதலைப் போராட்டம் கால் நூற்றாண்டுகால வரலாறாக மீட்சி பெற்று செல்கிறது. 20 ஆண்டுகளுக்கு முன் இன்றைய நாளில் எமது முதலாவது மாவீரர் களப்பலியாகியதைத் தொடர்ந்து இன்று வரை பல்லாயிரக்கணக்கில் போராளிகள் விடுதலைப் போரில் களமாடி வீழ்ந்திருக்கிறார்கள்.

(தொடர்ச்சி 19.ம் பக்கம் பார்க்க)

SHEPPARD -JANE DENTAL CLINIC

15 வருடங்கள் யாழ்ப்பாணம், கொழும்பு போதனா வைத்தியசாலைகளில் கடமையாற்றிய

டாக்டர் முத்துராஜா சத்தியபாலன்

DR. M. SATHIYABALAN

கனடா பல் மருத்துவ பீடத்தில் பல்வைத்திய துறையில் இரு வருட பயிற்சியை முடித்த பின் மீண்டும் கனடாவில் சேவையாற்றுகிறார்

சகல வயதினருக்கும் பற்களை நேராக்கி ஒழுங்கு படுத்தல்
Orthodontics - Braces / Removable Appliance

சிறுவர்களுக்கு பற்கள் கோணலாக, நெருக்கமாக முளைத்தலைத் தடுத்தல்
Paediatrics & Preventive Orthodontics

முரசு கரைவதை நிறுத்துவதற்கான சிகிற்ச்சை
Gum Disease Treatment

பழுதடைந்த வலிதரும் பற்களை அகற்றாது பாதுகாத்தல்
Root Canal Treatment

நிரந்தரமான செயற்கைப் பற்கள் கட்டுதல்
Crown & Bridge

இயற்கையான வெள்ளை நிறத்தில் பல் அடைத்தல்
White Filling

பற்களை சீராக்கி அழகு படுத்தும் சிகிற்ச்சை
Cosmetic Bonding

பற்களை வெண்மையாக்குதல்
Tooth whitening

சகல காப்புறுதிகளும் ஏற்றுக் கொள்ளப்படும்
Family benefit and Welfare உதவி பெறும் குடும்பத்தினருக்கு இலவச பற்சிகிற்சை

சனி, ஞாயிறு தினங்களிலும் திறக்கப்படும்

NORTH YORK
2715 Jane Street
(inside jane & sheppard mall)
TEL: 416-742-5111



தமிழில் தொடர்புகளுக்கு: 905-264-3504

சமாதான முயற்சிகளில் சர்வதேச சமூகம் காட்டுகின்ற அக்கறை எனக்கு உற்சாகத்தை தருகின்றது' மாவீரர் தினஉரையில் தலைவர் பிரபாகரன்

(18ம் பக்கத் தொடர்ச்சி)

எமது இனத்தைப் பேரழிவிலிருந்து பாதுகாத்து எமது தாயக நிலத்தை அந்நியரிடமிருந்து மீட்டெடுக்க எமது விடுதலை இயக்கம் அளப்பரிய அர்ப்பணிப்புக்களைச் செய்துள்ளது.எமது மாவீரர்களின் இந்த மகத்தான தியாகங்களினால் எத்தனையோ தடவைகள் நாம் பேரழிவுகளின் விளிம்புகளிலிருந்து மீண்டிருக்கிறோம். மரணத்தின் வாயிலுக்குச் சென்று மறுபிறவி எடுத்திருக்கிறோம்.

வல்லாதிக்க சக்திகளின் தலையீடுகளை தனித்து நின்று தகர்த்திருக்கின்றோம். எமது விடுதலை இயக்கம் இன்று வானளாவ வளர்ந்து நிற்கிறது. நிமிர்ந்து நிற்கிறது. இயக்க விருட்சத் தின் வேர்களும் விழுதுகளுமாக நிற்பவர்கள் எமது மாவீரர்களே!எனது அன்பார்ந்த மக்களே! இன்று எமது விடுதலைப் போராட்டம் ஒரு புதிய வளர்ச்சிப் பாதையில் ஒரு புதிய வரலாற்றுத் திருப்பத்தில் காலடி வைத்திருக்கிறது. என்றும் இல்லாதவாறு இன்று ஒரு புதிய சவாலை நாம் சந்தித்து நிற்கின்றோம். போருக்கு ஓய்வுகொடுத்து சமாதான வழியில் சமரசப் பேச்சுக்கள் வாயிலாக எமது மக்களின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சியில் நாம் ஈடுபட்டு வருகிறோம். நாம் வன்முறையில் பற்றுக்கொண்ட போர்வெறியர்கள் என்றும் சமாதானத்தின் விரோதிகளென்றும் காலம் காலமாக சிங்கள பேரின வாதிகள் மேற்கொண்டுவந்த பரப்புரையை பொய்யாக்கும் வகையில் நாம் நேர்மையுடனும் உறுதியுடனும் சமாதான வழிமுறையை தழுவி நிற்கின்றோம். ஆயுத வன்முறையில் ஆசைகொண்டு நாம் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிக்க வில்லை. இன அழிவை இலக்காகக் கொண்ட இனவாத ஒடுக்குமுறை யுத்தத்தில் அந்நிய இராணுவ அடக்குமுறை சகிக்க முடியாதளவுக்கு தீவிரமடைந்த கட்டத்திலேயே நாம் ஆயுதம் ஏந்தினோம்.

எமது மக்களின் உயிரைக் காப்பதும் எமது மக்களின் உரிமையை நிலைநாட்ட வும் எமது இயக்கம் மேற்கொண்ட ஆயுதம் தரித்த விடுதலைப் போரை பயங்கர வாதமாக சிங்கள அரசுகள் சித்திரித்தன. தமிழரின் உரிமைப் போரை திரிபு படுத்தி உலகரங்கில் விசமப் பிரசாரங்கள் முடுக்கிவிடப்பட்டன. இப்பொய்யான பரப்புரையை நம்பி பல உலகநாடுகள் எமது அமைப்புக்கு தடை விதித்தன. பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்டு உலக அரங்கிலிருந்து நாம் ஓரங் கட்டப்பட்டோம். உலக நாடுகள் ஒன்று திரண்டு எதிரியின் போர் திட்டத்திற்கு முண்டு கொடுத்தன. அனைத்து உலகின் ஆதரவும் ஆயுத உதவியும் கிட்டியதால் மூர்க்கம் கொண்ட எதிரி போரைத் தீவிரப்படுத்தினான். நாம் தனித்துநின்று போருக்கு முகம்கொடுத்தோம். மக்களின் ஆதரவு மட்டும் எமக்கு மலையாக நின் றது. நாம் அலை அலையாக திரண்டெழுந்து ஆக்கிரமிப்புப் படைகளுடன் மோதி னோம். போர்க்கலையில் எமது வீரர்கள் படைத்த அபாரமான சாதனைகள் உலக இராணுவ நிபுணர்களையே திகைப்பில் ஆழ்த்தின. போரில் புலிகளை வெற்றிகொள்ள முடியாதென்பதை சிங்கள தேசமும் உலகும் உணர்ந்துகொண்டன. இந்தச் சூழ்நிலையில் தான் அதாவது போராட்ட தன் மையை நிரூபித்துக்காட்டி, எமக்கு சாதகமான இராணுவ சமநிலையில் நின்ற படியே நாம் சமாதானக் கதவுகளைத் திறந்தோம். சமாதானத்தில் எமக்கு உண் மையான பற்றுண்டு என்பதை உலகிற்கு உணர்த்திக் காட்டி, நாம் இராணுவ மேலாதிக்க நிலையில் நின்றுகொண்டு அமைதி வழியைத் தழுவினோம்.போருக்கு ஓய்வுகொடுக்கும் விடயத்திலும் நாமே முன் முயற்சிகளை எடுத்தோம்.

ஒரு தலைப்பட்சமான போர்நிறுத்தப் பிரகடனம் செய்து அரசாங்கத்தை அமைதி வழிக்கு அழைத்தோம். சமாதானத்துக்கான ஆணையைப் பெற்று ஆட்சிப்பீட மேறிய புதிய அரசாங்கம் எமது போர்நிறுத்த அறிவிப்பை ஏற்றுக்கொண்டது. இவ்வாண்டு பெப்ரவரி 23 ஆம் திகதியிலிருந்து இரு தரப்பும் இணங்கிய போர் நிறுத்தம் சர்வதேச நாடுகளின் கண்காணிப்புடன் அமுலுக்கு வந்தது. இப்போர் நிறுத்தம் கடந்த 9 மாதங்களாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. சிங்கள ஆயுதப் படையினரில் சில பிரிவினரும் இனவாத சக்திகளும் சமாதான விரோதிகளும் போர்நிறுத்தத்தைக் குழப்பி மோதலை ஏற்படுத்த பல தடவைகள் முயன்றனர். எத்தனையோ ஆத்திரமூ ட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எமது மக்கள் பலர் அநியாயமாக கொல்லப்பட்டனர். ஆயினும் எமது இயக்கம் ஒழுக்கம், கட்டுப் பாட்டை இறுக்கமாகக் கடைப்பிடித்தது. அமைதியைக் குலையவிடாது சமாதா னத்தைப் பேணிவருகிறது.

சமாதானப் பாதையில் எமக்குள்ள உண்மையான உறுதிப்பாட்டுக்கு இது நல்ல தொரு எடுத்துக்காட்டு. எமது மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காண்பது சாத்தியமாயின் அதனை முயன்று பார்ப்பதில் முழு மனதுடனும் நேர்மையுடனும் செயற்பட நாம் தயாராகவிருக்கின்றோம். எமது மக் கள் தமது தாயக மண்ணில் தம்மைத் தாமே ஆட்சிபுரியும் உரிமை உடையவர் களாக சுதந்திரத்துடன் கௌரவமாக வாழவேண்டுமென்பதே எமது போராட்டத் தின் இலட்சியம். இந்த இலட்சியம் சமாதான வழியில் கைகூடுமானால் அந்த வழியைத் தழுவ என்றுமே நாம் தயாராகவிருக்கிறோம். (தொடர்ச்சி.....ம் பக்கம்)

நான் ஒரு வழக்கறிஞர் இல்லை
உங்களுக்கு தெரியுமா?
CRIMINAL
குற்றவியல் குற்றவாளியென தீர்மானிக்கப்பட்டால்
- தீர்ந்த வதிவிடவீசா
- குடியுரிமை
- குடும்ப ஒன்றிணைவு
பாதிக்கப்படும்
SLIP & FALL
DOG BITES
MOTOR VEHICLE ACCIDENTS
வாகன விபத்தில் பாதிக்கப்பட்டீர்களா?
முதலில் வைத்தியசாலைக்கு செல்லுங்கள்
பின இவரை அழையுங்கள்
கலகலப்பு தீசன்
416-490-9199
www.kalakalappu.net

NITHI ARTS
நித்தி ஆர்ட்ஸ்
Specialists in:
சகலவிதமான பெயின்டிங்ஸ்
வீடுகள்
அப்பார்ட்மென்ட்ஸ்
ஓபிஸ்கள்
வோல் பேப்பர் வேலை
சீலை பெயின்டிங்ஸ்
விளம்பர போட்கள்
கண்ணாடியில் எழுத்துக்கள்
பனர்கள்
மேடை ஓவியங்கள்
திரைச் சீலைகள்
கோயில் சிலை பெயின்டிங்ஸ்
Paintings of
Houses
Apartments
Offices
Wall Paperings
Statue Paintings
Signs
Banners
Graphic Designs
Art Works
Sceneries
Temple Statues Paintings
NITHI
Tel:(416) 963-8637

இலங்கை அரசும்.....

(19ம் பக்கத் தொடர்ச்சி) ஆதலால் அரசியல் தீர்வில் விடுதலைப் புலிகள் ஈடுபாடு காட்டுவதையிட்டு அமெரிக்கா மிகவும் உற்சாகமடைந்துள்ளது. விடுதலைப் புலிகள் சமாதான வழியில் தீர்வு காண்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் விடுதலைப் புலிகள் மேலும் ஒருபடி முன்னேறிச் சென்று பயங்கரவாதத்தையும் வன்செயலையும் கைவிடுவதற்கான தமது ஈடுபாட்டைப் பகிரங்கமாக வெளிப்படுத்தவேண்டும். இலங்கை மக்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் தெளிவாக வெளிப்படுத்த வேண்டும். பதிலாக இலங்கை அரசாங்கத்தின் இறைமையை ஏற்று சகல மக்களினதும் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும். அத்துடன் சகல இலங்கையரினதும் அடிப்படை மனித உரிமைகளை விடுதலைப் புலிகள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். வாழ்வுரிமை மட்டுமல்லாமல் பேச்சுச் சுதந்திரம் ஆட்சியில் பங்களிப்பு சுதந்திரமாக ஒன்றுபட்டுச் செயற்படல் சட்டவிதியைப் பாதுகாத்தல் என்பவற்றையும் ஏற்றுச் செயற்படல் வேண்டும் எனது நாட்டு மக்களின் அன்றாட வாழ்வில் இருந்தும் இலங்கை வெகுதொலைவில் உள்ளது. ஆயினும் அந்த நாட்டின் துன்பத்தை அமெரிக்கா அவதானிக்காமல் இல்லை. கடந்த இரண்டு வருடங்களாக 16 மில்லியன் டொலர்களுக்கும் அதிகமான உதவியை அடிப்படை அபிவிருத்தி பொருளாதார மனிதாபிமான உதவிகளுக்காக இலங்கைக்கு அமெரிக்கா வழங்கியுள்ளது. அந்த உதவியை மேலும் அதிகரிப்பதற்கு அமெரிக்கா ஆயத்தமாக இருக்கிறது என்பதை வெளிப்படுத்தும் தெளிவான சமிக்ஞையே இன்று இந்த மாநாட்டில் நான் சமுகமளித்திருப்பதாகும்வட கிழக்கிற்கான தேவைகள் மிகவும் அதிகமானவை. இந்த யுத்தத்தினால் முழு நாடுமே அதிக விலைகொடுத்திருக்கிறது என்பதையிட்டு வேறு கேள்வியில்லை. இலங்கையின் காயத்தை குணப்படுத்த நாம் உதவிசெய்ய வேண்டியது மிகவும் அவசியமானதாகும். யாழ். குடாநாட்டில் கண்ணிவெடி அகற்றும் பணிக்கு அமெரிக்கா தொடர்ந்து உதவும். 1 20 000 சதுர மீற்றர் நிலப்பரப்பில் கண்ணிவெடிகளை அகற்ற நாம் உதவியிருக்கிறோம். இவற்றைவிட அகதிகளுக்கான அவசர உதவி இடம்பெயர்ந்த மக்கள் குழந்தைகளுக்கான உதவிகள் மருத்துவ வசதிகள் என்பவற்றை நாம் வழங்கிவருகிறோம். இன்று சமாதானத்தை முன்னெடுக்கவும் நல்லாட்சி மேம்பாட்டுக்காகவும் சட்டத்துறையைச் சீர்படுத்தவும் மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட் டோருக்கு உதவவும் நடவடிக்கைகளை எடுக்க நாம் முயல்கிறோம். இன்றைய நாள் ஒரு ஆரம்பம் மட்டுமே. நிகழ்ச்சித் திட்டங்களை மேலும் முன்னெடுப்பது குறித்து நாம் ஆராய்கிறோம். இன்று நாம் முன்வைக்கும் யோசனைகள் குறித்து ஜப்பானில் நடைபெறும் மாநாட்டில் தொடர்ந்து பரிசீலிப்போம்இன்று இங்கு குழுமியிருக்கும் நாடுகளின் நல்லெண்ணமும் ஆதரவும் கிட்டினாலும் பல தசாப்தங்களாகத் தொடர்ந்த மோதலுக்குத் தீர்வுகாண்பது என்ற விடயம் சுலபமானதோ அல்லது துரிதமான காரியமானதோ அல்ல என்பதை நாம் அறிவோம். ஆனால் இருதரப்பினருமே இந்தப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளில் மிகப் பொறுமையுடன் ஈடுபட்டுள்ளனர். நடைமுறைச் சாத்தியமான விடயங்களுடன் அரசியல் ரீதியான உடன்படிக்கைகளும் அவசியமானவை. ஆதலால் இந்தப் பேச்சுவார்த்தைகளில் சம்பந்தப்படும் இரு தரப்பினருக்கும் ஆதரவளிக்க இங்கு குழுமியிருக்கும் நாடுகளுடன் இணைந்துகொள்வதில் அமெரிக்கா மகிழ்ச்சியடைகிறது என்று அமைச்சர் கூறினார்.

உதயன்

இலங்கையில் அமெரிக்காவின் தலையீடு சிங்களவர்களுக்கோ அன்றி தமிழர்களுக்கோ நல்லதல்ல- ஜேவிபி கூறுகின்றது

அமெரிக்க தூதரகமொன்றை வடக்கு கிழக்கில் திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமளவுக்கு நாடு பிளவுபட்டுப் போயுள்ளது அமெரிக்கா இலங்கையில் தளம் அமைப்பது சிங்களவர்களுக்கும் நல்லதல்ல தமிழர்களுக்குமு் நல்லதல்ல. அமெரிக்காவை இல்ங்கைஇனப்பதிரச்சனையில் கொண்டு வந்து சேர்த்ததே பிழையான விடயமாகும் இத்தனைக்கும் காரணம் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்தான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது என்று ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.)யின் பாராளுமன்ற உறுப்பினர் விமல்வீரவன்ச தெரிவித்தார் அரசியல் அமைப்பு தொழில் முயற்சிகளை உருவாக்கல் கைத்தொழில் கொள்கை முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு விமல்வீரவன்ச தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது: அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் ஒன்றிணைந்து சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் சென்று நாட்டை பிராந்தியங்களின் ஒன்றியமாக்கக் கூடிய நடவடிக்கைகளே இப்போது செயற்படுத்தப்படுகின்றன. ஆனால் இது ஐக்கிய இலங்கையென்பதை நாம் மறந்துவிடக் கூடாது இலங்கையில் பாசிசவாத ஈழமொன்றை ஸ்தாபிக்க பல வெளிநாட்டுச் சக்திகள் முன்வந்துள்ளன.

இந்தக் குத்தகையை அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஏற்றுள்ளார். அவரது அனைத்து முயற்சிகளும் அந்தக் குத்தகையை நிறைவேற்றிக்கொடுப்பதிலேயே தங்கியிருக்கிறது அரசியலமைப்பு விவகாரங்களில் நிபுணத்துவம் பெற்றவரான அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் சட்டத்துக்கு முரணான ஒரு திருத்தத்தைச் சமர்ப்பித்துள்ளார் 19 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தம் அரசியல் அமைப்புக்கு முரண் என்பதை அவர் அறியாதிருத்திருப்பார் என்று கருதவே முடியாது அரசியல் அமைப்பு விவகாரங்களைப் பாதுகாக்கும் கடப்பாட்டைக் கொண்ட அமைச்சர் பீரிஸ் அரசியலமைப்புக்கு முரணான செயல்பாடுகளில் தயக்கமின்றி ஈடுபடுகின்றார் தாய்லாந்தில் அன்ரன் பாலசிங்கம் இலங்கை நீதிமன்றத் தீர்ப்பை விமர்சிக்கும்போது அமைச்சர் பீரிஸ் அந்த இடத்தில் மௌனமாக இருந்தார் இலங்கையை பல நாடுகளின் கூட்டு அரசாங்கமாக மாற்றும் சர்வதேச நடவடிக்கைகளுக்கு அமைச்சர் பீரிஸ் ஒரு பங்குதாரராகவே இருக்கின்றார் சரத் அமுனுகமுவகாணி நீர் முகாமைத்துவ அமைச்சுகள் ஒன்றிணைக்கப்பட்டு அவை ஒரே கொள்கையின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அல்லது அவ்விரு துறைகளையும் அபிவிருத்தி செய்ய முடியாது என்று கண்டி மாவட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகம தெரிவித்தார் நீர்ப்பாசன நீர் முகாமைத்துவ அமைச்சின் நிதி ஒதுக்கீடுக் குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்ட சரத் அமுனுகமுவ தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:நீர்ப்பாசன அமைப்பு அறிமுகப்படுத்தவுள்ள புதிய நடைமுறையொன்றின் மூலம் குறிப்பிட்ட நீர்த்தொகுதிகளின் உரிமை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு பின்னர் அந்த நீர் விற்பனை செய்யப்படும் இது ஒரு மோசமான நடவடிக்கையாகும் உலக வங்கியின் இந்தச் சூழ்ச்சிக்கு நாம் இலக்காகி விடக்கூடாது. தண்ணீர் எமது இயற்கை வளமாகும். அதனை விற்பனைப் பொருளாக்கிவிடாதீர்கள். முதலாளித்துவ பொருளாகாம் இங்கும் தலையெடுக்கக் கூடாது என்று வீரவன்ச தெரிவித்தார்

"சிரிப்பதனால்.... மனிதன் நீண்டகாலம் உயிர் வாழ்கிறான்."

வெகுவிரைவில் திரைக்கு வருகிறது

கலகலப்பு தீசனின்

"கலகலப்பு"

முழு நீள நகைச் சுவை சித்திரம்

இயக்கம்: S. மதிவாசன்

இசை: M. பவதாரணி



எனவே திரையில் உங்கள் நகைச்சுவை நண்பர்களைக் கண்டு களியுங்கள்

• கள்ள வீடியோ கொப்பி சட்டத்திற்குப் பிழை
• கள்ளக் கமறா கொப்பி கண்ணுக்கு கூடாது

Heritage

Scholarship Trust Plan

Distributed by

Allianz Education Funds Inc.

(Registered Education Savings Plans, RESPs)

WORRYING ABOUT YOUR CHILDREN'S FUTURE EDUCATION!

Are You Planning To Start An Education Savings Plan (RESP)?

If YES, get professional help and a free consultation about a Heritage RESP and the Canada Education Savings Grant (CESG) receive up to 20% of your first $2000 contributed annually to an RESP maximum $400 per year per child.

Offered by prospectus only.

Please call:
BAALA KUNARATNAM
Res: 416-385-1941
Fax: 416-385-2537
E-mail: respbaala@aol.com

(Dignity starts upon donating yourself & your time for good service for great purpose)

BAALA KUNARATNAM

திருமணத்தின் போது நடைபெறும் கிரியைகளும் சில கிரியைகளுக்கான அர்த்தங்களும்

சோதிடர் இ. மெய்யழகன் (416-284-0215)

கோசார பலன்கள்

கிரகங்கள் கோசாரப்படி பெயர்ச்சி பெறும் போது ஒவ்வொரு இராசிக்கும் நடக்கும் பலன்கள் சந்திரராசிக்கமையக் கூறப்படுவது வழக்கமாகும். இவற்றைக் கவனிக்கும் போது பலருக்குச் சரியாக இருப்பதில்லை. கிரகங்களின் பெயர்ச்சி பலன்கள் கூறும்போது சந்திரராசி உதயலக்கினம் பெயர்ச்சிபெறும் கிரகங்கள் நின்ற இடங்கள் பார்த்த கிரகங்கள் அக்கிரகங்களின் பார்வை பெறுமிடங்கள் ஆதிபத்தியம் ஆகியவை பிறந்த ஜாதகம் ஆராயப்பட்டு பலன்கள் கூறும்போது சரியான பலன்களை அறியலாம். உதாரணமாக குரு (வியாழன்) சந்திரனுக்கு 5ம் இடத்தில் நிற்கும் போது பொதுவாக நற்பலன்கள் நடைபெறவில்லை. இதை ஆராயும் போது குரு பிறந்த ஜாதகத்தில் குரு நீசம் பெற்று எட்டாம் இடத்தில் தீய கிரகங்களின் பார்வை பெற்று நின்றதால் அக்காலம் நற்பலன்கள் நடைபெறவில்லை. ஆகவே பிறந்த ஜாதகத்தை நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்து கிரகப் பெயர்ச்சிப் பலன்கள் கூறுவது சிறப்பாக அமையும். 21.5.2003இல் வாக்கியப்படி சனி கோசாரப்படி பெயர்ச்சியடைகிறது. ஆனால் திருக்கணிதப்படி 7.7.2002இல் சனிப்பெயர்ச்சி நடைபெற்றுள்ளது. இதன்பலா பலன்களை உங்கள் பிறந்த ஜாதகத்தைக் காட்டி பலனை அறிந்து கொள்ளலாம். தொடர்ந்து 25.1.2002 இல் ஏற்பட்ட ராகு கேது ஆகிய கிரகங்களின் கோசாரப்பலன்கள் வெளிவரும். பார்த்து அறிந்து கொள்ளலாம். ஜாதக பலன்கள் பொதுவாக 60 வீதத்திற்கு மேல் சரியாக அமையும். 100 சதவீதம் சரியாக அமையாது அறியலாம் என்பதையும் அவதானிக்கலாம்.

திருமணத்தின் போது நடைபெறும் கிரியைகளும் சில கிரியைகளுக்கான அர்த்தங்களும்

இந்து சமயச் சடங்குகளில் திருமணச் சடங்கு முக்கிய இடம் பெறுகிறது. திருமணம் மகிழ்ச்சியான கொண்டாட்டமாக இருந்தாலும் சில கிரியைகள் அர்த்த முடையனவாக இருக்கின்றன. சில திருமணங்கள் மிக விமர்சையாகவும் ஆடம்பரமாகவும் சில திருமணங்கள் சிக்கனமாகவும் நடைபெற்றாலும் கிரியைகள் ஒரே மாதிரியாக இருப்பதை அவதானிக்கலாம்.

வரவேற்பு

வாசலில் வாழை நட்டு நிறைகுடம் வைத்து குத்து விளக்கேற்றி விபூதி சந்தனம் பன்னீர் கற்கண்டு ஆகியன வைத்திருப்பார்கள். பழுத்த பழங்களுடைய வாழைகள் நட்டு வைப்பது நீண்ட நாட்கள் இனிய வாழ்வு அமைய வேண்டுமென்பதற்காகவும் நிறைகுடம் போல் தளம்பாது வாழ வேண்டுமென்பதற்காகவும், வாழ்வு ஒளிமயமாக வேண்டுமென்று விபூதி சந்தனம் பன்னீர் இவைகள் போல் வாழ்வு குளிர்ச்சியாகவும் மகிழ்ச்சியாகவும் அமையவேண்டுமென்றும் கற்கண்டின் இனிமைபோல் வாழ்வு இனிமை நிறைந்ததாக அமைய வேண்டும் என்றும் அர்த்தமுடையனவாயிருக்கின்றன.

மணமகன் வருகை: மணமகன் மணமகளின் சகோதரனால் மணமகளில்லத்திற்கு அழைத்து வந்து வாசலில் வரவேற்று தோழன் மணமகனின் பாதங்களைக் கழுவிவிட மணமகன் தோழனுக்கு மோதிரம் அணிவிப்பார். தொடர்ந்து ஆராத்தி எடுப்பர். ஆராத்தி எடுப்பது மணிக்கூட்டின் கம்பிகளின் ஓட்டம் போல் முன்னாலிருந்து பார்ப்பவர்களுக்குத் தெரியத்தக்கதாக அமைவதை அவதானிக்கலாம். இது கால ஓட்டத்துடன் வாழ்வும் சீரான முறையில் அமைய வேண்டும் என்ற அர்த்தமாகவும் தீய சக்திகள் அணுகாமலும் கண்ணூறு நாவூறு வராமலும் இருப்பதற்காக ஆராத்தி எடுக்கப்படுகிறது. (தொடரும்)

உரும்பிராய் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்- கனடா

பெருமையுடன் வழங்கும் உரும்பிராய் பாடசாலைகளின்

பொங்கல் விழா-2003

வழமைபோல் இவ்வருடமும் பல சிறப்பான கலை நிகழ்ச்சிகளுடன் உங்களை மகிழ்விக்க

Saturday January 4th 2003- 5.00 pm
Stephen Leacick C.I
2450 Birchmount Road
(Huntingwood & Sheppard)

தொடர்புகளுக்கு அழையுங்கள்
416-496-0608
416-321-6533

விளம்பர அன்பளிப்பு
SANTHA
416-200-5470

நுழைவுச்சீட்டுக்களை மண்டப வாயிலில் பெற்றுக் கொள்ளலாம்

தொடர் நாவல்

திசை மாறிய தென்றல்

தொடர்:30 - அகில், U.K

கடந்த வாரத் தொடர்ச்சி.....

"எனக்கொரு ஐடியா தோன்றுது தேன்! சொல்லட்டா?"
"....."
"பிளான் செய்தபடி நான் புறப்படுகின்றேன். நீ இவங்ககூட இரண்டு கிழமை இருந்து விட்டு வரலாமில்லையா....?"
"எனக்கும் அதுதான் சரியாகப்படுது....."
தேன்மொழியுடன் பேசியதன்படி அரசு புறப்பட ஆயத்தமான போது "என்ன தம்பி நீங்க மட்டும் புறப்பட்டீங்கபோல, தேன்மொழி உங்ககூட வரவில்லையா?" பெரியவர் கோபாலகிருஷ்ணன் கேட்க "இல்லை அங்கிள்! என்கூட அக்கா, அத்தான், அண்ணன், அண்ணி இருக்கினம்" அரசு இப்படிச்சொல்ல நன்றியுடன் அவனை நிமிர்ந்து பார்த்தார் கோபாலகிருஷ்ணன்.
"என்னங்க பிரயாண அனுமதிப் பத்திரம், டிக்கேட் எல்லாம் எடுத்திட்டீங்களா?" தேன்மொழி கேட்க தலையை அசைத்து ஓம்! என்று பதிலை சொன்னான். பின்னர் எல்லோருக்கும் சொல்லிவிட்டுப் புறப்பட்டபோது
"டேய் சுப்பையா" இது கோபாலகிருஷ்ணன்.
"என்ன ஐயா?" என்று கேட்டபடி டிரைவர் சுப்பையா வந்து நின்றான்.
"இந்த தம்பியை டவுணில கொண்டுபோய் விட்டு விட்டு வா!"
"சரி ஐயா!" அரசிடம் இருந்து பெட்டியை வாங்கி கார் டிக்கியில் வைத்தான். அரசு எல்லோருக்கும் மீண்டும் போயிட்டு வாரன் என்று கூறி காரில் ஏறி புறப்பட்டுப்போனான்.

அரசு ஆஸ்திரேலியா விமான நிலையத்தில் இருந்து ஒரு டாக்சி பிடித்து வீட்டிற்கு வந்தபோது வீட்டில் ஒருவரும் இல்லை. எல்லோரும் வேலைக்குப் போயிருந்தார்கள். இப்பொழுதுதான் அரசு முதல் தடவையாக தேன்மொழி இல்லாததால் வீடு வெறிச்சோடிக்கிடந்ததை உணர்ந்தான். பெட்டியைப் படுக்கை அறைக்குள் வைத்துவிட்டு கட்டிலில் விழுந்தான். அஸ்வினியின் நினைவு வந்தது. எப்பேர்ப்பட்ட பெண்! படிப்பில் படு சுட்டியாக இருந்தவள் ஏன் இப்படியொரு கோழைத்தனமான முடிவு எடுத்தாள். விதியை சாடுவதா? இல்லை விதியென்பது உண்மையா? என அவனது இந்த சிந்தனையை உடைத்தது கதவுத் துவாரத்தின் ஊடாக தபால்காரன் கடிதம் போடும் சத்தம்.
"கடிதத்தைப் பார்த்துவிட்டுத் தூங்கினால் என்ன" என்று மனம் சொல்ல கீழே இறங்கி வந்து அன்று வந்த கடிதங்களைப் பெயர் அடிப்படையில் பிரித்தான்.
இது என்ன கடிதம்? இந்தியாவில் இருந்து....அனுப்பியவரின் முகவரி இல்லாமல் எனக்கு அனுப்பி இருக்கிறார்கள். யார் அனுப்பியிருப்பார்கள்? எதுக்கு வீண் சிந்தனை? எதுக்கும் யார் என்று பிரித்துப் பார்ப்பமே" என்று அக்கடிதத்தைப் பிரித்தான்.
"அன்புள்ள அரசுக்கு"
என்ன அஸ்வினியின் எழுத்துப்போல இருக்கே. மேற்கொண்டு அக்கடிதத்தை வாசிப்பதற்குப் பொறுமையின்றி உண்மையில் அஸ்வினிதான் எழுதியிருக்கிறாளா? என்று கீழே பார்த்தான்.
இப்படிக்கு அன்புடன் அஸ்வினி.
"ஆமா அஸ்வினிதான். ஏன் எழுதியிருக்கா?" எதுக்கும் வாசிப்பம் என்று மீண்டும் தொடக்கத்தில் இருந்து வாசிக்கத் தொடங்கினான்.

"அன்புள்ள அரசுக்கு, என்றும் பிரியமுடன் அஸ்வினி எழுதும் அன்பு மடல் இது. இந்த கடிதத்தின் மூலமாக மிக முக்கியமான ஒரு விடயத்தை உங்களுக்குச் சொல்லப் போகிறேன். அதற்கு முதல் உங்கள் மனதை திடப்படுத்திக் கொள்ளுங்கள்.
"என்ன இது! என்னை ஏமாத்திவிட்ட பிறகு என்ன புதுவிதமான விளையாட்டு" அரசுக்கு மின்னலென ஒரு சிந்தனை வெட்டிவிட்டுப் போகத் தொடர்ந்து வாசித்தான்.

உங்களை உயிருக்கு உயிராகக் காதலித்த நான் வெறுக்கவில்லை! இல்லை வெறுத்ததைப்போல நடித்தேன். காரணம் என்ன என்று உங்களுக்குத் தெரியாது. அதை இப்போது உங்களுக்குச் சொல்லப்போகிறேன். நீங்கள் அக்காவின் திருமண வீட்டுக்காக இந்தியா வந்தபோது கவிதைப் புத்தகம் வெளியிடும் நோக்கத்தில் தேன்மொழி வீட்டில் இருந்தீர்கள். அந்த நேரத்தில் தேன்மொழி உங்களை விரும்பியிருக்கிறா. அவா தனது விருப்பத்தை மூர்த்தி அண்ணாவிடம் சொல்லியிருக்கிறா. அவா சொன்ன பின்பு நீங்கள் மூர்த்தி அண்ணாவிடம் எங்கள் காதலைப்பற்றிச் சொல்லியிருக்கிறீர்கள். பின்பு மூர்த்தி அண்ணா திருச்சிக்கு அலுவலாகப் போயிட்டு வாரன் என்று உங்களிடம் கூறிவிட்டு எங்கள் வீட்டை வந்தார். தனிமையில் என்னைச் சந்தித்துப் பேசினார்.
"இங்கபார் அஸ்வினி! தேன்மொழி அரசைத் திருமணம் செய்ய விரும்புகிறாள். அவாவுக்காக நீ அரசை விட்டுக்கொடுத்திடு" என்றார். அதற்கு நான் முடியாது என்று சொன்னபோது "இஞ்சபார் நீ விட்டுக்கொடுக்காவிட்டால் நான் என்ன செய்வன் என்று உனக்குத் தெரியாது. அரசு இயக்கத்தில் இருக்கிறார் என்றும் இந்தியாவுக்கு வந்திருப்பதே ஒரு சதித்திட்டத்துக் காகத்தான் என்று பொலிசில் சொல்லி அவரை ஆயுள் பூராகச் சிறையில் தள்ளிப் போடுவன். இதற்கு முதலும் அரசைப் பொலிசில மாட்டிவிட்டனான். அதால சொல்லுறன் பேசாமல் அரசை விட்டுக் கொடுத்திடு" என்றார்.

திருமணத்தன்று எங்கள் இருவருக்கும் இருந்த காதலைப்பற்றி யாரோ சொல்லி அறிந்த எனது கணவர் அன்றில் இருந்து கணவராக அல்ல மனிதராகக்கூட நடந்து கொள்ளவில்லை. மேற்கொண்டு அவரிடம் சித்திரவதைப்படுவதிலும் பார்க்க சாவதுமேல் என முடிவு செய்துள்ளேன். பிளீஸ் உங்களிடம் ஒரு வேண்டுகோள். கண்டிப்பாக நீங்கள் அதன்படி நடக்கவேணும்.
"மூர்த்தி அண்ணா செய்த துரோகத்துக்காகத் தேன்மொழியைப் பழிவாங்கி விடாதீர்கள். அவள் ரொம்ப நல்ல பொண்ணு."
இக்கடித்தை நீங்கள் வாசிக்கும்போது நான் மரணித்திருப்பேன். அடுத்த ஜென்மம் என்று ஒன்று இருந்தால் யாரும் பிரிக்க முடியாத காதலர்களாக இணைவோம்.
இப்படிக்கு அன்புடன் அஸ்வினி

ஆயுள் பூராக உயிரின் நிழலாக அவளது நினைப்பு அவனைத் தொடரும்போது எதற்கு இந்தக் கடிதம். அவன் அக்கடிதத்தை கொஞ்சம் கொஞ்சமாகக் கிழிக்கத் தொடங்கினான். அவனது கண்களில் இருந்து கண்ணீர் தடுப்பார் இன்றி ஆறாக ஓடத்தொடங்கியது. "ஐயோ!" என்று அவன் போடும் சத்தம் வீடு முழுக்க அதிர்வை உண்டாக்கிற்று. அவன் இப்பொழுது அழுவதையோ சத்தம் போடுவதையோ யாராலும் தடுக்க முடியாது.

"காதலர்களைப் பிரித்து விட்டால்....
காதல் மரணித்து விட்டது"
என்று எண்ணாதீர்கள்.
காதலுக்கு எங்கே மரணம்?

முற்றும்.

தமிழ்ச்சி கவிதைகள் நான் (என்கின்ற) காவிரி

அடையாளங்களைச் சுமந்தெனக்கு ஆயாசமாயுள்ளது!
குடத்து நீர், சிறுகுப்பிக் குடி நீர், குளத்து நீர், குட்டை நீர்,
குளிர் பதன நீர், ஏரி நீர், அடைகாக்கும் அணை நீர்,
அளவோடு விழும் மடை நீர், ஆவியாகும் முன்பான அனல் நீர்,
தூசியில்லா வடி நீர், மண் தேங்கும் மழை நீர்,
தொடுவானம் கரையிடும் கடல் நீர்.....
எனும் அளவுகளின்
உள்ளோடி மூச்சடைக்கும் உருவகங்களுக்குள் உடைபடாத
பெண்மையாய் எனதார்க் கரிசல் மண்ணில் மல்லாந்து
வட்டார மொழி சுழிக்க வடிவங்களின் முகம் தொலைத்து
நதி நீராய்ப் புரண்டோட வேணுமெனக்கு.....இலக்கின்றி!

DEBT MANAGEMENT CLINIC
கடன் தொல்லைகளிலிருந்து விடுபட உதவி வேண்டுமா?

- உங்கள் கடன் கட்டுப்பணத்தை 80%வரை குறைத்தல்
- எல்லாக் கடன் அட்டைகளின் மாதாந்தக்கட்டுப் பணத்தை ஒன்றாக்குதல்
- மேலதிக சதவீத வட்டி (Interest) இல்லாமல் செய்தல்
- அறவீட்டாளர்களின் (Debt Collection Agencies) தொல்லைகளில் இருந்து விடுபடுதல்
- கடன் கொடுத்தவர்களின் (Creditor's) சட்ட நடவடிக்கை களிலிருந்து (Legal Action) விடுபடுதல்
- கடன் தீர்க்க வகையற்ற நிலையிலிருந்து (Bankruptcy) விடுபடுதல்

நாங்கள் உங்கள் சார்பில்
கடன் கொடுத்தவர்களிடம் வாதாடுவோம்

Additional Services:
Bookkeeping, Tax Returns
Internet Access, Fax

முதல் ஆலோசனைக்கு (FREE Consultation) அழையுங்கள்

G. Kumar Thevendra
Debt Management Counseller
Tel: 416-261-2168
Tel: 416-618-7294

TL Debt Management & Financial Services
Hillside Plaza
2857 Lawrence Ave. E., Suite 12
Scarborough, Ontario M1P 2S8

உதயன் இராசி பலன்

28.11.2002 - 05.12.2002

மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ம் பாதம்

நண்பர்கள் விடயத்தில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். உங்களுக்கு எதிராகவும் நடக்கமுற்படக்கூடும். எதிரிகளின் பலம் அதிகரித்துக்காணப்படும். மனஅமைதி குலைந்து மனம் ஒரு சீராக இருக்காது. அலைபாய்ந்தபடி இருக்கும்.

இடபம்: கார்த்திகை2ம், 3ம் பாதங்கள், ரோகிணி, மிருகசிரிடம்1ம் , 2ம் பாதங்கள்

உடல் ஆரோக்கியம் அபிவிருத்தியடையும். பண வரவில் முன்னேற்றம் தென்படும். வாகனம் வாங்கவோ மாற்றவோ கூடும். எதிரிகளது சூழ்ச்சிகள் செயலிழந்துபோகும். விரோதிகள் தம் நிலை மறந்து நேசக்கரம் நீட்டமுன்வருவர். நண்பர்களும் உறவினர்களும் ஆதரவுக்கரம் நீட்டவும் முன்வருவர்.

மிதுனம்: மிருகசிரிடம்3ம்,4ம் பாதங்கள், திருவாதிரை புனர்பூசம்1ம்,2ம்,3ம், பாதங்கள்

எதிர்பாராத விதத்தில் வருத்தம் தரக்கூடிய நிகழ்வுகள் ஏற்படலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படலாம். வீணான அவதாதம் வந்துசேரலாம். பொருட்கள் திருடப்படலாம். பிள்ளைகளினால் சச்சரவுகளைச் சந்திக்கும் நிலை வரலாம். பிடிவாத குணத்தைத் தளர்த்தி எச்சரிக்கையுடன் இருந்துவருவது நலமாகும்.

கடகம்: புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயில்யம்

வேலையில் ஆர்வமோ உற்சாகமோ இருக்காதுபோகலாம். பெற்றோரது தேகநிலையில் மாற்றம் வரலாம். விரோதிகளின் செயற்பாடுகள் எதிர்பாராத அளவிற்கு சுறுசுறுப்பு நிலை எய்தலாம். பொருள் இழப்பு ஏற்படலாம். இத்துடன் அளவுகடந்த அலைச்சலும் மனச்சோர்வும் காணப்படும். **சிங்கம்: மகம், பூரம், உத்தரம் 1ம் பாதம்.**

பொருளாதார முன்னேற்றம் ஏற்படக்கூடியதாக அனுமானிக்கமுடியும். ஆரோக்கியம் சிறந்து காணப்படும். நண்பர்கள் சுற்றத்தார்களுடன் விருந்து வைபவங்களில் கலந்துகொள்ளக்கூடியதாக இருக்கும் இல்லத்திலும், வெளியிலும் மனமகிழ்ச்சியைத் தரக்கூடிய சம்பவங்கள் நிகழலாம்.

கன்னி: உத்திரம் 2ம், 3ம், 4ம் பாதங்கள், அத்தம், சித்திரை 1ம், 2ம் பாதங்கள்

முன் ஜாக்கிரதையாகவும் மிகவும் எச்சரிக்கையுடனும் இருந்து கொள்ள வேண்டி இருப்பது கஷ்டங்களைக்குறைக்க ஏதுவாகும். பொருளாதார இழப்பு ஏற்படலாம். எதிரிகளிடம் நேருக்கு நேர் சந்திக்கும்படி இருக்கும். ரத்தம் சிந்தும்படியான காயங்கள் ஏற்படலாம். வேளை உணவு தப்பும்.

துலாம்: சித்திரை 3ம், 4ம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1ம், 2ம், 3ம் பாதங்கள்

அனாவசியத் தொல்லைகளிற்கு முகம் கொடுக்கும் தூர்ப்பாக்கிய நிலை வரலாம். தகப்பனாரது உடல் ஆரோக்கியத்தில் மாற்றம் தென்படும்படியாக இருக்கும். பொருட்சேதம் ஏற்படக்கூடும். அரச மட்டத்தின் சவால்களை எதிர்கொள்ள வேண்டி வரலாம். ஆயுதத்தால் அல்லது தீக்காயம் வரலாம்.

விருச்சிகம்: விசாகம்4ம் பாதம், அனுஷம், கேட்டை

அவமானப்படவேண்டியோ கெட்ட பெயர் கேட்கும்படியாகவோ இருக்கும். வீண் அலைச்சல்களால் மனச் சோர்வும் உடற்சோர்வும் காணப்படும். பொருளிழப்பு ஏற்படலாம். விரோதிகளை நேருக்குநேர் சந்திக்கும் நிலை கூடவரலாம்.குடும்பத்திலும் குழப்பங்கள் வருத்தங்கள் காணப்படலாம்.

தனுஸ்: மூலம், பூராடம், உத்தராடம் 1ம் பாதம்

செய்தொழிலில் இடையூறுகள் சிக்கல்கள் ஏற்படக்கூடும். தீயவர்களது நட்பினால் கஷ்டங்கள் இருக்கலாம். மன அமைதிக்கு பங்கம் ஏற்படும்படியாக இருக்கும். மேலதிகாரிகளது ஆதரவு குறைந்து காணப்படும். குடும்பத்தில் உரு புதிய ஜீவனின் வரவு ஏற்படலாம். மக்களின் தொல்லை உணரப்படும்.

மகரம்: உத்திராடம்2ம்,3ம்,4ம்பாதங்கள், திருவோணம்,அவிட்டம்1ம்,2ம் பாதங்கள்

மனதில் ஒருவித பயம் ஏற்படுவதை உணர்ந்து கொள்ள முடியும். செய்தொழிலில் கெட்டபெயரும், நஷ்டமும் அவமானமும் கூட வந்து சேரலாம். மேலதிகாரிகள் எதுவிதத்திலும் உதவுவதற்கு முன்வராது போகலாம். பெண்களினால் செலவு ஏற்படும். பணத்தட்டுப்பாடு உணரப்படலாம். உறவினர்களோ நண்பர்களோ உதவ பின்நிற்கலாம்.

கும்பம்: அவிட்டம்3ம்,4ம்பாதங்கள்,சதயம்,பூரட்டாதி1ம்,2ம்,3ம், பாதங்கள்

செலவு அதிகரித்துக்காணப்படும். நண்பர்களாலும் உறவினர்களாலும் பணவரவு ஏற்படும்படியாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி தரக்கூடிய சுபகாரியங்கள் இடம்பெறலாம். செய்தொழிலில் அதிக முன்னேற்றத்தைக் காணக்கூடியதாக இருக்கமாட்டாது.

மீனம்: பூரட்டாதி4ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

பொருளாதாரத்துறையில் முன்னேற்றம் காணும்படியாக அமையும். நண்பர்களாலும் உறவினர்களாலும் பணவருவாய் ஏற்படலாம். மேலதிகாரிகளது ஆதரவு அதிகரிக்கும். உயர்ச்சிக்கு வழிகோலப்படும். எதிர்ப்புகள் மறைந்து போகும். நன்மைகள் பல ஏற்படும்.

ஜோதிடமணி ஈஸ்வர முத்துக்குமாரசாமிக்குருக்கள்

74, DANDELION ROAD, BRAMPTON, ONTARIO L6R1Y3. 905 793 2085

(உங்களுக்குத் திருப்தியை ஏற்படுத்தும் வகையினில் ஜாதக பலன்களும் விளக்கங்களும் தரவல்லவர்)

Do you need a LOAN or MORTGAGE?

உங்களுக்கு கடன் வசதி Mortgage வசதி செய்து தர வேண்டுமா?

Mortgage

(Residential & Commercial)

Loans

(Business, Personal, Credit Cards, Line of Credit, Taxi, Taxi plate, Car, Truck etc.)

Note: No brokerage fees from qualified buyers and interest rate discount up to 1% or 3% cash back and more...

TARLOCHAN AUJLA (Ph.D)

ALPHA FINANCIAL SERVICES

PHONE: 416-750-1496 CELL: 416-885-1490

2390 Eglinton Avenue East, Suite 238, Scarborough, ON

Dr. Nirmala Siva

Family Dentist

டாக்டர். நிர்மலா சிவா

குடும்ப பல் வைத்தியர்

உங்கள் பற்களை உறுதியாகவும், ஆரோக்கியமாகவும் பேணுவதற்கு நாடுங்கள்

HUMBER VALLEY DENTAL CENTER

2630 Kipling Avenue
Suite 8,
Rexdale, ON, M9V 4B9
(Kipling / Steeles)

416-745-4500
CELL: 416-457-7482
SIVA

தீங்கள், வெள்ளி, சனி, ஞாயிறு

GOREWAY DENTAL CENTRE

7125 Gorway Drive,
Suite 206,
Malton, ON, L4T 4H3
(Derry / Gorway Derive)

905-673-7874
CELL: 416-457-7482
SIVA

தீங்கள், செவ்வாய், வியாழன், சனி,

உங்கள் வீடு ஒன்றை விற்க விரும்புகிறீர்களா? வாங்க விரும்புகிறீர்களா?

Meena Sakthivel

(Sales Associate)

Gold Award Winner up to 2000
Platinum Award Winner 2001

Bus:
416-281-8090
Res:
905-428-9299
Fax:
416-281-2753

தரமான
சுத்தமான சூழல்
சுற்றாடல்

நியாயமான விலை

குறைந்த வட்டி வீத
அடைமான ஒழுங்குகள்

இலவச மதிப்பீடு

வெற்றிகரமான
சந்தைப்படுத்தும் திட்டம்

இவையாவும் கலந்த
எனது மாசற்ற சேவைக்கு
எனது உத்தரவாதம்

விபரங்களுக்கு
அழையுங்கள்

மீனா சக்திவேல்

416-281-8090

HOMELIFE

Home Life / Champions Realty Inc.

Realtor Member

8130 Sheppard Ave. E., Suite 206, Toronto, ON M1B 3W3

"உதயன்" வாசகர்களின் அமோக பாராட்டுக்களைப் பெற்ற **"ஒரு சிறீலங்கா நாயின் கதை", "மிஸ் ஆச்சி"** ஆகிய நகைச்சுவைத் தொடர்களைத் தொடர்ந்து உங்கள் அபிமான நகைச்சுவை எழுத்தாளர் **"டொன்மில்ஸ்" சிவப்பிரகாசம்** எழுதும் **"பெரியப்பாவின் ஆவி"** என்னும் நகைச்சுவைத் தொடர் உதயன் வார இதழில் வெளிவந்து கொண்டிருக்கின்றது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

- பிரதம ஆசிரியர்

அங்கம் - 17

பெரியப்பாவின் ஆவி!

- டொன்மில்ஸ் சிவப்பிரகாசம்

மலேசிய மாமி

கலோ.....?

"கலோ அகிலா கேற்றறிங்....."

"கலோ தங்கச்சி நான் இளையதம்பி கதைக்கிறன். என்னை தெரியுமெல்லே. நான் ஊரிலை சிவக்கொழுந்து அண்ணையின்ரை ஒண்டுவிட்ட.....!

என்ன தங்கச்சி உனக்கு இதெல்லாம் கேக்க நேரமில்லையோ? பரவாயில்லை சரி....சரி.....

தங்கச்சி எனக்கு துடையிலை ஒரு பதினஞ்சும் இளம் காலா பார்த்து ஒரு பத்து காலும் நல்ல பொன் நிறத்திலை இருக்கவேணும் அப்பிடி பொரியலும் இருநூறு இடியப்பம் பத்தாது பிள்ளை ஒரு வாய்க்கு ஒரு இடியப்பம் எண்டு கணக்கெடுத்தாலும் நானூறு வேணும். சம்பல் இலவசமா தருவியள். அது தெரியும் றேடியோக்களிலை கத்தி கத்தி கேட்டு அதுகள்தான் இப்ப காதுக்கை இரைஞ்சு கொண்டு இருக்கு. என்ன சொதியோ....அதுவும் இலவசம் எண்டு தெரியும் பிள்ளை. ஆனால் அதுக்கை ஏதாவது உப்பு, புளியை கரைச்சு விடுங்கோ பிள்ளை.

போனமுறை ஊரிலை இருந்து என்ரை அக்கா குடும்பம் வந்தவை. உந்த சொதியை என்ரை மனுசி மேசையிலை வைக்க என்ரை அக்கா அது கொழும்பிலை சிங்களவன்ரை கடையிலை சாப்பிட முன்னம் கைகழுவ வைக்கிற தண்ணி எண்டு நினைச்சு மனிசி கையை வைச்சு கழுவிப்போட்டுது. பிறகு நாங்கள் சொல்லத்தான் சொதி எண்டு நினைச்சுப் போட்டு தான் ஏதோ ஊரிலை சிங்கள கடையிலை கைகழுவ தண்ணி வைப்பாங்கள் அதுபோல இஞ்சை வெளிநாடுதானே மஞ்சள் கலரிலை வைச்சிருக்கிறாங்களாக்கும் எண்டு நினைச்சன் எண்டு சொல்லிச்சுது.

ஓம் பிள்ளை என்ன கொம்போ? சீ...சீ....மாடு, கொம்பு எல்லாம் நாங்கள் தின்கிறதில்லை பிள்ளை.... ஆ.....ஆ.....எல்லாத்தையும் சேர்த்து கொம்போ என்கிறதோ?

எட எனக்கு விளங்க இல்லை போலை. ஊரிலை வியாளாச்சி அக்கா தோசையும் சம்பலும் தோசையை கிளப்பிப் போட்டு சம்பலை இடையுக்கை செருகிப்போட்டு தருவா. அதுதானாக்கும் இஞ்சை கொம்போ எண்டு சொல்லிறியள் இடியப்பத்துக்கு ஏன் பிள்ளை சலாட்டையும் சல்லடையையும். அதெல்லாம் வேண்டாம் பிள்ளை.

என்ன அப்பிடி எடுத்தால் விலை மலிவோ? ஓ....ஓ...இப்பதான் பிள்ளை ஞாபகம் வருகுது. அப்ப கொம்போ, இட்டலி கொம்போ எண்டு முட்டை அப்பம், பால் அப்பம், பிளேன் அப்பம் எண்டு எல்லாம் சேர்ந்து வாறதைத்தான் சொல்லுகினம். அதுவும் கனடாவிலை சட்டம்போல. எங்களுக்கு தெரிஞ்சது எல்லாம் ஊரிலை இடியப்பம் சொதி, கிழங்கு கறி, ஒரு வடை. இதைவிட்டு உந்த கொம்புகள் எல்லாம் தெரியாது. ஓ....ஓ....புட்டுக்கு துரையப்பா அண்ணை முட்டியுக்கை இருக்கிற சொதியை ஊத்திவிடுவார். அதைவிட வேணுமானால் கடையிலை கதலி வாழைப்பழம் ஒரு குலை, இதரை வாழைப்பழம் ஒரு குலை தொங்கிக் கொண்டு என்னை புடுங்கு என்னை புடுங்கு....எண்டு ஆடி ஆடி ஆசைகாட்டிக் கொண்டு இருக்கும். அதிலை ஒண்டை வேறையா புடுங்கித் தின்பம். சரி....சரி...பிள்ளை கோவிக்காதை. சில நேரம் நான் என்னை மறந்து பழைய நினைவுகளுக்குப் போயிடுவன். இல்லைப்பிள்ளை இடியப்பம் மட்டும் உன்ரை கடையிலை வாங்கச் சொல்லி என்ரை மனிசி சொன்னவா. புட்டுக் கொத்து வேறை கடையிலை நல்லா கொத்துவினமாம். இடியப்பக் கிளறு, கொத்து றொட்டி, ஒ....இதுகளுக்கும் என்ரை மனிசி வெவ்வேறு கடை வைச்சிருக்கிறா. நாங்கள் உந்த கொத்துக்களை எங்கை ஊரிலை கண்டம்? "கொத்தினா நிலத்தை நிமித்தனா மண்வெட்டி" எண்டுதான் வாழ்ந்தனாங்கள். இஞ்சை உதுகளை கொத்திறாங்கள். என்ரை பேரனை கேட்டன் ஏனெடா இப்பிடி எண்டு. அவனிட்டை இருந்துதான் அறிஞ்சன். இஞ்சை முள்ளு கறண்டியாலைதானாம் சாப்பிடுகிறது. அப்ப எப்பிடி இடியப்பத்தை சாப்பிடுகிறது, புட்டை எப்பிடி சாப்பிடுகிறது, வீச்சு றொட்டியை எப்பிடி வீச்சுறது எண்டு கேட்டான். சரி பிள்ளை பின்னேரம் ஏழு மணிக்கு றெடியா செய்துவை. வந்து எடுக்கிறன். அப்ப வைக்கட்டே....."

என்ன இளையதம்பி ஒரே ரெலிபோனா கிடக்கு என்ன வீடெல்லாம் துப்பரவாக்கிறாய். எங்கை மாமியை காணம். ஊரிலை தூசி தட்டின கதையா? என்ன விசேசம்? ஏதாவது பேரன் பேத்திக்கு கலியாணம் ஏதாவது சரி வந்திட்டுதோ?

எட ஆர் அம்பலவாணியே! வா...வா....இல்லை....இல்லை மலேசியாவிலை இருந்து கனகசபை மாமாவும் புவனேஸ்வரி மாமியும் வந்திருக்கினமாம். இண்டைக்குப் பின்னேரம் எங்கடை வீட்டை வருகினமாம். அதுதான் இடியப்பத்துக்கு அடிச்சுச் சொல்லிப்போட்டு தூசு தட்டிக்கொண்டு நிற்கிறன். இஞ்சைபார் இந்த வால் யூனிட்டோ என்ன இழவோ ஒண்டை வாங்கிப் போட்டிருக்கினம். வாங்கின நாளிலை இருந்து இரண்டு வருசமாப் போச்சு அதை துடைச்சது கிடையாது. ஆரும் வாறது எண்டாதான் முருகன் கோயில் சாமரை வீசுகிறது மாதிரி ஒரு சாமரை வைச்சிருக்கினம் எடுத்து வீசி விடுவினம். அதுசரி மலேசியாகாறர் உன்னட்டை வந்தவையே?

அந்தக் காலத்திலை கனகசபை மாமா தாலி கட்டின கையோடை புவனேஸ்வரியை தற தற எண்டு இழுத்துக்கொண்டு மலேசியாவுக்கு ஓடினவர். பிறகு இரண்டு பிள்ளையளையும் பெத்து பேரன் பேத்தியை கண்டுபோட்டு இப்பதான் அதுவும் கனடாவுக்கு வந்து கலியாண சாப்பாடு சாப்பிட வந்திருக்கினம். மாமியின்ர சகோதரி சரோசா மாமியின்ரை வீட்டிலைதான் நிற்கினமாம். சரோசாவின்ரை பெட்டையை ஊரிலை இரண்டு மாத குழந்தையாகத்தான் புவனேஸ்வரி மாமி கண்டவ. இப்ப ஏர்போட்டிலை அவளும் புருசனும்தான் சந்திக்கப் போயிருக்கினம். புவனேஸ்வரிமாமி அவளைத் தேட இவள் அவளைத் தேட ஒரே போராட்டமாம்.

புவனேஸ்வரி மாமியிட்டை எப்பிடி மாமி கனடா எண்டு கேட்டன். மாமி சொன்னா கனடா நல்லாத்தான் இருக்கு. ஆனால் ரொயிலட்தான் ஊரிலை இருக்கிறதுபோல் அடிப்படை கழுவிற வசதி இல்லாமல் எல்லாம் பேப்பர் சமாசாரமா கிடக்கு.....எண்டு இழுத்தா. எட! அப்ப மலேசியா இன்னும் இந்த விசையத்திலை முன்னேற இல்லை எண்டு நினைச்சுக் கொண்டன்.

எப்பிடி மாமி விருந்தோம்பல் உபசாரம் எல்லாம் இருக்கு எண்டு கேட்டன். எல்லாம் லண்டன் மாதிரித்தான்.....என்று இழுத்த மாமி தொடர்ந்து போற இடமெல்லாம் கோழிக்காலும் இடியப்பமும் சொதியும்தான் தருகினம்.

இன்னுமொரு விசையம் ஊரைவிட்டு முப்பது வருசமா இனசனங்களைவிட்டுப் போனதுக்குத் தண்டனையா போற இடங்களில் எல்லாம் பழைய போட்டோ அல்பங்களை கையிலை தந்து முப்பது வருச அல்பங்களை இரண்டு மணித்தியாலத்திலை பார்க்க சொல்லுகினம். சில இடங்களிலை வீடியோவைப் போட்டு தங்கடை பிள்ளையளின்ரை பேர்த்டே கலியாண கசற்றுகளைப் போட்டு விட்டிட்டு அவர் இவற்றை மாமா, இது மாமி, அங்கை.....அங்கை....அதிலை நிற்கிறவர் இவற்றை தமையன். லண்டனிலை டொக்டராக இருக்கிறார். இது இவற்றை தம்பி நோர்வேயிலை இருக்கிறார். இது இவற்றை சகோதரி பரிசிலை இருக்கிறா எண்டு பெருமையா சொல்லுகினம் எண்ட மாமியைப் பார்த்து நான் சொன்னன் எல்லாம் இஞ்சை இருந்தா கதை வேறையா இருந்திருக்கும் மாமி.

மாமாவுக்கு ஒரே இரையா இருக்கிறது நாரிப்பிடிப்பு. என்ன செய்யிறது நெளிஞ்சு நெளிஞ்சு இருந்து பார்த்தாராம். இல்லாட்டி குறை நினைப்பினம் எண்ட பயமாம்.

அடுத்த வாரமும் மாமி வருவா.....



உங்களுக்கு பணம் தேவையாயின் தங்க நகைகளை விற்காதீர்கள்!

அனுமதி பெற்ற எம்மிடம் அடைவு வையுங்கள்

உடன் அழையுங்கள்

416-536-2020

- Same Location since 1995
- Instant CASH
- Low Interest

WE ALSO BUY AND SELL QUALITY 22K JEWELLERY

QUEENGLAD PAWN BROKERS

1200 Queen St. West (at Dufferin)

416-536-2020

நிலவே

சிறுகதை

நீ யாருக்குச் சொந்தமடி....!

ஆக்கம்: சரஸ்வதி அரிகிருஷ்ணன்

தமிழீழ மண்ணில் அவளும் அவனும் வெவ்வேறு கிராமங்களில் பிறந்து வளர்ந்து தொடக்கக் கல்வியைப் பயின்றிருந்தாலும் மட்டக்களப்பு பாரதி கல்லூரிதான் அவர்களை ஒன்று சேர்த்தது.

அந்தக் கல்லூரியில் கல்வி பயில்கின்ற வடிவான....அழகான பெண்களிடையே அவள் மட்டுமே அவனுக்குப் பேரழகியாகத் தோன்றினாள். அவள்மீது அவன் தனிமதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தான். அவள் மற்றப் பெண்களிடம் மனம்விட்டு மகிழ்ச்சியாகப் பேசிப் பழகினாலும் சக மாணவர்களிடமிருந்து சற்று ஒதுங்கியே பழகினாள். அவளுடைய அந்தப் பண்புகண்டு பெருமை பெற்றவன் அவளைத் தன் இதயத்தில் இருத்தி ஓர் இன்ப சுகம் கண்டு வந்தான். மனத்தின் அந்த இன்ப சுகத்தால் அவளை உளமாரக் காதலித்தான். அந்தக் காதலை அவள் ஏற்றுக்கொள்ள வேண்டுமே என்ற கவலையும் அவனை வாட்டியது. ஒரு பெண்ணின் உள்ளத்தைப் புரிந்து கொள்ளாது.... அவளுடைய மனக்கருத்தையும் தெரிந்து கொள்ளாமல் அவளைப் பற்றியே நாளும் பொழுதும் காதல் உணர்வால் வருந்திக் கொண்டிருப்பது சரிதானா என்ற எண்ணத்தால்கூட அவன் வருந்தியது உண்டு. அந்த வருத்தத்தால் அவன் உடல் மெலிந்து கொண்டிருந்தது. ஆனால் மனத்தால் வலிமையோடேயே இருந்தான். அவளைப்பற்றியே அதிகமாகச் சிந்தித்தாலும் படிப்பிலே அவன் சோடைபோகவில்லை. அவனுடைய உடல் மெலிவுக்கான காரணத்தைப்பற்றி நண்பர்கள் எல்லாரும் கேட்ட கேள்விகளுக்கு அவன் ஏதேதோ ஒன்றுக்கொன்று சம்மந்தம் இல்லாத பதிலைச் சொல்லிக் கொண்டிருந்தான். அவனுடன் படிக்கும் கல்லூரி மாணவிகள்கூட சிலர் அவனைப்பற்றி நலம் விசாரித்தனர். யார் யாரோ அவனைப்பற்றி நலம் விசாரிக்கும் போது அவள் மட்டும் பாராமுகமாக இருக்கிறாளே.....!

சக மாணவன் என்ற எண்ணத்தால் ஒப்புக்காவது அவள் ஒரு வார்த்தை கேட்டிருந்தால்கூட அவன் மகிழ்ந்திருப்பானே...! அவள் மனம் என்ன கல் மனமா.....! பெண் மனம் மென்மையானது. அந்த மென்மையான மனத்தில் என்றாவது ஒருநாள் ஈரக்கசிவு ஏற்படாமலா போய்விடும். அழுகின்ற தன் மனதுக்கு அவன் ஆறுதல் சொல்லிக்கொண்டானே தவிர மனப்பாரத்தை இறக்கி வைத்து மாற்றுவழி காண அவனால் முடியவில்லை. அவன் அவளிடம் கொண்டுள்ள அன்பை... பாசத்தை.... காதலை.... மனம்விட்டு அவளிடம் சொல்ல முடியாது பேதலித்துப் போனான். மறைபொருள் என்றாவது ஒருநாள் வெளி உலகுக்கு வெட்ட வெளிச்சம் காட்டி விடுவது போலத்தான் அவனுடைய காதலும் எல்லாருக்கும் தெரியும்படி அவனுடைய செயல் காணப்பெற்றது. அவன் விரும்பிய, மனதால் காதலித்த அந்தப் பெண்ணின் பெயரை எழுதத் தொடங்கிவிட்டான். கல்லூரிப் பாடங்களை எழுதிய அந்தப் பேனாவால் "கஸ்தூரி....கஸ்தூரி...." என்று எழுதினான். பல அர்த்தங்களைக் கொண்டுள்ள அந்த "கஸ்தூரி" என்ற பெயரை எழுதுகின்றபோதுதான் அவனுக்குள்ளே எத்தனை எத்தனை பேரின்ப சுகம்....! அந்தச் சுகத்திலே அவன் திளைத்துப் போகிறான். ஏட்டிலே எழுதுகிறான்.....! எழுதியவற்றைப் பவ்வியமாகப் பத்திரப்படுத்துகின்றான். அவனுக்கு அதுதான் சொர்க்கமாகத் தோன்றுகின்றது. "கஸ்தூரி" என்று ஆயிரக்கணக்கில் எழுதிய அந்த ஏட்டை எடுக்கிறான். அக்கம் பக்கம் பார்க்கிறான். "கஸ்தூரி" என்று மனம் மெல்ல சொல்ல அவனுடைய செவ்விதழ்கள் அந்தக் "கஸ்தூரி" என்ற எழுத்துக்களிலே பதிகின்றது. மூச்சுவிட்டு முத்தம் கொடுத்தால் "கஸ்தூரி" என்ற அந்த எழுத்துக்கள் சூடாகி கரைந்து விடுமோ என்றெண்ணியவன் சுவாசத்தை உள்ளே இழுத்துக் கொண்டு முத்தமிட்டான். அவனுடைய அந்தச் செயலை யாரும் அறியவில்லை என்று எண்ணியது எவ்வளவு பெரிய தவறு என்பதை உணர்ந்து வருந்தினான். இவனால் "கஸ்தூரி...கஸ்தூரி..." என்று எழுதப்பெற்ற அந்தத் துண்டு துண்டு வெள்ளைத் தாட்களில் ஒன்று எப்போதோ எங்கேயோ அவனால் தவறப்பட்டிருக்க வேண்டும். அந்தத் துண்டு காகிதத்தை வைத்துக் கொண்டு அந்தக் கல்லூரி மாணவர்கள் அவனைப் பகிடி செய்தனர். அவன் வெட்கித் தலை குனிந்தான். என்றாலும் தன்னுடைய எண்ணத்தைப்பற்றி அவள் தெரிந்துகொள்ள ஒரு வாய்ப்பு ஏற்பட்டுள்ளதை எண்ணி மகிழ்ந்தான். அதே வேளையில் அந்த மகிழ்ச்சி நிரந்தரமாகுமா அல்லது கல்லூரிப் படிப்புக்கு ஒரு முற்றுப்புள்ளி ஆகிவிடுமா என்றும் வருந்தினான். "கஸ்தூரி....கஸ்தூரி...." என்று இவனால் எழுதப்பெற்ற ஏடுகளில் ஒன்று அந்தப்பெண் கஸ்தூரியிடம் கிடைக்கப்பெற்றபோது அவள் கூச்சல் போடவில்லை! குழப்பம் பண்ணவில்லை! ஆர்ப்பாட்டம் செய்யவில்லை.

அந்த ஏட்டை அவள் பத்திரப்படுத்தினாள். அந்தச் சேதி சில மாணவிகளின் வழி இவனுக்குத் தெரியவந்தபோது அதிர்ந்து போனான். கஸ்தூரி நல்லவளாக இருந்தாள். நயமாக நடந்து கொள்வாள். முன்கோபி, அவசரப்புத்தி கொண்டவளாக இருந்தால்.....! அவன் மன உளைச்சலால் அல்லாடிப் போனான். இனி ஏதோ ஒன்று எப்படியோ நடக்கப் போகிறது. அது எதுவாக இருந்தாலும் எதிர்கொள்ளும் நிலைக்குத் தன்னைத் தயார் படுத்திக்கொண்டவன் தன் நெத்திப் பொட்டுக்களை இரண்டு கட்டை விரல்களாலும் அழுத்திக்கொண்டு கண்களை மூடி அமர்ந்திருந்தான். திடீரென கல்லூரி முதல்வர் அழைப்பதாக ஒரு சேதி. அவன் அருண்டு போனான். செய்த தவறை ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்கும் எண்ணத்தோடு கல்லூரி முதல்வரின் முன் போய் நின்றான். அவர் அவனை 'வா' என்று அழைக்கவில்லை. 'உட்கார்' என்றும் சொல்லவில்லை. எடுத்த எடுப்பிலேயே "கரன், இது கல்லூரி. படிக்க வந்த இடம்....காதலிக்கும் இடமில்லை. நீ எப்படியாவது கெட்டுப்போ....கவலை இல்லை! ஆனால் மற்றவர்களைக் கெடுக்காதே. அதிலும் பெண்கள் மனசோடு விளையாடாதே....! உன்னால் எமக்கும் இந்தக் கல்லூரிக்கும் மிகவும் கெட்டபெயர் ஏற்படுவதை நான் விரும்பவில்லை. அதனால் உன்னை இந்தக் கல்லூரி யில் இருந்து நீக்கிவிட்டேன். நீ போகலாம்" என்று மூச்சு விடாமல் சொல்லி முடித்தார் கல்லூரி முதல்வர்.

"ஐயா நான் சொல்வதை நீங்கள் கொஞ்சம் கேட்டவேணும்" என்ற கரன் சட்டென முதல்வரின் முகத் தைப் பார்த்தான். அங்கே அந்தக் கல்லூரி முதல்வரைக் காண வில்லை. சுற்றிலும் பார்வையை செலுத்தினான். அது கல்லூரி முதல்வரின் அறையுமல்ல! அப்படி யானால் தான் ஒரு பிரமையில் சிக்குண்டுள்ளதை உணர்ந்தவன் இருக்கையை விட்டு எழுந்தான்.

அப்போது நான்காக மடிக்கப்பட்டிருந்த ஒரு துண்டு வெள்ளைக் காகிதம் அவனுடைய கண்களுக்குத் தென்பட்டது. அவசர அவசரமாக அதை எடுத்தான். மடிப்பைப் பிரித்தான். அதிலே ஏதோ எழுதப்பட்டிருந்தது. படித்தான். அந்த வாசகங்களை படித்து முடித்தபோது அவனுக்குள்ளே ஏற்பட்ட அந்த மகிழ்ச்சியை விளங்கிக் கொள்ளலாமே தவிர வார்த்தை களால் விளக்க முடியாது. அப்படிப்பட்ட ஒரு மகிழ்ச்சியில் திளைத்துப் போனான். அதே வேளையில் அந்த மகிழ்ச்சிக் குள்ளேயும் ஒரு பயம் ஏற்பட்டது. எதற்காக கஸ்தூரி தன்னைச் சந்திக்க விரும்புகிறாள் என்ற ஒரு கேள்வியால் அவன் கொஞ்சம் நிலை தடுமாறினான். என்றாலும் ஒரு அசட்டுத் தைரியம் அவனை உந்தித் தள்ளியது. அவன் அவளைச் சந்திக்க அவள் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தபடி குறித்த நேரத்தில் குறித்த இடத்துக்குச் சென்றான்.

தொடரும்.....

தமிழில் உரையாடி சர்வதேச தரம் மிக்க புதிய, பாவித்த

TOYOTA

வாகனங்களை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள

Mr. Pillai

416-292-2241 Ext: 4116

Cell: 416-565-9080

brimell toyota 30 YEARS!

5060 Sheppard Avenue East, Scarborough, Ont. M1S 4N5

Visit us on the web www.brimelltoyota.com

யமலோக நீதிமன்றம்

பல்கலைச் செல்வன் முஹம்மது ஹன்ஸீர்

"யமலோக நீதிமன்றம்" தொடர் நாடகம் -38

கதை வசனம்: பல்கலைச் செல்வன் முஹம்மது ஹன்ஸீர்

"உதயன்" ஏழாவது ஆண்டு நிறைவை ஒட்டிய விஷேட வெளியீடு

கடந்த வாரத் தொடர்ச்சி.....

நீதிமன்றக் காரியதரிசி: கனம் நீதிபதியவர்களே! தொகுப்புரை ஆரம்பிக்கப்பட முன்பு இன்னொரு விடயத்தையும் இங்கு கூறிக்கொள்ள வேண்டியிருக்கின்றது.

நீதிபதி: இன்னொரு விடயமா? கூறுங்கள் பார்க்கலாம்.

நீதிமன்றக் காரியதரிசி: எமராசனிடமிருந்து இவ்வழக்கு விடயமாக ஒரு ஓலை அதாவது கடிதம் உங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. இதோ கடிதம். (நீதிபதியிடம் கொடுக்கின்றார்)

நீதிபதி: தயவு செய்து அமைதியாக இருக்கவும். அதனை நான் இப்பொழுது படித்துப் பார்க்கின்றேன். (சிறிது நேரத்தின்பின்) ஆமாம் ஒரு நல்ல செய்தி வந்திருக்கின்றது. இவ்வழக்கிலே சாட்சியமளிக்கத் தேவைப்பட்ட பூலோகத்திலிருந்த ஒருவர் இப்பொழுது யமலோகத்திற்கு வந்து விட்டார் என்பதே அந்த நற்செய்தி.

நீதிமன்றக் காரியதரிசி: ஆ....மிக்க மகிழ்ச்சி கனம் நீதிபதியவர்களே. அவர் யார் என்பதை நாம் அறிந்து கொள்ள விரும்புகின்றோம்.

நீதிபதி: ஆமாம் கூறுகின்றேன். அவர்தான் ஜே.ஆர் ஜெயவர்த்தனா.

சித்திரபுத்திரன் + தேவதேவன்: கனம் நீதிபதியவர்களே! மிக்க மகிழ்ச்சியாக இருக்கின்றது.

நீதிபதி: இனி நாம் விடயத்திற்கு வருவோம். சித்திர புத்திரா உங்களது தொகுப்புரையை ஆரம்பியுங்கள்.

சித்திர புத்திரன்: நன்றி கனம் நீதிபதியவர்களே! கனகசபை எதிர் கருணாதாச என்ற இந்த வழக்கிலே டீ.எஸ். சேனநாயக்காவிடமும் டட்லி சேனநாயக்கா விடமும் விசாரணைகள் நடைபெற்று தொகுப்புரைகளும் வழங்கப்பட்டதன்பின் கொத்தலாவலையிடம் விசாரணைகள் நடத்தினோம். இவரது சாட்சியங்களை கொண்டு இவரை எடை போடும் பொழுது இவர் இரண்டு பக்கங்களையும் சார்ந்துள்ளமை புலனாகின்றது. ஒரு பக்கத்திலே மலைநாட்டு இந்தியத் தமிழர்களை விரட்டியடிப்பதில் மூலகாரணமாக இருந்தார். மறுபுறத்தில் தமிழ் பாசைக்கு இடங்கொடுக்க முற்பட்டார்.

இலங்கையிலுள்ள பொருளாதார வேலையில்லாப் பிரச்சனைகளுக்கும் இன்னும் எதிர்காலத்திலே வர இருக்கும் பிரச்சனைகளுக்கும் மலைநாட்டுத் தோட்டத் தொழிலாளர்களாக இருந்த இந்தியத் தமிழர்களே காரணமாக இருக்கின்றனர் என்ற கருத்தை முதன் முதல் இலங்கைச் சிங்களவர் மத்தியிலே விதையூன்றச் செய்தவர்தான் கொத்தலாவல. இலங்கை அரசியல் வரலாற்றிலே தமிழ் மக்களுக்குத் தொல்லை கொடுப்பதென்றால் சிங்களத் தலைவர்கள் ஒவ்வொரு கோணத்திலிருந்து தொடங்குவார்கள். அதில் டீ. எஸ். சேனநாயக்கா பல கோணங்களிலிருந்து பிடித்துக் கொண்டார். கொத்தலாவல ஒரு கோணத்திலிருந்து பிடித்துக் கொண்டார். ஏனைய அரசியல் தலைவர் களும் ஒவ்வொரு கோணத்திலிருந்து பிடித்துக் கொண்டனர். நசுக்கப்பட்டுக் கொண்டே சென்றவர்கள் தமிழ் மக்கள்தான்.

1939ம் ஆண்டு மார்ச் மாதம் அரசாங்கத்திலுள்ள இலங்கையல்லாத எல்லா நாளாந்த ஊழியர்களுக்கும் உதவித் தொகையோடு பிரயாணச் செலவுகளையும் கொடுத்து அவர்களை இந்தியாவுக்கு அனுப்பவேண்டு மென்றும் பின் எக்காரணங் கொண்டும் இலங்கைக்குத் திருப்பி எடுக்கக் கூடாதென்றும் இவர் கூறியிருக்கின்றார். கொத்தலாவலையின் இக்கொள்கை தான் மலைநாட்டுத் தமிழர்களையும் மலையேற்றவேண்டுமென்ற மன வேதனைக்குரிய செய்கைக்கு வழிகாட்டியது. இவர்களை அனுப்பாவிட்டால் அவருக்கு உறக்கமே வராது போலும்.

இவரது கொள்கைதான் மலைநாட்டுத் தமிழ் மக்களையும் வெளியேற்ற வேண்டுமென்ற அதாவது இலங்கையை விட்டே வெளியேற்ற வேண்டுமென்ற எண்ணத்தை உருவாக்க வழிகோலியது. இவர்களை அனுப்பாவிட்டால் இலங்கையிலுள்ள சிங்கள மக்களின் பிரச்சனை தீராது என்றெல்லாம் தப்பான கணக்குப் போட்டுக் கொண்டிருந்ததுதான் வேதனையிலும் வேதனையாகி விட்டது.

கனம் நீதிபதியவர்களே! இவரது ஆலோசனைகளும் டீ.எஸ். சேனநாயக்காவின் இன ஒழிப்புக்கொள்கையும் ஒன்று சேர்ந்துதான் மலைநாட்டுத் தமிழ் இனத்தின் 10 இலட்சம் பேர்களை அரசியல், பொருளா தார, சமூக அனாதைகளாக்கி விட்டன. இவர்கள் கொஞ்சமேனும் ஈவு, இரக்கம் இல்லாதவர்கள் என்பதை இவர்களது செய்கைகள் வெளிப்படை யாகவே காட்டி விட்டது.

சுதந்திர இலங்கையின் சோல்பரி அரசியல் திட்டத்தில் 29ஆம் பிரிவு பாராளுமன்றத்திலே சிறுபான்மையினருக்கெதிராக மசோதாக்கள் கொண்டு வரக்கூடாது எனக் கூறுகின்றது. மேலும் சிறுபான்மையினருக்குப் போதிய பாதுகாப்புக்கள் கொடுக்கப்பட்டும் இருக்கின்றன. எனினும் அவையாவும் ஏட்டுச் சுரக்காயாக அல்லவா இருந்தது. அச்சட்டம் பாதுகாப்புக்களினால் எவ்விதப் பயனும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. நடைமுறையில் சிறுபான்மையினருக்கு எவ்வித பாதுகாப்பும் கொடுக்கப்படவில்லை. சுதந்திரம் கிடைத்து அதே ஆண்டிலே அதே அரசியல் திட்டம் இருக்கும் பொழுதே தமிழ் மக்கள் கேவலமும் அகௌரவமும் அடைந்து விட்டனர்.

மலைநாட்டு இந்தியத் தமிழர்களை அரசியல், பொருளாதார, கல்வி, சுகாதார, சமூக துறைகளில் பெரிதும் பாதித்து விட்டனர். கண்ணீர் வடிக்கும் கதைகளையே காண வைத்தனர்.

அரசியல் திட்டத்திலே 29ஆம் பிரிவுக்கு எதிரான, சட்ட விரோதமான, சட்ட விரோதமாகக் கொண்டுவரப்படுகின்ற மசோதாக்களுக்கெல்லாம் பாராளுமன்றத்திலே கைதூக்கி ஆதரவளிப்பவர்களுக்கெல்லாம் என்செய்ய வேண்டும் கனம் நீதிபதியவர்களே! 29ஆம் பிரிவுக்கு விரோதமாகக் கொண்டு வரப்பட்டுள்ள சட்டங்களெல்லாம் சட்ட பூர்வமான சட்டங்கள் அல்ல அல்லவா? சட்ட விரோதமான சட்டங்களையெல்லாம் சட்ட பூர்வமான சட்டங்களாக ஏற்றுக் கொண்டு அமுல் நடத்திக் கொண்டு சென்றமை மாபெரும் குற்றமல்லவா? இத் தவறான சட்டங்கள் குற்றமற்றவர்களைக் குற்றவாளிகளாக ஆக்கியுள்ளது அல்லவா? இதில் மிக வேடிக்கையாக இருந்தது என்னவென்றால் அக்காலத்திலிருந்த அரசியல் அறிஞர்களுக்கோ சட்ட அறிஞர்களுக்கோ அரசியல்வாதிகளுக்கோ இவை புரியாமலிருந்ததே.

மலைநாட்டு இந்திய வம்சாவழியினரை இந்தியாவுக்கு மூட்டைகட்டி அனுப்ப வேண்டுமென்று முதல் முதல் கூறிய அக்கொள்கையை முதன் முதல் சிங்கள அரசியல் தலைவர்களிடையே பரப்பிய கொத்தலாவலை தான் பிரதம மந்திரியானதும் அதனை அமுல் நடத்தத் தீவிர பங்கு கொண்டார்.

அக்கால இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேருவுடன் இதனைப் பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடத்தி ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கைதான் நேரு - கொத்தலாவல உடன்படிக்கை. கொத்தலாவல இதனை ஒரு முடிந்த முடிவான ஒப்பந்தமல்ல எனவும் முடிவை நோக்கி அடி எடுத்துச் செல்லும் ஆரம்பப்படி எனவும் கூறியுள்ளார். எனினும் அவ்வொப்பந்தத்தைக்கூட அமுல் நடத்திக்கொள்ள அவரால் இயலவில்லை. எனவே இரண்டாம் முறை ஜவகர்லால் நேருவைச் சந்திக்க வேண்டி இருந்தது. தொடரும்.....

PROMOTERS AUTO CENTRE
புறமோட்டோஸ் ஒட்டோ சென்ரர்
Complete Automotive Services and Repairs by fully Licensed Class 'A' Mechanics
SIVA / சிவா
உங்கள் வாகன திருத்த வேலைகள் அனைத்தையும் மிகச் சிறந்த முறையில் செய்து கொள்ள நகரில் இரு இடங்களில்
Safety Certification
(Inspected & Certifired While You Wait)
DRIVE CLEAN EMISSION INSPECTIONS & REPAIR FACILITY
ஒன்ராரியோ அரசினால் அங்கீகரிக்கப்பட்ட வாகன புகை வெளியேற்றத்தை பரிசோதனை செய்து அது சம்பந்தமான திருத்த வேலை தேவையான பட்சத்தில் உரிமையாளரின் அனுமதியுடன் சரி செய்து சான்றிதழ் வழங்கும் நிலையம்
All Kind Of Insurance Claim Work Done Here. We Pay Your Deductible. Free Inspection & Estimate.
சகலவிதமான காப்புறுதி சம்பந்தமான திருத்தவேலைகள் செய்து தரப்படும். வேலைகளின் மதிப்பீடு இலவசம்.
WHEEL BALANCING - COMPUTERIZED WHEEL ALIGNMENT & AIR-CONDITIONING
MAIN
773 Warden Ave., Unit #8
Scarborough, ON. M1L 4C2
Tel: 416-285-8608
416-752-9797
Fax: 416-285-4326
BRANCH
3 Heritage Road, Unit #2
Markham, ON L3P 1M3
Tel: 905-294-2223
Fax: 905-294-0009



Cisco Training

Cisco Systems

We Produced 18 CCIEs' IN TEN MONTHS

CCNA	$399.	MCSE 2000	$2100
CCNP - Module	$599.	UNIX - SOLARIS	$499.
CISCO PIX Security	$699.	CHECK POINT	$499.
CISCO VPN Security	$699.	MCSE 2000- PROFESSIONAL	$399.
CISCO MPLS	$699.	MCSE 2000- SERVER	$399.
CCIE Theory	$799.	SQL ADMINSTRATION	$399.
VOICE OVER IP	$799.	LINUX	$399.

FREE CCNA or MCP FOR EI RECIPIENTS

The courses are designed by:

Visit Our Lab.....

- ISDN lines, ADSL Line & Frame Relay Circuit
- 60 Cisco Routers- 7500, 4500, 4000, 3600, & 2500
- Catalyst 5500, 5000, 3920 & 1900 Switches

A. HARITH K.
MS Certified Trainer
B.Sc. Eng., MIBM, CNE, MCSE, MCT, CCNP, CCDP,
Cisco Security Specialist,
CCIE #8661

WinNET SYSTEMS

HI-TECH TRAINING & CONSULTING

MISSISSAUGA
905-949-TEST

TORONTO
1200 Eglinton Ave. East, Suite 100, Toronto,
(Don Mills & Eglinton)

SCARBOROUGH
416-299-TEST

Tel: 416-447-TEST (8378)

1-877 3-WINNET www.winnetsystems.com email:teachme@winnetsystems.com

USC-RESP
"சொத்துக்களில் அழியாச் சொத்து கல்வி"
தயாபரன் ஆறுமுகம்
24hrs: (416) 889-3088
Home: (905) 426-6624

உங்கள் நிதித்தேவைகளை நாங்கள் பூர்த்தி செய்வோம்
invis Financial Group
Mortgage
First and Second Residential Mortgage
Commercial Mortgages
Secured Lines of credit
Bad Credit/Bakruptcy
Self Employed
அழையுங்கள் சுமதி
416-427-6102
905-417-1563

S.K.T. JEWELLERS AND TEXTILES LTD.
நகரில் எங்குமே காணமுடியாத நவீன டிசைன் நகைகள் ஆயிரக்கணக்கான தெரிவுகளில்....
மல்கையர், ஆடவர் சிறுவர், சிறுமியருக்கான சகல ஆடை வகைகளும்
WARDEN & LAWRENCE
Tel: 416-615-0197

நோர்விச் யூனியன்
• நம்பிக்கை • நாணயம் • உத்தரவாதம்
முதியோர்களுக்கு உகந்த முறையில் உங்களுக்கு விரும்பிய காப்புறுதி நிறுவனங்களில் காப்புறுதி செய்து தொடுக்கப்படும்.
Call: T. K. THEVARAJAH
Tel : (905) 471-9061 Fax: (905) 471-2202
NORWICH UNION

SHIYARAA FINANCIAL SERVICE
உங்களுக்கு நிதி உதவி தேவையா?
• தனிப்பட்ட நிதி - வியாபார நிதி
கடன் அட்டை - கடன் நிவர்த்தி
வாகன நிதி - வீடு,
வர்த்தக அடமானங்கள்
• புதிய குடிவரவாளர்களுக்கு!
நீங்கள் வேலைசெய்யும் பட்சத்தில் 3000 டொலர் வரை கடனுதவி பெற்றுத்தர முடியும்!
கிருஷ்ணா
416-473-9278

வீடு வாங்க விற்க
உங்கள் வீட்டுப் பெறுமதியை இலவசமாக மதிப்பீடு செய்ய உத்தரவாதமான சேவைக்கு நாடுங்கள்.
Flexible Commission
Century 21 Affiliate Realty Inc.
தனா மாணிக்கவாசகர்
Tel :416-290-1200
Cell:416-728-5772

UTHAYAN WEB:
www.uthayan.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில்
எத்திக்கும் கதிர் வீசும்
வாரச் செய்தி இதழ்
(416) 752-1524
(416) 752-6703

KUGANANTHY RAVINDRAN
B.D.S.M, M.S., F.D.S.R.C.S. (ENG)
குகாநந்தி ரவீந்திரன்
குடும்ப பல்வைத்தியர்
McLevin Road
Nelson Road
McLevin Dental Office
Tapcott Road
1371 Nelion Road, #212., Scarborough
416-281-7555

உதயம்: 346 Chief Editor: R. N. Logendralingam 29.11.2002 FRIDAY

LAW OFFICES
சட்ட சம்பந்தமான பிரச்சினைகளுக்கு நீங்கள் நாட வேண்டியவர்
Yaso Sinnadurai
Barrister & Solicitor, Notary Public
எஸ்காபரோ அலுவலகம்
2100 Ellesmere Rd., Suite 202
Scarborough, ON M1H 3B7
Tel: 416-265-3456
மிசிசாகா அலுவலகம்
Tel: 905-306-1100

எலி, பூச்சிகளின் தொல்லையா?
நாடுங்கள்
Mr. Pest Control
100% உத்தரவாதம்
24 Hrs./7days - week
www.mrpestcontrol.ca
Raja 416-997-9969

என்றும் சுவைதரும் வெதுப்பகம்
KESTREL BAKERY
TAKE-OUT & CATERING
416-744-7279
5010 Steeles Ave. West
(Kipling & Steeles)

கடன் தேவையா!
Personal Loan · Line of Credit · Credit Card Consolidation Loan, Car Loan, Mortgage
மற்றும் கடன் சம்பந்தமான தேவைகளுக்கு அழையுங்கள்.
ரவி 416-562-3815

Email:sv_productions@hotmail.com
The Art of Videography
Weddings TV Production
Entertainment Multi-Camera
3-D ANIMATION JIB ARm (32 Feet crane)
Broadcast Quality NON-LINER EDITING
OFFICE: 416-299-9030
CELL : 416-200-9080
2250 Midland Ave. Unit 25
Scarborough, ON
Production

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய
$35.00
மட்டுமே

செந்தியின்
நிர்வாகத்தில்
ஓர் அச்சுக்கூடம்
உங்கள் அச்சுத் தேவைகளுக்கு
ஆதவன் அச்சகம்
ஸ்காபரோ
(கென்னடி எக்லிங்ரன் சந்திப்புக்கருகில்)
(416) 615-4646

இன்ரநெற் துறையில் இரட்டை நிபுணத்துவம் பெற்ற WinNet அதிபர் ஹரித்

கனடாவில் கொம்பியூட்டர் கற்பித்தல் துறையில் நன்கு அறியப்பட்ட **WinNET** நிறுவனத்தின் அதிபர் திரு. ஹரித் அவர்கள் **CCIE** என அழைக்கப்படும் இன்ரநெற் துறையில் அதியுயர் தகமையை ஏற்கனவே பெற்றிருந்தார். தற்பொழுது இன்ரநெற் பாதுகாப்புத் துறையில் நிபுணத்துவம் பெற்று இரட்டை சான்றிதழ் பெற்ற பெருமையை திரு. ஹரித் அவர்கள் அடைந்துள்ளார். இந்த தகமையை கனடாவில் மூன்று பேர் மாத்திரமே பெற்றுள்ளதாகவும், அவர்களில் ஒருவர் திரு. ஹரித் எனவும் அறிந்து அவரோடு எமது செய்தியாளர் தொடர்பு கொண்டு இந்த சாதனை பற்றி கேட்டபொழுது தனது வெற்றிக்கு தனது நிறுவன பங்காளர்கள் மட்டுமல்ல முக்கியமாக தனது மனைவி, பிள்ளைகளின் ஒத்துழைப்பு தேவைக்கேற்ப இருந்த படியால் இந்த சாதனையை தான் அடையக் கூடியதாக இருந்தது என்று மகிழ்ச்சியோடு தெரிவித்தார். திரு. ஹரித் அவர்களை வாழ்த்த விரும்புவோர் 416-447-8378 என்ற இலக்கத்தை அழைக்கவும். இந்த சாதனையாளரை வாழ்த்துவதில் உதயன், தமிழன் வழிகாட்டி ஆகிய நிறுவனங்கள் மகிழ்ச்சி அடைகின்றன.

மோட்டார் வாகன உதிரிப்பாகங்களுக்கு நம்பிக்கையான இடம்
ME MIDLAND ENTERPRISES INC.
IMPORT & DOMESTIC AUTO PARTS
Tel: 416-446-0249 cell: 647-280-3493
416-446-7632 Fax: 416-446-0827
1530 Warden Ave., Scarborough, Ont. M1r 2S8

"ONE MAN DOES EVERYTHING"
ELECTRICAL - PLUMBING - APPLIANCE & DRAINAGE SERVICES
24 HRS EMERGENCY SERVICE
SANTHA
SINCE 1987
416-200-5470

NKS
DRAPERIES & BLINDS
Custom made
• Vertical Blinds
• Venetian Blinds
• Draperies
• Curtains
• Shutters
FREE
Estimates & Installation
Call: Ketha
Tel: 416-321-6420
Tel: 905-944-0218
210 SILVER STAR BLVD., #825, SCARBOROUGH ON M1V 5J9

GOWRIEMALAN ASSOCIATES
• Accounting • Income Tax
• Real Estate • Finance
• Immigration • Social Services
Tel: 416-742-0449 Fax: 416-744-3011